
பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=


புதுமை : 01 | 28 ஜனவரி 2017 | விதி : 33



தோல்வித் தீயில்
எழுந்த வெற்றி



வாய்திறக்கும்
பெருங்கோடை





கொக்குவில்
ஸ்ரீ இராமகிருஷ்ண
வித்தியாசாலை



விற்காதே
மருத்துவத்தை...!

## ஏறுதழுவல்
## எழுச்சி



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

சயந்தன்

**க**ரையில் வெயில் கடுமையாக இருந்தது. இவர்களை அழைத்துப்பே இரண்டு மினி பஸ்கள் அங்கே நின்ற முன்னொரு காலத்தில் சுடலையில் புறக் கிடத்தி சுட்டுச் சுட்டு விளையா இவனது இப்போதைய பொறுப்பாள இவர்களை வரவேற்றான். அலையரசியி இருந்து இன்னும் சனங்கள் இறங்கிக் கொண்டிருந்தார்கள். எல்லாக் குழந்தை களும் வீறிட்டுக் குழறி அந்தச் சூழலை களேபரப்படுத்தியபடி இருந்தன. சில தாய்மார்கள் "சனியனே கத்தாமல் கிட" என்று குழந்தைகளின் உதடுகளில் விரல்களால் சுண்டினார்கள். குழந்தைகள் மேலும் கத்தத் தொடங்கினார்கள்.

"எவ்வளவு தேறினது" என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டு பொறுப்பாளன் கேட்டான்.

"நாப்பத்தி ஏழு... ஆனா நிறையக் குழந்தைகள்"

"அது பரவாயில்லை... ஆள்கணக்குத் தான் முக்கியம்"

எல்லோரையும் பஸ்ஸில் ஏற்றினார்கள். இரண்டு பஸ்களிலும் தள்ளி அடைந்த பிறகும் இன்னும் இரண்டு மூன்று பேர்களை ஏற்றுவதற்கு இடமிருந்தது.

> இந்திய படைகள் வெளியேறப்போவது கிட்டத் தட்ட உறுதியானது. வன்னிக் காட்டுக்குள் நின்ற பெரிய பெரிய புலிகளெல்லாம் கொழும்பில் ஹில்டன் ஹோட்டலில் தங்கி நின்று பிரேமதாசாவுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தொடர்கதை



# ஆறாவடு

## 32

பொறுப்பாளன் இறங்கிப் போய் அலைய ரசியின் ஓட்டியுடனும், தபாற்கந்தோர் ஊழி யன் ஒருவனுடனும் திரும்பி வந்தான்.

"நீங்களும் இருங்கோ...."

தபால் ஊழியர் சற்று தயங்கினார். "எனக்கு டியூட்டி இருக்கு. கடிதங்கள் கொண்டு போக வேணும் எடுத்துக் கொண்டு வரோணும். உங்கடை ஆட்டங் களுக்கு நிண்டு ஆடேலாது. நான் வர மாட்டன்" என்று அவர் சொன்னார். பொறுப்பாளன் எதுவும் பேசவில்லை, இவனிடமிருந்த துப்பாக்கியை "இஞ்சை கொண்டா" என்று வாங்கி மேலே உயர்த்தினான்.

"அப்படியொரு அவசரமும் இல்லை. கடிதங்களை நாளைக்கும் குடுக்கலாம் தானே" என்றவாறு ஊழியர் பஸ்ஸில் ஏறினார்.

வழி நெடுகிலும் சன நடமாட்டத்தைக் காணவில்லை. கடைகள் அடைக்கப்பட்டி ருந்தன. யாழ்ப்பாணம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்ட்டிக்கப்பட்டுக் கொண் டிருந்தது. வீதியில் தெரிந்த வாகனங்கள், ஒன்றில் இந்திய ராணுவத்தைச் சுமந்து செல்கிற ஜீப்புகளாக இருந்தன அல்லது இப்படி சனங்களை அடைத்துப் போகிற பஸ்களாக இருந்தன. அன்றைய ஒரு நாளில் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பாதைகளும் முற்றவெளிக்கே என்ற வாறான நிலைமை இருந்தது.

முற்றவெளி சனங்களால் பிதுங்கியது, ஆஸ்பத்திரிக்கு போனவர்கள், பள்ளிக் கூடம் போனவர்கள், வேலைக்குப் போன வர்கள், ரியூசனுக்குப் போனவர்கள், நயினாதீவிற்குப் போனவர்கள், கேதீஸ் வரம் போனவர்கள், இப்படி எங்கேயும் போகாமல் "சிவனே" என்று வீட்டில் இருந்தவர்கள் என்று எல்லோரையும் அழைத்து வந்திருந்தார்கள்.

அதிபர் தனபாலன் அங்கிருந்த இந்திய ராணுவ அதிகாரியிடம் சென்று என்னவோ சொன்னார். அவன் கைகளை விரித்து இல்லையென்று தலையாட்டினான். அதிபரின் மனைவி "வாங்கோப்பா பேசாமல்" என்று அவரை பின்னால் நின்று இழுத்தாள்.

முதலில் அதிபர் முற்ற வெளியில் நின்ற ஒட்டு மொத்த மக்களுக்காகவும் பேசினார்.

அவர்களின் அலுவல்களைச் செய்ய விடாமல் இப்படிக் கட்டாயப்படுத்திக் கூட்டி வந்தது பெரும் பிழை என்று அவர் சொன்னார்.

"இதனை நாங்கள் ஏற்பாடு செய்ய வில்லை. எங்களுக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. இதனை நீங்கள் தானே செய்கிறீர்கள்" என்றான் இந்திய அதிகாரி.

பிறகு அதிபர் தன்னோடு நயினா தீவுக்கு புறப்பட்ட பக்கத்து வீட்டுக்காரர் களுக்கும் தனக்குமாகப் பேசினார். கோயிலுக்கு ஒரு நேர்த்தியின் நிமித்தம் செல்வதாகவும் இப்பொழுது விட்டாலும் நாங்கள் குறிகாட்டுவானுக்குப் போய் அங்கிருந்து படகினைப் பிடித்து நயினா தீவுக்குப் போக முடியும் என்று அவர் சொன்னார்.

"இன்று ஹர்த்தால் என்று நினைக்கி றேன். நீங்கள் கோயிலுக்குப் போக முடியாது. மேலும் இப்படி உங்களை வீட்டுக்கு அனுப்புகிற அதிகாரம் எனக்கு இல்லை. இது மக்களாக இணைந்து நடத்திற ஊர்வலம்" என்றான் அதிகாரி.

இறுதியாக அதிபர் தனக்காகவும் மனைவிக்காகவும் குழந்தைக்காகவும் மட்டும் கதைத்தார்.

"சேர், கோயிலுக்குப் போக முடியா விட்டாலும் பரவாயில்லை. குழந்தைக்கு வெயிலில் நின்று உடம்பு தணலாய்க் கொதிக்குது என்னையும் மனைவியையும் மட்டுமென்றாலும் விடுங்கோ... நாங்கள் வீட்டை போறம். இந்தியா ஒரு மனிதாபி மானமுள்ள நாடல்லவா" என்று கெஞ்சி னார்.

அதிகாரி இறங்கி வந்தான். அதிபரும் மனைவியும் வீட்டுக்குப் போகலாம் என்றான், வழியில் எவரேனும் மறித்தால் அவர்களுக்கு தனது பெயரையும் பதவி யையும் சொல்லச் சொன்னான்.

அதிபரது முகத்தில் புளுகம் தலை விரித்தாடியது. அவர் மனைவியிடம் "வெளிக்கிடடி கெதியில" என்றார், போகும் போது பக்கத்து வீட்டு ஆட்களிடம் "நானொரு அதிபர் எண்டும், கவர் மெண்ட் உத்தியோகத்தர் எண்டும் சொன்னான். உடனை வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டான்" என்றார்.

முற்றவெளியில் இனி நிற்பதற்கு இடமில்லை என்றாகிப்போனது. சனங்களின் கைகளில் பதாகைத் தட்டி களை வழங்கி அவற்றை உயர்த்திப் பிடிக்கச் சொன்னார்கள். பள்ளிக்கூட மாணவர்களது கைகளில் இவன் திணித்த தட்டிகளில் கீழ்வரும் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

"இந்திய இராணுவமே! எங்களை அநாதையாக விட்டு விட்டுப் போகாதே!"

"போகாதே போகாதே, இந்திய இராணுவமே!"

"இந்திய இராணுவமே இடைநடுவில் போகாதே!"

"இந்தியா நீயே எமது மக்களின் பாதுகாவலன்"

"இந்தியாவே உனது சேவை எமக்கு இன்னமும் தேவை..."

முற்றவெளியிலிருந்து ஊர்வலம் மெது வாக நகரத் தொடங்கியது. முன்னாள் நீளமான பெரிய பனரில் "இந்திய இராணுவம் திரும்பப் பெறப்படுவதைக் கண்டித்து தமிழ் மக்கள் நடத்தும் மாபெரும் கண்டனப் பேரணி" என எழுதப்பட்டிருந்தது.

லவுட் ஸ்பீக்கரில் "இந்தியா..." என்று கத்தினார்கள். பின்னால் சனங்கள் சுரத் தில்லாமல் "வாழ்க" என்று கத்தினார்கள். பிறகு "பிரபாகரன்" என்று கத்தினார்கள். அதற்கும் சனங்கள் "வாழ்க" என்றே கத்தி னார்கள். அப்பொழுது ஊர்வலம் ச ற்று சலசலத்தது. பிறகு லவுட் ஸ்பீக்கரில் "பிரபாகரன்" என்று கத்தி "ஒழிக" என்றும் அவர்களே எடுத்துக் கொடுத்தார்கள்.

பின்னால் நின்ற சனங்களுக்கு இந்திய இராணுவமா?, பிரபாகரனா? என்பதெல் லாம் கேட்கவில்லை. அவர்கள் தம் பாட் டுக்கு ஒரு ஒழுங்கில் "வாழ்க" என்றும் "ஒழிக" என்றும் கத்திக் கொண்டு வந்தார்கள். இதனால் சிலவேளைகளில் பிரபாகரன் வாழவும், இந்தியா ஒழியவும் வேண்டியேற்பட்டது.

பேரணியின் முடிவில் கண்டனக் கூட்டமும் நடந்தது. பாடசாலை ஆசிரியர்கள், கோயில் ஐயர்கள், சேர்ச் பாதிரிகள் எனப் பலரும் இந்திய இராணுவத்தின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னார்கள். முடிவில் "ஈழத் தமிழர்களுக்கு சுபீட்சமான ஒரு முடிவைப் பெற்றுக் கொடுக்கும் வரை இந்தியா தனது படைகளை வாபஸ் வாங்கக் கூடாது" என்று முடித்தனர். இப்படியாக இரவு தொடங்கியதும் ஊர்வலம் முடிந்தது. சனங்கள் திரும்பவும் தங்களை ஊர்களுக்கு கொண்டுபோய் விடும்படி ஏற்பாட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். "வீடுகளுக்கு நடந்தே போகலாம்" என்று அறிவுறுத்தப்பட்டது.

இவனும் தோழர்களும் முகாமுக்குத் திரும்பினார்கள்.

அடுத்து வந்த காலங்கள் பதற்றம் மிகுந்தவையாக இருந்தன. இவனது பொறுப்பாளர்கள் பேயறைந்ததைப்போல திரிந்தார்கள். இந்தியப்படைகள் வெளி யேறப் போவது கிட்டத்தட்ட உறுதியானது. வன்னிக் காட்டுக்குள் நின்ற பெரிய பெரிய புலிகளெல்லாம் கொழும்பில் ஹில்டன் ஹோட்டலில் தங்கி நின்று பிரேமதாசாவுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் தமிழ்த் தேசிய இராணுவத்தை சேர்ந்த பலரைப் போட்டுத்தள்ள புலிகள் தொடங்கியிருந்தார்கள். அவர்களில் தேவபாலுவும் ஒருவன்.

அவன் வீட்டுக்குப் போயிருந்த போது அது நடந்தது. அன்றைக்கு அவனது குழந்தையின் பிறந்தநாள். விடிய ஆறு மணிப் பொழுதில் அவன் வீட்டுக்குப் புறப்பட்டான். குழந்தையை முதுகில் சுமந்து ஒரு யானையைப் போல தேவ பாலு தவழ்ந்து விளையாடிக் கொண்டி ருந்த எட்டு மணிவாக்கில் வெளிப் படலையை இரண்டு இளைஞர்கள் தட்டினார்கள். அதற்கு சற்று நேரம் கழித்து அவர்கள் தேவபாலுவையும் தட்டினார்கள்.

படலையடியில் துப்பாக்கிகளோடு அவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே குளித்து முடித்து முற்றத்தில் துளசியைச் சுற்றியபடி நின்ற மனைவி பெருங்குரலில் ஒப்பாரிவைக்கத் தொடங்கியிருந்தாள். தேவபாலு குழந்தையை இறக்கிவிட்டு கதவைத் திறந்து கொண்டு முற்றத்துக்கு வந்தான். பின்னாலேயே குழந்தையும் "ப்பா ப்பா" என்றபடி தவழ்ந்து வந்தது.

(வலிகள் இன்னும்...)

# தோல்வித் தீயில் எழுந்த வெற்றி

## மும்முனைக் கரும்புலித் தாக்குதலும் படிப்பினைகளும்

| தமிழரசன்



**1998** ஈழத்தமிழர்களின் விடுதலைப் போரியல் வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டு. விடுதலைப் புலிகளின் போர்த் திறனை போரியல் வல்லுநர்கள் வியக்கத் தொடங்கியதன் ஆரம்ப காலமும் இதுதான்.

1996 ஆம் ஆண்டு 'சத்ஜெய' நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரை இராணுவம் கைப்பற்றியது. தொடர்ந்து யாழ்ப்பாணத்தைத் தரைவழிப் பாதையுடன் இணைக்கும் பொருட்டு ஏ-9 வீதியை கைப்பற்றுவதற்காக 'ஜெயசிக்குறு' பெரும் சமரை இராணுவம் தொடங்கியது. 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை ஆரம்பித்த சில நாட்களிலேயே தாண்டிக்குளத்தில் இருந்தும் ஏ-9 பாதையை அண்மித்ததாக இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

**ஆட்லறிகளே தடைக்கல்**

இந்த நிலையில்தான் தங்களின் கோட்டையான கிளிநொச்சி நகரை மீண்டும் கைப்பற்ற புலிகள் தயாராகினர். ஆனால் இதற்கு ஆனையிறவு, இயக்கச்சி படைத்தளங்களில் இருந்த ஆட்லறிகள் பெரும் தடைகளாக இருந்தன. கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள இராணுவத்துக்கு சூட்டாதரவு வழங்கும் ஆட்லறிகளை அழித்தாலே "கிளிநொச்சி நகரம்" இலகுவாக வீழும் என்ற நிலையில், ஆட்லறிகளையும், அவற்றின் கட்டளைப் பீடத்தையும் அழிக்க புலிகளின் சிறப்பு வீரர்களான கரும்புலிகள் களமிறங்கினர்.

'ஆனையிறவு, இயக்கச்சி ஆட்லறித் தளங்கள் கூட்டுப்படைத் தளம், கிளிநொச்சி கட்டளைத் தலைமையகம்' என 3 இலக்குகளை நோக்கி நகர்ந்த கரும்புலிகள் அணிகள் பெப்ரவரி முதலாம் திகதி தங்கள் தாக்குதலை தொடங்கினர். தங்களின் மையப்பகுதிக்குள் தொடங்கிய இந்தத் தாக்குதலை எதிர்பாராத இராணுவத்தினருக்குப் பெரும் அதிர்ச்சி அலை ஏற்பட்டது.

**வெற்றியைத் தொட்ட பெண் கரும்புலிகள்**

ஆனையிறவுத் தளத்துக்குள் நுழைந்த நால்வர் அணி தாக்குதல் தொடுத்த அதேசமயம் இயக்கச்சி தளம் மீது 7 பேர் கொண்ட - முழுமையாக பெண்களை மட்டுமே கொண்ட கரும்புலிகள் அணியும் தாக்குதலை தொடங்கியது. இரு பிரதான தளங்கள் மீதும் தொடுக்கப்பட்ட திடீர் தாக்குதல்களால் இராணுவம் குழப்பமும் அச்சமும் அடைந்தது. எனினும் இந்தத் தாக்குதல்களில் புலிகள் எதிர்பார்த்த வெற்றியைப் பெற்றிருக்கவில்லை.

ஆனையிறவு தளத்தின் ஆட்லறிகள் முன்னரே இடம் மாற்றப்பட்டமையால் நால்வர் கொண்ட கரும்புலிகள் அணிக்கு ஏமாற்றமே கிடைத்தது. எனினும் அவர்கள் ஆனையிறவு ஆட்லறித் தளத்தின் கட்டளைப் பீடத்தையும் மினி முகாம்களையும் தாக்கி இராணுவத்திற்கு சேதத்தை ஏற்படுத்தினர். இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய லெப். கேணல் சுபேசன், மேஜர் குமுதன், கப்டன் குமரேஸ், கப்டன் செங்கதிர் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இயக்கச்சி ஆட்லறித் தளத்தை தாக்கிய பெண்கள் கரும்புலி அணி வெற்றிகரமாக தாக்கி அங்கிருந்த ஆட்லறிகளை சேதப்படுத்தியதுடன், கட்டளைப் பீடத்தையும் அழித்திருந்தனர். இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஆஷா உட்பட மேஜர் ஜெயராணி, மேஜர் மங்கை, கப்டன் நளா, கப்டன் தனா, கப்டன் உமையாள், கப்டன் இந்து ஆகிய கரும்புலிகள் தம் இனத்திற்காக காற்றுடன் கரைந்து போயினர்.

இதேவேளையில் கிளிநொச்சி நகரின் கட்டளைப் பீடத்தின் மீது தாக்குதல் நடத்தச் சென்ற கப்டன் நெடியோன், கப்டன் அருண் ஆகிய கரும்புலிகள் விபத்து ஒன்றில் சிக்கி வீரமரணம் அடைந்தமையால் இலக்குத் தவறியது.

**தோல்வியும் பாடமே**

புலிகள் தொடுத்த மும்முனைத் தாக்குதலில் 2 நடவடிக்கைகள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. இத்தாக்குதல்களுக்கு மறுநாள் பரந்தனை ஊடுருவி தாக்க முயன்ற புலிகள் அணியும் எதிர்பாராத காரணங்களால் தோல்வியடைந்தது. ஆனையிறவில் வீழ்த்தப்படாத ஆட்லறி தளமும், அதீத படைப் பெருக்கமும், கரும்புலித் தாக்குதலை தொடர்ந்து இராணுவத்துக்குக் கிடைத்த குறுகிய இடைவெளியும், கிளிநொச்சி கட்டளை தலைமையகம் மீதான தாக்குதல் தோல்வியாலும் கிளிநொச்சி நகரை விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ள முடியவில்லை.

ஆனால் கிளிநொச்சியின் சில பிரதேசங்கள் புலிகள் மீண்டும் வசமாகின. இருந்தாலும் இந்தக் களம் 13 கரும்புலிகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட புலி வீரர்களை காவு கொண்டது. தாயகக் கனவுடன் சாவைத் தழுவிய அந்த வீரர்களின் தியாகங்கள் வீண் போகவில்லை. ஓயாத அலைகள் -2 இன் மூலம் கிளிநொச்சி நகரமும் தொடர்ந்து ஆனையிறவுப் பெருந்தளமும் வீழ்ச்சி கண்டன. இந்த வெற்றிச் சண்டைகளுக்கு எல்லாம் பலமாக அமைந்தது இந்தக் கரும்புலித் தாக்குதல்களே. ஏனெனில் இதன் மூலம் தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்த புலிகள் ஆனையிறவுச் சமரின் போது கரும்புலிகள் அணிகள் மூலம் படையினரின் ஆட்லறித்தளங்களை வெற்றிகரமாக தாக்கியழித்து , உறுமலோடு ஆனையிறவில் பாய்ந்து புலிக்கொடியை ஏற்றினர். •



புதுமித்




**A.R.Rahman** @arrahman

I'm fasting tomorrow to support the spirit of Tamilnadu!

**RJ Balaji** @RJ_Balaji

ஜல்லிகட்டு நடத்தினா என்ன தப்பு ?
#LetsDoJallikattu

**Vijay Sethupathi** @ActorSethupathy

#TNneedsJALLIKATTU Support All DEAREST Fans & Friends & Social Medias!! Keep Support & #SaveJallikattu !!! RT&SPREAD

**Mahesh Babu** @urstrulyMahesh

#Jallikattu is the spirit of Tamil Nadu - bold and fearless.

**Vivekh actor** @Actor_Vivek

தமிழ்நாட்டில் இதுவரை ஒரு
அலங்காநல்லூர !- ஆனால் இன்று
தமிழ்நாடே ஒரு "அடங்கா நல்லூர்"
save jallikattu support jallikattu

**Kamal Haasan** @ikamalhaasan

ராட்டையை சின்னமாக்கி முன்பு
ஒரு அறப்போராட்டம் வென்றது.
இன்று மாட்டைச் சின்னமாக்கி
நடக்கும் அறப்போராட்டமமும்
வெல்லும். ஊக்கமது கைவிடேல்.

**P. Samuthirakani** @Samuthirakani

கோவை போராட்டகாரர்கள் உணவு
தேவைக்கு தொடர்பு கொள்ளவும்
9786100581
9790519506
#JusticeforJallikattu #AmendPCA #coimbatore

**Pandiraj** @pandiraj_dir

இந்த உரிமைக்குரல்
ஜல்லிக்கட்டுகு மட்டுமில்லை!
விவசாயத்திற்கும் தான்!
பீட்டாவுக்கான எச்சரிக்கை
மட்டும்மில்லை !
நோட்டா வுக்கான அறிகுறியும்தான்

**G.V.Prakash Kumar** @gvprakash

நாளை காலை 6:30 க்கு
என் தமிழ் சொந்தங்களோடு
ஆத்தூரில்
ஏறு தழுவுதல் போட்டியில் கலந்து
கொள்கிறேன்.
கொம்பு வச்ச சிங்கங்டா.களத்தில்
சந்திப்போம்

**Madhan Karky** @madhankarky

அமைதியாய் போராடி வெல்ல
முடியும் என்று உலகுக்கு மீண்டும்
காட்டிய இளைஞர்களை
வணங்குகிறேன். மொழியை
தேசத்தை இதைவிட
பெருமைபடுத்த முடியாது.

**karthik subbaraj** @karthiksubbaraj

பொங்கல் பொங்க செய்வோம்
விவசாயம் தழைக்க செய்வோம்
ஏறுதழுவச் செய்வோம்
PETAவிரட்ட செய்வோம்
தமிழனாயிருக்க எதுவும்
செய்வோம்!!
#IsupportJallikattu

## கடந்தவார சமூக இணையத் தரவரிசை

# பேஸ்புக் போராளிகளும் ஜல்லிக்கட்டுப் போராட்டமும்



கடந்த வாரம் முழுவதும் பேஸ்புக் போராளிகளுக்கு பெரும் கொண்டாட்ட வாரம்தான். ஜல்லிக்கட்டுக்கு விதித்த தடையை நீக்கக்கோரி மெரீனாவில் மாணவர்கள் பற்ற வைத்த புரட்சித் தீயால் தமிழகமே பற்றி எரிந்தது. மாணவர்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக ஈழத்தின் பல பாகங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன.

சமூக வலைத்தளங்களில் இந்தப் போராட்டம் குறித்துப் பேசாதவர்களே இல்லை எனலாம். சாதாரண விடயங்களுக்கே சும்மா... கொதித்தெழுந்து விளாசித் தள்ளும் பேஸ்புக் போராளிகள் வழமையை விட உற்சாகமாகப் பொங்கித் தள்ளினர்.

ஜல்லிக்கட்டு விவகாரம் சூடு பிடிக்க ஆரம்பித்ததுமே பேஸ்புக் போராளிகள் தங்களின் வழமையான பாணியில் புரொபைல் படங்களாக காளை மாடுகளை வைத்தார்கள். சில எல்லாம் தெரிந்த பேஸ்புக் போராளிகள் ஜல்லிக்கட்டு பற்றி அமெரிக்காவின் ரோடியோ காளைகளை தங்கள் புரொபைலாக மாற்றி வைத்ததுதான் வேடிக்கை.

எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும் யாரை கழுவி ஊத்தலாம் என்று பார்த்துக்கொண்டிருந்த மீம்ஸ் உருவாக்குநர்களும் மோடி, பொலிஸ், பன்னீர் செல்வம், சசிகலா, ஸ்டாலின் என்று பலரையும் மரண கலாய் கலாய்த்தார்கள்.

தொடர்ந்து, போராட்டக்காரர்களை கலைக்கும் பொலிஸார், அவர்களை தாக்கும் வீடியோக்கள், புகைப்படங்களும் சமூகவலைத் தளங்களில் நிறைந்து வழிந்தன. பொலிஸ்காரர் ஒருவர் வீசிய கல்லை பலகையை துடுப்பாக்கி எதிர்கொண்ட ஒருவரின் படம் வைரலாகியது. அதனை இந்திய, இலங்கை கிரிக்கெட் அணிகளில் சேர்க்குமாறும் ஒப்பிட்டும் மீம்ஸ்களும் பறந்தன.

சீரியஸான பேர்வழிகள் ஜல்லிக்கட்டு தமிழனின் வீரம் என்றும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தும் தங்கள் பதிவுகளை பதிந்தனர்.

சமூக வலைதள போராளிகள் முழுவரினதும் கவனமும் ஜல்லிக்கட்டு, போராட்டம் என்பவற்றின் மீதே குவிந்திருந்தால் இந்த வாரம் மூன்றிடங்களும் இவற்றுக்கே வழங்கப்படுகின்றது.












## இந்தவார மீம்ஸ் (Meme)



புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# விரைவு நீதியே வேண்டும்

மீண்டுமொரு படுகொலை யாழ்ப்பாணத்தின் பிடரியில் அடித்ததைப் போல நிலைகுலைய வைத்துள்ளது. பெயரிலேயே 'காவல்' என்பதை தாங்கி நிற்கும் ஊர்காவற்றுறையில் 7 மாதக் கர்ப்பிணிப் பெண்ணொருவர், தனித்து இருந்த சமயத்தில் அடித்தும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். வித்தியாவின் கொலை, பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொலை என்பவற்றுக்கு அடுத்து பெரும் கதையாடலாக இந்தக் கர்ப்பிணிப்பெண்கள் படுகொலை விடயம் பேசப்படுகின்றது.

என்னதான் எமது சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் ஊறிக் கிடந்த காலத்தில் கூட, கர்ப்பிணி என்றால் தனிக் கவனிப்பு உண்டு. அவள் தனக்குள் இன்னொரு உயிரையும் சுமக்கிறாள் என்பதால் எல்லோரும் கர்ப்பிணிகளை நோகாமல் பார்த்துக் கொள்வார்கள். கர்ப்பிணிப் பெண்கள் உள்ள வீடுகளில் எல்லாவற்றிலும் அவளுக்குத்தான் முன்னுரிமை. அவள் ஆசைப்படும் எதையும் கொண்டுவந்து காலடியில் போட்டுவிட்டுத்தான் மறுவேலை. என்னதான் பஸ்களில் சன நெரிசலாக இருப்பினும், 'கர்ப்பிணிகளுக்கு மட்டும்' என அடையாளப்படுத்தப்பட்ட ஆசனங்களில் வேறு கர்ப்பிணிகள் இருந்தாலும் மற்றைய ஆசனக்காரர்கள் கர்ப்பிணி களைக் கண்டவுடன் தாமாகவே எழுந்து இடம் கொடுப்பார்கள். இவையெல்லாம் வெளிப்பார்வைக்கு சாதாரண விடயங்களாகத் தோன்றினாலும் உள்ளார்ந்த ரீதியாக எமது சமூகத்தின் பண்பாட்டு மனவோட்டத்தில் கர்ப்பிணிகளுக்கான இடம் உயர்வானதாகவே இருந்தது: இருக்கின்றது என்பதன் சுட்டிகளே.

ஆனால் அப்படிப்பட்ட கர்ப்பிணி என்றும் பார்க்காமல்- ஊர்காவற்றுறையில் பொன்னாசையால் - ஒரு பெண் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளாள். எத்தனை கனவுகளை அவளும் அவள் குடும்பமும் சுமந்திருக்கும்? காலையில் வேலைக்கு சென்ற கணவனும், பள்ளிக்குச் சென்ற சென்ற குழந்தையும் அவளை இப்படி குதறப்பட்ட பிணமாகப் பார்க்கையில் எப்படித் துடித் திருப்பார்கள்? அழகிய கனவுகளால் சூழப்பட்ட ஆனந்திப்பின் வாழ்வொன்றை கணநேரத்தில் அதுவும் அற்ப பொன்னுக்காக சிதைக்க எப்படி அந்த அரக்கர்ளுக்கு மனம் வந்திருக்கும்?

கோழைத்தனம் கொண்ட சமூக விரோதிகளால் எப்போதும் பெண்களே இலக்கு வைக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களை தாக்குவதும், கொல்வதும் சுலபம். பெண்களின் உடலியல் அப்படிப்பட்டது. அதுவும் ஏழுமாதக் கர்ப்பிணியைக் கொல்வதற்கு அவர்களுக்கு பெரிய எதிர்ப்பு ஏதும் அவளிட மிருந்து கிட்டியிருக்காது. மிகச் சுலபமாக இரையைக் கௌவியிருக்கும் அந்த மிருகங்கள். வித்தியாவுக்கும் புங்குடுதீவில் இதுதான் நடந்தது.

பெண்கள் மீதான இப்படியான சமூகவிரோத கொலையாட்டங்களை தடுக்க இருவழிகள் உடனடியாக அவசியமாகின்றன. ஒன்று சுயபாதுகாப்பு. பெண்கள் தனித்திருக்கும் சந்தர்ப்பங்களை இயன்றளவு தவிர்த்தல். இயலாத பட்சத்தில் வெளியார் இலகுவில் உள்நுழையமுடியாதபடி வீட்டின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். முன் பின் தெரியாதோரை பெண்கள் தனித்திருக்கும் சமயத்தில் வீட்டினுள் நுழையவிடாதிருக்க வேண்டும். குறைந்த பட்சம் இத்தகைய சுய பாதுகாப்பு பெருமளவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கும்.

இரண்டாவது, பெண்கள் மீதான வன்முறைகள் பற்றிய வழக்குகளை நீதித்துறை இழுத்தடிக்காமல் விசாரித்து, குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனைகளை வழங்கவேண்டும். இது குற்றம் செய்பவர்களிடத்தே அச்சத்தை உண்டு பண்ணி, இனிவரும் காலங்களில் இத்தகைய குற்றங்களில் ஈடுபடாமல் இருக்கச் செய்யும். நீதி வழங்குவதில் பாரபட்சம், இழுத்தடிப்பு என்பன இருக்கக்கூடாது. சேயா என்ற சிங்களச் சிறுமியின் கொலைக்கு கொடுக்கப்பட்டதைப் போல விரைவாக வழங்கப்படும் நீதியே காத்திரமான சமூக மாற்றத்தை ஏற்படுத்தும். மாறாக வித்தியாவின் கொலைவழக்காக நீதி இழுபடுமானால் அது ஒருபோதும் பெண்கள் மீதான வன்முறைகளைக் குறைக்க உதவப்போவதில்லை.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# வவுனியா உண்ணாவிரதப் போராட்டம் இன்னொரு நகர்மேகமா?

ப.தெய்வீகன்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இணைந்து வவுனியாவில் மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் என்றும் அழுத்தி கூறப்படுகிறது. தமிழர் தரப்பிலிருந்து இந்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படவிருந்த முதலாவது போராட்டமாகிய "எழுக தமிழ்" மட்டக்களப்பில் நிகழ முன்னர் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்திருப்பது அரசியல் தரப்புக்கள் எதையும் இனி நம்பிப்பயனில்லை என்ற பாதிக்கப்பட்ட மக்களின் முடிந்த முடிவுகளின் விளைவாகவே பார்க்கவேண்டியுள்ளது.

அதைவிட, தமிழகத்தில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டு போராட்டத்துக்கு ஆதரவாக ஈழத்திலிருந்து பொங்கி பிரவாகித்த பலரது ரோச நரம்புகளை சுண்டி பார்க்கும் விதமாகவும் இந்த போராட்டம் அமைந்துவிட்டதால் பொதுத்தளத்தில் தங்களது நேர்மைத் தன்மையை நிரூபணம் செய்வதற்கும் இந்த காணாமல் ஆக்கப்பட்டோ ருக்கான போராட்டத்தில் அவர்கள் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவுகளை சமூக வலைத்தளங்களில் கடந்த சில நாட்களாகக் காணக்கூடியதாகவும் உள்ளது.

நான் இங்கு கூறப்போகும் விடயம் பலருக்கு கசப்பான செய்தியாக - அல்லது குதர்க்கம் மிகுந்த கருத்தாக - அமையலாம். ஆனால், இதுவே தாயகத்தில் இடம் பெற்ற போராட்டங்கள் குறித்த பொது மக்களது பட்டறிவாக காணப்படுவதால் இது குறித்து இப்போது சற்று விசாலமாக உரையாடுவது இங்கு பொருத்தமாக இருக்கும்.

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மக்கள் போராட்டங்கள் எனப்படுபவை ஆளும் தரப்புக்களுக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாகவே இருந்ததில்லை. இது கடந்த ஏழாண்டு காலத்தில் நாங்கள் அனைவரும் பார்த்து புளித்துப்போன தொரு விடயம். அது சிறிலங்கா அரசு தரப்புக்கு மாத்திரமல்ல இந்திய தரப்புக்கும்கூட இன்று வரை மிகவும் சர்வ சாதாரணமான ஒன்று. தியாகி திலீபன், அன்னை பூபதி போன்ற அதி உன்னத மான போராட்டங்களை மேற்கொண்டவர்களின் கோரிக்கைகளையே இன்றைவரைக்கும் நிறை வேற்றாமல் அந்த தியாகச் செம்மல்களை 'சிம்பிளாக' சாகடித்துவிட்டு எந்தவித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் ஈழத்தமிழர்களுடன் கைகுலுக்கி விளையாடிக்கொண்டிருக்கும் "நட்பு சக்தி" தான் இந்தியா. அதற்கு பிறகு ஈழத்தில் நடைபெற்ற உண்ணாநிலை போராட்டங்கள் எல்லாம் வெறும் நகர் மேகங்களாக மக்களை கடந்து சென்றிருக்கின்றனவே தவிர, இந்த போராட்டங்கள் அனைத்தும் உறுதி மொழிகளை தவிர வேறு எதனைய்யும் பெற்றுக்கொண்டதில்லை.

ஆக, "பொங்கு தமிழ்", "எழுக தமிழ்" முதற் கொண்டு அறவழியில் முன்னெடுக்கப்படும் மக்கள் போராட்டங்கள் அனைத்தும் இன்று "அரசியல் போராட்டங்கள்" என்ற தகுதியை மாத்திரமே பெற்றிருக்கின்றன. ஆம்! அரசியல் போராட்டங்கள்தான் முன்முடிவுகளை ஏற்கனவே தெரிந்து வைத்துக்கொண்டு ஒப்புக்கு சப்பாணி கட்டும் பண்புடையவை.

"நாங்கள் போராட்டம் செய்வோம்" ஏதாவது ஒரு புள்ளியில் உறுதிமொழிகளுடன் எழும்புவோம். எழும்ப மறுத்தால் அடிப்பார்கள். அதனை செய்தியாக வெளிப்பிதுக்கிவிட்டு குறைந்த பட்ச சேதாரத்துடன் எழும்புவோம். இடையிடையே அரசியல்வாதிகள் வந்து "மானே தேனே" என்றுபோட்டு அந்த போராட்டத்தை கொஞ்சம் ஜனரஞ்சகமாக ஊடகங்களில் அள்ளித்தெளித்துவிட்டு போய் விடுவார்கள். மறுபடியும் கொஞ்சக் காலத்துக்கு பிறகு மீண்டும் தொடங்குவோம்''

மக்கள் ஆர்ப்பாட்டங்களை - உண்ணாவிரதப் போராட்டங்களை - ஆரம்பிப்பவர்கள் மற்றும் ஒழுங்கமைப்பாளர்கள் ஆகியோரது செல்நெறி கடந்த காலங்களில் இப்படித்தான் நகர்ந்து முடிந்திருக்கிறது. அரசியலில் இது



மிகவும் வசதியான ஒரு அணுகுமுறை. பாதிக்கப்பட்ட மக்களை உற்பத்திப் பொருட்களாக பயன்படுத்தி ஒரு குறுகிய காலத்துக்கு சாகுபடி செய்கின்ற நாறல் விவசாயம். இதில் எந்த பயனையும் அறுவடை செய்யமுடியாது.

தமிழகத்தில் அண்மையில் நடந்து முடிந்த போராட்டம்கூட இதுபோன்ற ஒன்றே ஆகும்.

வெற்றியை இலக்காகக்கொண்ட மக்கள் போராட்டங்கள் எனப்படுபவை பல முனைகளில் மேற்கொள்ளப்பட வேண்டியவை. அரசு எதிர்பார்க்காத புள்ளிகளில் அடித்து வலியை ஏற்படுத்தவேண்டியவை. அதன் வீரமும் வீரியமும் பதாகைகளில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களுக்குள் மாத்திரம் அடக்கிவைத் திருக்கப்படுபவை அல்ல. அதற்கு அப்பால் ஆளும் தரப்புக்களை நிலை குலையைச்செய்து அவர்கள் தங்கள் நிலையிலிருந்து இறங்கிவரச் செய்கின்ற கனதிமிக்கதாக அமைய வேண்டும். இந்த ஒரே போராட்டத்திலேயே கணிசமானளவு வெற்றியை பெற்றுக்கொள்ளவேண்டும். அடுத்த கட்டமொன்றுக்கு நகரவேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டால் அந்தப்போராட்டத்தை, விட்ட இடத்திலிருந்து தொடரக்கூடியதாக இருக்கவேண்டுமே தவிர, மீண்டும் மீண்டும் ஆரம்பித்திலிருந்து தொடங்கி அரசாங்கத்துடன் கபடி ஆடிக்கொண்டிருக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# வாய் திறக்கும் பெருங்கோடை

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



கதிரெடுத்துப் புதிர் உண்ணும் தைப் பூச நாள் எப்படி இருக்கப்போகிறது என்று யாருக்குமே தெரியவில்லை. மழையில்லை என்று தலையிலே கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். விவசாயம் படுத்தால், விவசாயிகளின் வயிறு மட்டும் காயாது, எல்லோருடைய வயிறும்தான் காயும். இந்த ஆண்டு, மழை வீழ்ச்சி போதாது. வரட்சி நம்முடைய நிலத்தை மட்டுமல்ல, எங்கள் நாக்கிலும் ஏறப்போகிறது. தாகம், தொண்டைக்குழியில் தீயை மூட்டுவது நிச்சயம். வயல் வெளிகளும் புல்வெளிகளும் ஒரு போதுமே இல்லாத மாதிரி, தை மாதத்திலேயே வாடத் தொடங்கி விட்டன. சில இடங்களில் பச்சை வதங்கி, மஞ்சளாகிக் காய்ந்து கொண்டிருக்கின்றன வெளிகள். இப்படியே போனால், ஆடு, மாடுகள் எல்லாம் எதிர்வரும் கோடையில் தெரு நீளத்துக்கு அல்லது வெளிகளில் விதியை முடித்துப் படுத்து விடும். பிழைக்க வழியில்லாமல், பஞ்சம் பெருத்து, சனங்களை உலைக்கப்போகிறது.

சனங்கள் மழையை வேண்டிக் கொடும்பாவி எரிக்கிறார்கள். ஊரெங்கும் பொங்கலும் குளிர்த்தியும் நடக்கின்றன. குடை பிடித்துக் கொண்டு ஊர்வலமாகப் போனால், மழை பெய்யும் என்று கடந்த வாரம் இரணைமடுக்குளத்தின் அருகே குடை ஊர்வலத்தில் வரிசையாக விவசாயிகளும் அரசியல்வாதிகளும் போனார்கள். சனங்கள் தண்ணீரில்லாக் குடங்களோடு அலைகிறார்கள். நம்முடைய மண்ணிலே, நம்முடைய காலத்திலே பருவம் பிழைத்து விட்டது. கோடைக்கு முதலே கோடை விளைந்து கிடக்கிறது. இப்படியெல்லாம் ஏன் ஆனது? இயற்கை ஏன் பொய்த்தது? அல்லது ஏன் இப்படிப் பாதகம் செய்கிறது?

வேறொன்றுமில்லை. இயற்கையை நாம் சிதைத்தோம். இயற்கை எம்மைச் சிதைக்கிறது. அவ்வளவுதான்.



## மனிதனின் ஆகாரம் இயற்கையே

மனித வாழ்க்கை இயற்கையின் ஓரம்சம். இயற்கையின் அடித் தளத்திலேயே அது வேர் விட்டுள்ளது. இயற்கையைப் பராமரிப்பதன் மூலமாகவே வாழ்க்கையைச் செழிப்பாக வைத்திருக்க முடியும். வாழ்க்கையின் பாதுகாப்பு என்பது இயற்கையின் பாதுகாப்பிலேயே உள்ளது. முட்டையினுடைய கருவுக்கு அதனுடைய கோது எப்படிப் பாதுகாப்பாக உள்ளதோ அதைப்போலவே நம்முடைய வாழ்க்கைக்குக் கவசம் இயற்கைதான். கருவுக்கிருக்கும் பெறுமதியின் அளவுக்குக் கோதுக்குப் பெறுமதியை யாரும் கொடுப்பதில்லை. ஆனால், வெறுமனே கழித்து விடப்படும் கோது இல்லையென்றால், அதனுடைய கருவுக்குப் பாதுகாப்பு மட்டுமல்ல, பெறுமதியுமில்லை. இந்த எளிய விசயத்தை நம்முடைய முன்னோர் நன்றாகப் புரிந்து வைத்திருந்தார்கள். நம்முடைய முன்னோர் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமுள்ள முந்திய மனிதர்கள் எல்லோரும் இயற்கையை நன்றாக விளங்கி வைத்திருந்தார்கள். அவர்கள் இயற்கையை மனப்பூர்வமாக நேசித்தார்கள். தங்களுக்கு மேலான சக்தி என்று உணர்ந்தார்கள். அந்தச் சக்தி இல்லையென்றால், அது சீற்றமடைந்தால் தமக்கு வாழ்க்கையே இல்லை என்று அறிந்தார்கள். அதனால்தான் இயற்கைக்கு முழுமையாகக் கட்டுப்பட்டார்கள். ஐம்பூதங்களையும் அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தை இயக்கும் சக்தியெனக் கண்டறிந்தனர். ஆகவே இயற்கையைச் சீண்டாமல், தங்களுக்கு அளவாக, இசைவாக அதனைப் பயன்படுத்தினார்கள்.

இப்படிச் செய்து ஒரு ஒத்திசைவில் இயற்கையோடிணைந்து வாழ முற்பட்டனர். அப்படியிருந்தும் இயற்கையின் சீற்றத்தினால் அவர்கள் கடுஞ்சிரமங்களைச் சந்தித்ததுண்டு.

## சீண்டுகிறோம் இயற்கையை

நாமோ இயற்கையை முழுதாகவே சீண்டிக்கொண்டிருக்கிறோம். அதை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் சிதைத்துக் கொண்டிருக்கிறோம். கடற்கரைகள் பாழடைந்து கிடக்கின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. மணலுக் காக ஆறுகள் தோண்டி எடுக்கப்படுகின்றன. மலைகள் சிதைக்கப்பட்டு, கற்களை எடுத்துச் செல்கிறோம். குளங்களையும் வயல் நிலங்களையும் தூர்த்து, மேடாக்கி அவற்றில் கட்டடங்களை எழுப்புகிறோம். அளவுக்கதிகமாகக் கனிய வளங்களை எடுப்பதற்காக நிலத்தை அகழ்ந்து கொண்டிருக்கிறோம். எரிபொருட்களால் காற்றை நாசமாக்குகிறோம். இப்படி எதையெல்லாம் செய்யக்கூடாதோ அதையெல்லாம் தாராளமாகவே செய்து கொண்டிருக்கிறோம். இயற்கை வளத்தைப் பேணுவதற்காக விதிக்கப்பட்டிருக்கும் சட்டங்களையும் வளங்களை அளவாக எடுத்தாள்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நடைமுறைகளையும் மீறி, லாபத்தை மட்டுமே குறியாகக் கொண்டு பலரும் இயங்குகிறார்கள். சுற்றுச் சூழலைப் பேண வேண்டும் என்று சொல்லும் குரல்கள் எங்கோ தொலை தூரத்தில் ஒலிப்பதாக, முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனவே தவிர, அவை பேரியக்கங்களாக வலுப்பெறவில்லை. அந்தக் குரல்களைப் பொருட்படுத்தக் கூடாது என்பதே பலருடைய கவனமும்.

அதிகாரித்திலிருப்போரும் படித்தவர்களும் இயற்கையை அழிப்பதில் இரகசியமாகப் பங்காற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் இவர்களுக்கே அதிகமாக உண்டு. ஆனால், இவர்கள் தான் இயற்கை அழிப்புக்கு இரகசியமாக உடன்பாட்டு அனுமதியை வழங்குகிறார்கள். எல்லாவற்றுக்கும் காரணம், காசு தான். சட்டவிரோதமாகச் செய்யப்படும் இயற்கை வளச் சுரண்டலைச் சட்ட பூர்வமாகச் செய்வதற்கு வழங்கப்படும் உடன்பாட்டு அனுமதியில் தாராளமாகப் பணம் புரள்கிறது. இதைச் சுட்டிக் காட்டும் சமூக ஆர்வலர்கள் ஓரம் கட்டப்படுகிறார்கள். ஊடகங்களின் குரல் பாதிக் கிணற்றைத் தாண்டுவதில்லை. ஒரு பேரலையை எழுப்பக்கூடிய அளவுக்கு எந்த ஊடகமும் இயற்கை வளப் பேணுகையை ஒரு இயக்கமாக உணரும் விதமாகச் செயற்படுத்தியதில்லை. இப்படியிருந்தால் இயற்கையும் இயற்கை வளங்களும் எப்படிப் பாதுகாக்கப்படும்?

## தெரிந்தே செய்யும் குற்றம்

படிப்பறிவற்ற எங்கள் முன்னோர்கள் இயற்கையைத் தாராளமாகப் பேணினார்கள். அவர்களுடைய வாழ்க்கை அமைப்பில் அதிகமாக இயற்கையை அழிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்று யாரும் வாதிடலாம். அது தப்பு. இன்றைய சனத்தொகை, வாழ்க்கை அமைப்பு போன்றவை மாறியுள்ளன என்பது உண்மையே. ஆனால், என்னதானிருந்தாலும் அதற்காக இயற்கையை அழித்துக் கொண்டு வாழ முடியுமா? படிப்பறிவுடைய இன்றைய மனிதர்களுக்கு, எதையும் விஞ்ஞானபூர்வமாக ஆய்ந்தறிய முற்படும் இன்றைய மனதுக்கு, இன்றைய சிந்தனைக்கு இயற்கையின் அடிப்படைத் தேவையைப் பற்றிப் புரியாதா? அதனுடைய அழிவு உண்டாக்கும் பாதிப்பைப் பற்றித் தெரியாதா? இது தெரிந்து கொண்டே செய்கின்ற குற்றம். ஆகவே குற்றத்துக்கான தண்டனையாகவே இயற்கைச் சீற்றத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. உப்பைத்தின்றவன் தண்ணி குடிப்பான். தப்புச் செய்தவன் தண்டனை அனுபவிப்பான் என்று தெரியாமலா சொன்னார்கள்


விவசாயப் பொருளாதாரத்தை அதிகமாக நம்பி வாழும் சமூகமாகவே இலங்கையர்களில் அதிகமானவர்கள் இன்னும் இருக்கிறார்கள். விவசாயம் முற்று முழுதாகவே இயற்கையை நம்பிச் செய்யப்படுவது. விவசாயத்தின் ஆதாரமே இயற்கைதான். ஆனால், இங்கே என்ன நடந்திருக்கிறது? இயற்கை என்ன வாழ்க்கையின் ஆதாரமே சிதைக்கப்பட்டிருக்கிறது. என்றபடியால்தான், கால நிலைகள் மாறி, வெள்ளம் பெருக்கெடுக்கிறது. அல்லது வரட்சி தாண்டவமாடுகிறது. இரண்டிலும் அழிவும் பாதிப்புமே மிஞ்சுகின்றன. இயற்கையின் சமனிலை குலைந்ததன் விளைவே இதுவாகும்.


சரி, இதையெல்லாம் இங்கே பேசித் தான் என்ன பயன்? இதைப்பற்றி எல்லோருக்கும் தெரியுமே. இதைத் தடுப்பதற்கு அல்லது வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு என்ன செய்யலாம்? என்று நீங்கள் கேட்கிறீர்கள். இந்தக் கேள்விக்கான பதில் என்ன என்று உங்களுக்கும் தெரியுமே.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

இலங்கையிலுள்ள அனைத்துப்பல்கலைக்கழக மருத்துவபீடங்களும் ஒன்றிணைந்து SAITM என்ற தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகக் காலவரையறையற்ற பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு ஆதரவு தெரிவித்து யாழ். மருத்துவ பீட மாணவர்களும் களத்தில் இறங்கிப் போராடுவதை, மருத்துவபீட வீதியால் சென்று வருபவர்கள் அவதானித்து இருக்கலாம். எதற்காக இந்தப் போராட்டம்? என்ற மாணவர்கள் தரப்பு தகவல்கள் இங்கு பதிவு செய்யப்படுகின்றன.

# மருத்துவத்தை விற்காதே...!









நேர்காணல்: அ.அனித்

## விஸ்ணுபிரியன்
(4 ஆம் வருட மருத்துவபீட மாணவன் யாழ்.பல்கலைக்கழகம்)



★ நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் வரை, தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் உள்வாங்குதல் நிறுத்தப்படல் வேண்டும்.

★ மருத்துவத்துறை மற்றும் நோயாளர் பராமரிப்புச்சேவை என்பவற்றின் தரத்தினை உறுதிப்படுத்தவும், அவை சார்ந்த விடயங்களை கையாள்வதற்கும், இலங்கை மருத்துவசபை மாத்திரம் எந்தவித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமாகச் செயற்பட வேண்டும்

★ இதுவரை SAITM தனியார் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, இலங்கை மருத்துவ சபையினால் சுயாதீனமான - அவர்களுக்குப் பொருத்தமான - தீர்வு வழங்கப்படல் வேண்டும்.

★ SAITM தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் நிவில் பெர்ணான்டோ வைத்தியசாலை முற்று முழுதாக அரசமயமாக்கப்படுவதுடன், இலங்கை மருத்து சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, அரச மருத்துவ பீடமாக்கப்படல் வேண்டும். என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் மெற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை 16 ஆம் திகதி தொடக்கம் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள், தனியார் கல்லூரிக்கு எதிரான இப்போராட்டத்தினை பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்னால் மேற்கொண்டு வருவதோடு, சமூகத்தின் பல்வேறு நிலைகளிலுமுள்ள மக்களிடம் நேரடியாகச் சென்று தனியார் மருத்துவக் கல்லூரியினால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்படப்போகும் பாதகமான விளைவுகள் பற்றி விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் 2008 ஆம் ஆண்டு SAITM (South Asian Institute of Technology And management) எனப்படும் தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இது 2011 ஆம் ஆண்டு அப்போதைய உயர்கல்வி அமைச்சரை வளைத்துப் போட்டு, "தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவக் கல்வி நிறுவனம்" என எந்தவொரு சட்ட அங்கீகாரமுமின்றி பெயர் மாற்றியமைக்கப்பட்டது. இது இவ்வாறு இருக்கையில் 2009 ஆம் ஆண்டில் இருந்தே இங்கு மருத்துவப் பட்டப்படிப்பிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இவர்களின் மருத்துவக் கல்விக்கான வைத்தியசாலை நான்கு வருடங்களின் பின்னர் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அங்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதனால், மாணவர்களின் நோயாளர்களுடான பயிற்சி சந்தேகத்திற்கிடமாகவே இதுவரை காணப்படுகின்றது.

SAITM பல்கலைக்கழகமானது ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்தே இலங்கை மருத்துவ சங்கம் SLMC (Srilankan Medical Council) ஆனது "SAITM இனால் வழங்கப்படும் மருத்தவ பட்டப்படிப்பை அங்கீகரிக்கவில்லை" என்பதை மக்களிற்கு பல்வேறு பத்திரிகை விளம்பரங்களூடாக அறிவுறுத்தி வந்துள்ள நிலையிலும், அரசியல் செல்வாக்கு மற்றும் பண ஆதிக்கத்தோடும் இவர்கள் தொடர்ச்சியாக மாணர்களை உள்வாங்கினர்.

அத்துடன் இங்கு 2016 ஆம் ஆண்டு முதலாவது மாணவர் அணியினர் பட்டப் படிப்பை நிறைவு செய்தனர்.

இருப்பினும் இலங்கை மருத்துவ சங்கம் SLMC மேற்படி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்காது மறுத்தனர். இந்நிலையில் இவர்கள் இலங்கை மருத்துவ சங்கம் SLMCக்கு எதிராக தங்களிற்கு வேலை நியமனம் கோரி மேல்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர்.

மேற்படி வழக்குக்கான தீர்ப்பானது இம்மாதம் 31 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ள நிலையில் இதுவரை காலமும் இவ் வழக்கின் போக்கானது பெருமளவு SAITM பட்டதாரிகளுக்குச் சாதகமாகவே இருக்கின்றது. இதனால் இதுவரை காலமும் இலங்கை மருத்துவ சங்கம் SLMC இனால் மேற்கொள்ளப்பட்டுவந்த பணியானது நிந்திக்கப்படுவதோடு அதன் எதிர்கால சேவையும் முடக்கப்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

# மாணவர்கள் போர்க்கொடி



## தனுஜா தெய்வேந்திரம்
(3 ஆம் வருட மருத்துவபீட மாணவி யாழ்.பல்கலைக்கழகம்)

இலங்கையின் மொத்த சனத்தொகையில் எறத்தாழ 0.1 வீதம் பேர் மாத்திரமே ஒருகோடியே 20 இலட்சம் ரூபா பணத்தைச் செலுத்தி தனியார் மருத்துவக் கல்லூரியில் தம் பிள்ளைகளைப் படிப்பிக்கக்கூடிய நிலையில் உள்ளனர். ஏனைய 99 வீதம் பேர் சாதாரண வர்க்கத்தினர். அவர்களால் இவ்வளவு பெரும் தொகையைக் கொடுத்துத் தம் பிள்ளைக்களுக்கு மருத்துவக் கல்வியைக் கொடுப்பதென்பதை நினைத்தும் பார்க்க முடியாது. இந்த நிலையில் இதுபோன்று பல தனியார் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குவதற்கு பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்ந்தால் எதிர்கால இலங்கை, தரமற்ற வைத்தியர்களின் எண்ணிக்கையால் நிறைந்திருக்கும். அத்தோடு மருத்துவர்களுக்கான வேலை வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும். இன்றைய நாள் வரையிலும் சிறப்பான தராதரத்துடன் காணப்படும் இலவச சுகாதாரம் மற்றும் இலவசக்கல்வியின் இருப்பை கேள்விக்குறியாகுவதோடு, மருத்துவம் வியாபாரமாக்கப்பட்டுவிடும் அபாயமும் தற்போது உருவாகியுள்ளது.

பாடசாலையில் முதலாம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரைக்கும் கஷ்டப்பட்டு கல்வி கற்று மருத்துவபீடத்திற்குத் தெரிவாகின்றமைதான் வழமை. அத்துடன் பாமரமக்களில் சாதாரண கூலித் தொழிலாளியின் பிள்ளையும், உயர் பதவியில் உள்ளவர்களின் பிள்ளையும் உயர்பெறுபேறை எடுத்தால், எந்த வித பாகுபாடுமின்றி மருத்துவபீடத்திற்குத் தெரிவாகின்றனர். இலங்கை மருத்துவ சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரச மருத்துவ பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கான அடிப்படைத் தகைமை 3 சாதாரணச்சித்திகளாக (3S) இருக்கின்ற போதிலும், பல்கழைக் கழக அனுமதி மட்டுப்படுத்தப்பட்டிருப்பதன் காரணத்தினால் போட்டியின் நிமித்தம் 3 அதிவிஷேட சித்தி (3A) அல்லது விஷேட சித்திகளோடு (B) வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தினுள் உள்வாங்கப்படுகின்றோம். இந்தப் போட்டியில் தவறும் பட்சத்தில் 2 ஆவது, 3 ஆவது வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் 3 பாடத்திலும் சாதாரண சித்திபெற்ற ஒருவர் ஒரு கோடியே 20 இலட்சத்தில் தனியார் கல்லூரியில் மருத்துவம் படித்து வைத்தியராக வர முடியுமென்றால் இது கல்வியை விற்கும் செயற்பாடேன்றே கூற முடியும்.



## ஜி.வைகுந்தன்
(3 ஆம் வருட மருத்துவபீட மாணவன் யாழ்.பல்கலைக்கழகம்)

இலங்கையில் மருத்துவக் கல்லூரியையும், வைத்தியர்களையும் சீர்படுத்துவது இலங்கை மருத்துவ சங்கம் SLMC தான். இலங்கையில் எங்கு மருத்துவக் கல்வியைப் படிக்கலாம் என்பதனை இச் சங்கமே தீர்மானிக்கும். 'பிரைவேட்டாக' மருத்துவம் படிக்க வேண்டுமென்றாலும் இச்சங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட தனியார் கல்லூரியிலேயே படிக்க முடியும். அப்பொழுதுதான் இலங்கையில் மருத்துவராக பணியாற்ற முடியும். SAITM என்னும் தனியார் மருத்துவக் கல்லூரியானது இச்சங்கத்தினால் அங்கீகரிக்கப்படாத கல்லூரியாகும். அத்தோடு இக் கல்லூரியில் கல்விகற்று வெளியேறிய பட்டதாரிகளின் மருத்துவம் தரமில்லையென்ற காரணத்தினாலும், உரிய கல்வியைப் பெறவில்லையென்பதனாலும் அந்தக் கல்லூரியில் கற்று வெளியேறுவோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்படி மாணவர்கள் இலங்கை மருத்துவ சங்கத்திற்கு எதிராக வழக்கினை பதிவுசெய்துள்ளனர்.

அவ் வழக்கின் தீர்ப்பானது இலங்கை மருத்துவ சங்கத்திற்கு ஆதவாக வரவேண்டும், இலங்கையிலுள்ள இலவச சுகாதாரம் மற்றும் இலவசக் கல்வியையும் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவே இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழக மருத்துவ பீடங்களும் ஒன்றிணைந்து இப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

# காட்டின் பாதைகளை மறிக்கும் மக்களின் பாடல்கள் 3



யதார்த்தன்

சரி. யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வருவோம். தமிழில் ஔவைப்பாட்டி சொன்ன ஒரு பழமொழி இருக்கின்றது "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று. எனக்கு யாழ்ப்பாணாத்தில் கோடை காலத்தில் இருக்கச் சுத்தமாகப் பிடிப்பதில்லை. அந்தளவுக்கு நிலப்பரப்புக் காய்ந்துபோய் கிடக்கும். கடற்கரை பக்கம் மட்டும் கொஞ்சம் அழகாய் இருக்கும்.

ஆனால் மாரிகாலத்தில், யாழ்ப்பாணம் ரொம்ப அழகாக இருக்கும், பொதுவாக யாழ்ப்பாணத்தின் நீரியல் வாழ்வு என்பது, நிலத்தடி நீரை அடிப்படையாகக் கொண்டது. மயோசின் சுண்ணப்பாறைகள் யாழ்ப்பாணத்தின் இதயச் சுவர்களாக நின்று மழை நீரைச் சேமிக்கின்றன. ஆனால், இன்று குழாய்க் கிணறுகளைத் தோண்டி அதனையும் நாசப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அது தவிர கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக, "யாழ்ப் பாணத்தில் நீர், பாவனைக்கு ஒவ்வாத நிலையை நோக்கி நகரத்தொடங்கி விட்டது" என்று புவியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாணத்தின் தீவகம் முதலான கரையோரங்களில், முற்று முழுதாகக் கடல் நீர் பிரசாரணமாகி நிலத்தடி நன்னீர் அற்றுப்போய்விட்டது. மத்திய பகுதி நீரில் அரச கூட்டுக் கொம்பனிகளின் கழிவு ஓயில் கலந்தது போக, ஏனைய இரசாயன மாற்றங்களினால் பாதிக்கப்பட்டுமுள்ளன. கண்டிப்பாக இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் நன்னீர்த் தட்டுப்பாடு வரப்போவது திண்ணமாகிவிட்டது. நாம் அதை எதிர்கொள்ள எவ்வளவு தயாராக இருக்கிறோம்? என்ன செய்யப் போகின்றோம்? என்பது கண்முன்னே எழும் பெரும் கேள்வி.

*யாழ்ப்பாணத்தின் நீரியல் நிலைமைகளின் சுற்றுச் சமநிலையை காலம் காலமாக பேணி வந்தவை-*

1. நிலத்தடியில் இருக்கும் மயோசின் சுண்ணாம்புக்கல் தொகுதிகள்.

2. யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியினை ஊடறுத்து ஓடும் நாவற்குழி தொடக்கம் தொண்டமானாறு வரை இருந்த நீர்த்தரவைகள், மற்றும் சதுப்பு நிலங்கள்.

3. யாழ்ப்பாணத்தின் மரப் பல் வகைமைகள். ஆகிய மூன்றுமாகும்.

முன்பு குறிப்பிட்டதைப்போல, யாழ்ப்பாணம் பெரு மரங்களையோ, காடுகளையோ கொண்ட இடமல்ல. அதன் நிலம் பெரும்பாலும் உவர்த் தன்மை வாய்ந்த கரையோரச் சமவெளியைச் சார்ந்தது. எனவே பனை, தென்னை முதலான மரங்கள் அதிகமாயும், அவற்றுடன் சேர்ந்து ஏனைய இடைத்தர மரங்களும் காணப்படுகின்றன. ஆக யாழ்ப்பாணத்தின் நிலத்தின் நீர் சுழற்சியை பேணுவதற்கு அண் சமவெளிக்காடுகளைப் போல, யாழ்ப்பாணத்தின் மரப்பரம்பல் உதவப் போவதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தின் நீர்ச் சமநிலை மற்றும் நில முகாமையில் மரங்களின் பங்கும் முக்கியமானது. குறிப்பாக நீர்த்தரவைகளிலும், கண்டல் நிலங்களிலும் உள்ள நீரை முடிந்தளவு காலத்திற்குத் தேக்கி நிலத்தடிக்கு சுவறச் செய்ய மரங்களின் கூட்டு நிழல் உதவுகின்றது. குருவிக்காடு முதலான சதுப்பு நிலங்களில் பரவியிருக்கும் கண்டல் தாவரங்கள் அதன் பொருட்டே முக்கியமானவையாக இருக்கின்றன.

அதனைப்போல் நீர் நிலைகள், கடற்கரைகளில் மண்ணரிப்பைத் தடுக்க,- யாழ்ப்பாணத்தின் மண்ணரிப்பு அபாயம் இருக்கும் இடங்களில் மரங்கள் தொகுதியாக நடப்பட வேண்டும். குறிப்பாகச் சதுப்பு நிலநீர் பரப்புகளுக்கு அண்மையாக மரங்கள் வளர்த்து எடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் போருக்கு முன்பிருந்த முறையான நீர்ப்பாசனம், போருக்குப் பின்னர் சீர்குலைந்து போய்விட்டது. அது போதாது என்று அபிவிருத்தியின் பொருட்டு அவசரம் அவசரமாக இடப்பட்ட காப்பெட் வீதி வேலைகள், மீதியாயிருந்த அமைப்புக்களையும் சிதைத்து விட்டன. அதனால் தான் 2015 இல் கடற்கரை பக்கத்தில் இருந்தும், நாவாந்துறை போன்ற நீர் கடலில் கலக்கும் இடங்களில் வெள்ளம் வந்து மக்களை அசௌகரியப்படுத்தியது. உலகத்திலேயே கூப்பிடு தூரத்தில் கடற்கரை இருக்க, அதனை அண்டிய மக்கள் குடியிருப்புக்களில் வெள்ளம் தேங்கிய கதையை யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் கண்டேன்.

அடுத்த வாரமும்...

(05 ஆம் பக்க தொடர்ச்சி...)

# வவுனியா உண்ணாவிரதப்...



அது காலத்தை இழுத்தடிப்பதற்கு அரசியல்வாதிகள் மேற்கொள்ளுகின்ற உபாயம். அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மக்கள் போராட்டங்கள் அவ்வாறு இருக்க முடியாது. இருக்கவும் கூடாது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வவுனியா போராட்டம் யாருக்கு அழுத்தம் கொடுக்கப்போகிறது? யாரை அடிபணியவைத்து தனது இலக்கினை அடையப்போகிறது?

குறைந்த பட்சம் தங்களைக்கூட இந்த அழுத்தம் பாதித்துவிடக்கூடாது என்பதற்காக உண்ணாவிரதப்போரட்டத்தின் முதல்நாளே அரசியல்வாதிகள் கொஞ்சம் கொஞ்சமாக பந்தல் பக்கமாக ஆஜராகத் தொடங்கிவிட்டார்கள். அடுத்த கட்டம், முதலமைச்சர் வருவார். அரசாங்கத்தோடு பேசியுள்ளதாக சொல்லி பால் தருவார். அதைக்குடித்துவிட்டு தொடர்ந்தும் "பால் குடிகளாகவே" இருந்து ஏமாற்றப்படும் அப்பாவிகளாக இந்த பாதிக்கப்பட்ட மக்கள் அந்த பந்தலிலிருந்து அகன்று செல்வர். முதலமைச்சர் மட்டுமல்ல சம்பந்தர் - சுமந்திரன் என்று அரசியல் அரிதாரம் பூசியவர்களும் கடந்த ஏழு வருடங்களாக இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். சிறைச்சாலையில் உண்ணாவிரமிருந்த அரசியல் கைதிகளுக்கும் இதுதான் கதி. வெளியில் இடம் பெற்ற பல போராட்டங்களுக்கும் இது தான் விதி.

வவுனியாவிலும் இதுதான் நடக்கப் போகிறதா?

வவுனியாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தை தனியே உண்ணாநிலை போராட்டமாக மாத்திரம் தக்க வைத்துக்கொண்டு போராட்டக்காரர்கள் எந்த பயனையும் பெற்றுக் கொள்ள முடியாது. இந்த போராட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல கிளைகளில் அரசை வளைத்து இந்த போராட்டத்தை நோக்கி இறங்கிவர வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1) உண்ணாவிரதப்பந்தலுக்கு வருகை தரும் அரசியல்வாதிகள் எவரையும் உள்ளே அனுமதிக்காமல் அவர்களை கொழும்பில் சென்று நாடாளுமன்றுக்கு முன்பாகவோ அல்லது ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாகவே உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு பணிக்க வேண்டும். இவர்களுக்கு வவுனியாவிலுள்ள உண்ணாவிரதப் பந்தலில் என்ன வேலை?

2) வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் இந்த போராட்டத்தை விஸ்தீரணம் செய்து பாரிய மக்கள் சக்தியொன்றை நோக்கி திருப்பவேண்டும்.

3) தமிழ் அரசியல்வாதிகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் கோரிக்கைக்கு அரசு இணங்கும்வரை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பு வேண்டாமென்று மெய்ப்பாதுகாவலர்களை திருப்பி அனுப்பவேண்டும். போராட்டத்தில் இறங்கியுள்ள மக்கள் தமிழீழமும் கேட்கவில்லை - சமஷ்டியும் கேட்கவில்லை. - காணாமலாக்கப்பட்ட தங்களின் உறவுகளை கேட்கிறார்கள். அதற்கு பதில் சொல்லாத அரசு அந்த மக்களின் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்கி என்ன கிழிக்கப்போகிறது?

4) எல்லாவற்றுக்கும் மேலாக இந்த போராட்டத்துக்கு முஸ்லிம் - சிங்கள - மாணவர்களை இயன்றளவு இணைத்து இந்த பிரச்சினை இன்றைய நாளில் இலங்கையில் தேசிய பிரச்சினை என்ற வகையில் உண்மையை இடித்துரைக்க வேண்டும்.

இவற்றில் ஒன்றையேனும் செய்தால் சேமம். இல்லையேல், இந்த போராட்டம் தொடர்பில் "பேஸ்புக் லைவ்" அல்லது "வட்ஸ் அப் மெஸேஜ்" ஒன்றை எனக்கும் அனுப்புங்கள். நாலு பேருக்கு நானும் அனுப்பிவிட்டு "சிங்கம் - 3" பார்க்கப் போகலாம்!

# வாரப்பலன்

**மேடம்**
சோர்வு. பணமுடை. காரிய சித்தி. கனவு பலிதம். தேக மெலிவு.

**ரிஷபம்**
தனச் சோர்க்கை. தாகமிகுதி. உயர் பதவி. புதிய தேடல். நிலைமாற்றம்.

**மிதுனம்**
தெய்வ அனுகூலம். மனை விருத்தி. புத்திரரால் செலவு. புதிய உறவு.

**கடகம்**
மனச் சோர்வு. காரியத் தடை. பெண்களால் மேன்மை. புதிய முயற்சி.

**சிம்மம்**
மனச் சோர்வு. வாகன சுகம். கல்வி மேன்மை. நினைத்த காரியத் தடை.

**கன்னி**
ஞாபக மறதி. நற் சிந்தனை. தொலை தூரத் தொடர்பு. வேலைப் பளு.

**துலாம்**
வித்யா விருத்தி. பிறதேச சஞ்சாரம். மகிழ்ச்சி. சிறியோர் உறவு. கலகம்.

**விருச்சிகம்**
தெய்வ தரிசனம். ஞானத் தேடல். பொறுமை. வேலை யாட்கள் சகாயம்.

**தனுசு**
தொழில் முரண்பாடு. ஆலய தரிசனம். பெரியோர் உறவு. பயமின்மை.

**மகரம்**
வீண் அலைச்சல். பொருள் சேர்க்கை. தாய் வழி உறவு. பயிர் பலிதம்.

**கும்பம்**
தனித்த சிந்தனை. தொழில் ஆர்வம். திருமணப் பேச்சு. மனை மகிழ்ச்சி.

**மீனம்**
வீரம். புதிய தொழில் முயற்சி. தர்க்கம். தர்ம சிந்தனை. பசியின்மை.








● வடக்கு விவசாய அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்குரிய சாதனை விவசாயிகளைக் கௌரவிக்கும் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (22.01.2017) அன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.










● வவுனியா மருதோடை அ.த.க பாடசாலையில் தரம் 5 இல் கல்விகற்கும் வறிய மாணவர்களுக்கு வெளிச்சம் அறக்கட்டளையால் ஒருதொகை கற்றல் உபகரணங்கள் 17.01.2017 அன்று வழங்கப்பட்டன.

● பிரான்ஸில் வாழும் சமூக- இலக்கிய- பண்பாட்டு- அரசியலில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள், தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வாசிப்பு மனநிலை விவாத முயற்சி ஆர்வத்துடனும் தொடர்ச்சியான தேடலின் ஊடாகவும் (22-01-2017) அன்று 25 ஆவது வாசிப்பு மனநிலை விவாதத்தின் உரையாடலை நிறைவு செய்தது.



● தோழர் விஸ்வானந்த தேவன் (1952 - 1986) நூல் அறிமுகமும் உரையாடலும் 21.01.2017 அன்று யாழ்ப்பாணம் பொது நூலக கீழ் மண்டபத்தில் நடைபெற்றது.



# அன்புக்குப் பரிசு

குணசீலன் என்ற அரசன் நோய்வாய்ப்பட்டு, பல நாள்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.


அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன், தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன. அவன் மன்னனிடம், "அரசே..உங்கள் உடல் தேற வேண்டுமென்று எங்கள் ஊர் அம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளித்து அனுப்பினான்.


மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப்போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு? என்று கேட்டார். மன்னனோ, அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து நீண்டதூரம் பல நாள்கள் நடந்து வந்திருக்கிறான்.

அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்து மாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

**நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக்கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.**



# வெள்ளை மாளிகை சில தகவல்கள்



★ ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமே வெள்ளை மாளிகை.

★ அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டன் இதனைக் கட்டுவித்தார்.

★ வெள்ளை மாளிகையில் வசிக்காத ஒரேயொரு அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டன் மட்டுமே. மாளிகையின் கட்டுமானம் நிறைவேற முன்னரே அவர் காலமாகிவிட்டார்.

★ அயர்லாந்து நாட்டில் பிறந்தவரான ஜேம்ஸ் ஹோவன் வெள்ளை மாளிகையை வடிவமைத்தார்.

★ 1792 ஆம் ஆண்டு ஆரம்பமான இதன் கட்டுமானப் பணிகள் 1800 ஆம் ஆண்டிலேயே நிறைவுற்றன.

★ இந்த மாளிகையைக் கட்ட முழுமையாகப் பளிங்குக் கல் பயன்படுத்தப்பட்டது.

★ 6 மாடிகள் கொண்ட இந்த மாளிகையில் 132 அறைகள், 35 குளியலறைகள், 412 கதவுகள், 147 ஜன்னல்கள் உள்ளன.

★ அமெரிக்காவின் ஜனாதிபதியின் அதிகாரம் எல்லையற்றது. ஆனால் எந்த ஜனாதிபதியாலும், இந்த மாளிகையின் நிறத்திலோ, வடிவமைப்பிலோ மாற்றம் செய்யமுடியாது.

★ இந்த மாளிகைக்குள் முதன்முதலாக குடிபுகுந்த முதல் ஜனாதிபதி ஜோன் அடம்ஸ். இவர் அமெரிக்காவின் இரண்டாவது ஜனாதிபதி ஆவார்.

★ 1814 ஓகஸ்ட் 24 ஆம் திகதி அமெரிக்காவை கைப்பற்றிய பிரித்தானியர் இந்த மாளிகைக்கு தீ வைத்தனர்.

★ அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதியான தியோடர் ரூஸ்வெல்ட்டே இதற்கு வெள்ளை மாளிகை (white House) எனப் பெயரிட்டர்.

★ அச்சுறுத்தல் நிலவும் காலம் தவிர ஏனைய அனைத்து நாள்களிலும் இந்த மாளிகையைப் பொதுமக்கள் பார்வையிட முடியும்.

★ வருடாந்தம் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வெள்ளை மாளிகையை பார்வையிடுகின்றனர்.

பெரியாரின் வாழ்வில்...!



# சிறந்த உரை?

ரைட் சகோதரர்களான வில்பர்ட், ஓர்வில் விமானத்தை கண்டுபிடித்து சாதனை படைத்தவர்கள். இருவரும் தேவையின்றிப் பேசமாட்டார்கள். அத்துடன் மேடையில் பேசுவதையும் வெறுத்தனர்.

முதன் முதலில் விமானத்தில் பறந்து சாதனை படைத்த இருவரையும் கௌரவிக்க விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விருந்தில் அறிஞர்கள், பிரபலங்கள், பொறியியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விருந்துக்கு தலைமை வகித்தவர் மூத்தவரான வில்பர் ரைட்டை அவர்களின் சாதனை குறித்து உரையாற்றுமாறு அழைத்தார். எழுந்து ஒலிவாங்கியின் முன் சென்ற வில்பர்ட் "எங்களைப் பேச அழைத்ததில் ஒரு தவறு நேர்ந்துவிட்டது. எனது தம்பி ஓர்வில் ரைட்தான் நன்றாக உரை நிகழ்த்துவான். எனக்குப் உரையாற்றத் தெரியாது" என்று கூறிவிட்டு தன்னிடத்திற்கு சென்று அமர்ந்து கொண்டார்.

நிகழ்ச்சி தலைமையாளர், இப்போது ஓர்வில் ரைட்டை அழைத்தார். அவரும் எழுந்து ஒலிவாங்கி முன்னால் சென்று "என் அண்ணா வில்பர்ட் அற்புதமாக உரையாற்றினார். இதன் பின்னர் நான் எதைப் பேசுவது" என்று கூறிவிட்டு தன்னிடத்துக்கு சென்றுவிட்டார்.



## ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

## குட்டீஸ் பரிசுப் போட்டி - 29

**★ அண்மையில் தமிழக மக்கள் போராட்டம் நடத்தக் காரணமான விளையாட்டு எது?**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

குட்டீஸ் பரிசுப்போட்டி - 29

**முடிவுத்திகதி : 07.02.2017**

குட்டீஸ் பரிசுப் போட்டி - 27 முடிவுகள்

**விடை: 2006 டிசம்பர் 30**


**★ சரியான விடை எதுவும் அனுப்பப்படவில்லை.**

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம். (தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

# பூதத்தீவுப் புதிர்கள்

■ செங்கை ஆழியான்

சிறுவர் தொடர் 33



அழகாயும் இனிமையாயும் விரிந்து கிடந்த நந்தவனத்தில் அவர்கள் நடக்கும் போது, சசி கேட்டாள்.

"ஏன் பூதிர்ப்பூதம், அந்தக் கேள்விக்குத் தப்பாக விடை எழுதியது?"

"நாற்பதைப் பாதியால் வகுத்துப் பதினைந்தைக் கூட்டினால் சின்னப்புவின் சம்பளம் வரும். புதிர்ப்பூதம் நாற்பதை 20 ஆல் வகுத்துப் பதினைந்தைக்கூட்டி முதலில் 17 ரூபா என விடையெழுதியது. பின்னர் நாற்பதை 2 ஆல் வகுத்துப் பதினைந்தைக் கூட்டி 35 ரூபாவெனப் பதில் எழுதியது. பின்னர் தான் வசந்தனைப் பார்த்துச் சரியாக 95 ரூபாவெனப் பதில் எழுதியது" என்றான் சீலன்.

"பாதியால் வகுத்து என்பதை அரை வாசியால் வகுத்தல் என மறந்துவிட்டது. சீலன் திறப்புப் புதிரை எப்படித் தீர்த்தான் எனப் பார்த்தீர்களா?" என்று வசந்தன் வினவினான்.

"பார்த்தேன்.. முதலில் ஆறு திறப்புக்களை எடுத்து மூன்று மூன்றாகத் தராசுத் தட்டில் இட்டான். ஒரு பக்கம் தராசு தாழ்ந்தது. அந்த மூன்று திறப்புக்களையும் எடுத்து ஒரு திறப்பைக் கையில் வைத்துக் கொண்டு இரண்டு திறப்புக்களை ஒவ்வொன்றாகத் தராசுத் தட்டில் வைத்தான். தராசுத் தட்டில் வைத்த இரு திறப்புக்களில் ஒன்று நிறை கூடுதலாகவிருந்தது. ஆகவே, அதுவே திறப்பு எனத் தெரிவு செய்தான். கையில் இருந்த திறப்பு சம நிறையானது என்பது புலனாகியது"

"தராசுத்தட்டில் இட்ட இரு திறப்புக்களும் சமனாக இருந்திருந்தால்"

"கையில் இருப்பது நிறைகூடியது எனப் புரிந்திருக்கும்" என்றான் வசந்தன்.

இப்படியே பேசிக்கொண்டு அவர்கள் நந்தவனத்தின் மதில் பக்கமாக வந்தபோது, அங்கு வாசலில் கதவிற்கு அருகில் கமலம் ஆசிரியை இருப்பதைக் கண்டனர்.

"ரீச்சர்.." எனக் கூவிக்கொண்டு மாலா முன் வந்தாள்.

"உஸ்.. சத்தம் போடக்கூடாது.." என்றாள் கமலம்.

"உங்கள் பரீட்சை என்ன?" என்று சசி கேட்டாள்.

"இக்கதவைத் திறந்து அங்கால் விடுவதாயின் நான் கேட்கிற கேள்விக்குச் சரியாகப் பதில் தர வேண்டும். இல்லாவிட்டால், இவ் விடத்தில் என்னுடன் நின்றுவிட வேண்டும். புரிகிறதா?" என்ற கமலத்தை ஏறிட்டுப் பார்த்தாள், சசி.

"சரி ரீச்சர்..."

"சசியா பதில் சொல்லப் போகிறாய்?"

"ஆமாம்.. நான் தான்.."

கமலம் கேள்வியைக் கேட்டாள்.

"இலட்சுமிப் பாட்டிக்குத் தன் பேத்தியைப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தன் பேத்தியைக் காணச் செல்வாள். முந்தை நாள் தன் பேத்தியைப் பார்க்கச் சென்றிருந்தாள் நாளை மறுதினம் கிழமை?

"புதன்கிழமை" என்றாள் சசி பட்டென.

"பிழை.. இப்படி வா"

சசி பரிதாபமாக அவள் அருகில் சென்றாள்

அரவிந்தன் "நீ பதிலைச் சொல்"

அவன் சரியாகப் பதில் சொல்லவே கதவு திறந்து கொண்டது. வசந்தன், சீலன், அரவிந்தன், மாலா ஆகிய நால்வரும் ஒருங்கே உள்ளே நுழைந்தனர்.

"முப்பத்தி இரண்டு பேர் பயணப்பட்டு, இப்பொழுது நாங்கள் நால்வர் தான் இந்த மட்டத்திற்கு வந்திருக்கிறோம்" என்று ஏக்கத்துடன் மாலா கூறிக்கொண்டாள்.

"இலக்கினை அடைவது எங்களில் யாரோ?"

அவர்கள் நடந்தார்கள். கோட்டைக்குள் இப்படி ஒரு காடு குறுக்கிடும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. காட்டைக் கடந்ததும் ஓர் ஆறு பாய்ந்து கொண்டிருந்தது. அதில் படகோட்டி சின்னப்பு. தன் படகுடன் காத்திருந்தான்.

"அங்கே பாருங்கள். சின்னப்பு... சத்திரக்காரனின் கேள்விக்கு விடை தெரியாமல் சிலையாகிவிட்ட சின்னப்பு... இங்கே இருக்கிறார்"

"பெரியவரே" என வசந்தன் அழைத்தான்.

சின்னப்பு தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

"எங்களைப் படகில் ஏற்றி அக்கரையில் விட்டுவிடுங்கள். நாங்கள் யுக்திப் பூதத்தைக் காணவேண்டும்"

"போகலாம். அதற்கு ஒரு பிரச்சினை.. இந்த வள்ளத்தில் நானும் இன்னொருவரும் 20 தேசிக்காய்களும்தான் ஒரு நேரத்தில் பயணம் செய்யலாம். 21 தேசிக்காய்களை அக்கரைக்குக் கொண்டு வரும்படி யுத்திப் பூதத்தின் கட்டளை. நான் கொண்டு போய்விடுவேன். அங்கிருந்து வள்ளத்தை யார் உங்களுக்குக் கொண்டு வந்து தருவார். இப்பொழுது வள்ளத்தில் 21 தேசிக்காய்கள் இருக்கின்றன. உங்களில் ஒருவர் ஏறினால் ஒரு தேசிக்காயின் பாரத்தில் வள்ளம் நீரில் அமிழ்ந்துவிடும்... என்ன செய்யலாம்?"

அரவிந்தன் முன் வந்தான்.

"இதென்ன சின்ன விசயம்.. சின்னப்புப் பெரியவரே வாருங்கள்.. நான் வருகிறேன்"

அவன் முன்னே வந்து படகில் ஏறிக் கொண்டான். ஒரு தேசிக் காயை எடுத்துத் தன்கையில் உயர்த்தி தூக்கிப் பிடித்துக் கொண்டான். சின்னப்பு ஏறியதும் வள்ளம் அமிழத் தொடங்கியது. சின்னப்பு டக்கெனக் கரையில் குதித்ததால் வள்ளம் அமிழாது தப்பியது.

"தம்பி... அரவிந்தா, நீர் இக்கரையில் தங்கிவிட வேண்டியதுதான். இனி யார் வரப்போகிறீர்கள்?" என்று சின்னப்பு கேட்டான்.

எஞ்சியிருந்த மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். சீலனின் மனதில் ஒரு பொறி பறந்தது.

"நான் வழி கண்டுபிடித்துவிட்டேன்..." என்றான் சீலன்.

அவன் வள்ளத்தில் ஏறிக் கொண்டான். சின்னப்பு ஏறும் போது. சீலன் குனிந்து ஒரு தேசிக்காயை எடுத்து மேலே எறிந்தான். அது கீழ் நோக்கி வரும் போது இன்னொன்றை மேலெறிந்து கீழே வந்ததைப் பிடித்தான். அம்முறையில் ஒரு தேசிக்காய் எப்பொழுதும் வள்ளத்தில் இருக்காது. அந்ததரத்தில் இருந்தது. ஒரு பயிற்சி பெற்ற சர்க்கஸ்காரன் மாதிரி ஒன்றையெறிந்த ஒன்றைப்பிடித்து விளையாடியபடி சீலன் வள்ளத்தில் இருந்தான். வள்ளம் அக்கரையை அடைந்தது. சின்னப்பு தேசிக் காய்களுடன் விடைபெற, சீலன் வள்ளத்துடன் கரைக்கு வந்து ஒவ்வொருவராக அக்கரை சேர்த்தான்.

அரவிந்தன் அக்கரையில் தங்கி விட்டான்.

ஆற்றின் அக்கரையில் நின்று பார்க்கும் பொழுது தூரத்தில் ஒரு மாளிகை கம்பீரமாக எழுந்திருப்பது தெரிந்தது. அதன் அலங்காரத்திலும் பருமனிலும் இருந்து அது யுக்திப் பூதத்தின் இருப்பிடமாக இருக்கலாம் என மூவரும் எண்ணிக் கொண்டனர். அவர்களின் முடிவு சரியானதே.

அவர்கள் அந்த மாளிகையை நோக்கி நடந்தார்கள்.

மாளிகையின் வாசலை நோக்கி உயர்ந்த படிகள் ஏறிச்சென்றன. அவற்றில் மெதுவாகவும் அவதானமாகவும் ஏறிச் சென்று மாளிகை வாசல் தளத்தை அடைந்தனர். வாசலில் அவர்களுக்கு பெரும் வியப்புக் காத்திருந்தது.

கோபுரந்தாங்கி அங்கு காத்திருந்தது. அவர்களை அது கண்டதாகவோ அறிமுகமானதாகவோ காட்டிக்கொள்ளவில்லை. அதன் அருகில் ஒற்றைக்கண் மனிதர்களின் கிராமத்தில் கல்லாக இருந்துவிட்ட ரகுவும் காணப்பட்டான்.

"ரகு எங்களைத் தெரியவில்லையா?" என்று வசந்தன் கேட்டான்.

"நீங்கள் யார்?" என ரகு அவனைக் கேட்டான்.

"கோபுரந்தாங்கி எங்களைத் தெரியவில்லையா?" என மாலா அதனைக் கேட்க. அது தெரியாது எனத் தலையை ஆட்டியது.

"நாங்கள் உள்ளே செல்லவேண்டும். யுக்திப்பூதம் ஐயனைக் காணவேண்டும். கதவைத் திறந்துவிடுங்கள்.." என்று சீலன் கேட்டான்.

"நீயே கதவைத் திறந்துகொள். ஆனால், அதற்குமுன் உன்னிடம் ஒரு கேள்வி" என்றது கோபுரந்தாங்கி.

"பதில் சொல்லாவிட்டால் எங்களுடன் இவ்விடத்தில் தங்கிவிட வேண்டியது தான். அறிவாளிகளே யுக்திப் பூதத்தைக் காணலாம்"

"சரி கேள்" என்றான் சீலன்.

கோபுரந்தாங்கி கேட்டது.

"தோட்டம் ஒன்று அமைத்தேன். அதில் இரண்டு பக்கங்கள் வடக்கு நோக்கி இருந்தன. யானை ஒன்று வந்தது. அதன் நிறம் என்ன?"

சீலன் கேள்வியால் திகைப்படைந்தான்.

கோபுரந்தாங்கி பொருத்தமற்ற கேள்வியைக் கேட்கிறது. ஏதோ ஒரு யானை. பெரும்பாலும் கறுப்பு நிறும்.

"கறுப்பு நிறம்..." என்றான் சீலன்.

"இவ்வளவு தூரம் வெற்றிகரமாக வந்து கடைசியில் தோற்றுவிட்டாயே சீலா" என்றது கோபுரந்தாங்கி.

"அப்பனே, எங்களுடன் வந்து நின்றுகொள் வசந்தன், மாலா உங்கள் இருவரில் ஒருவர் பதில் தருக"

வசந்தன் சரியாகப் பதில் தந்தான். உடன் மாளிகைக் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. அதற்குள் அவர்கள் நுழைந்தார்கள். வசந்தன் மாலாவைப் பார்த்தான்.

"கடைசியில் இந்த இலக்கினை நாம் இருவர்தாம் வந்தடைந்தோம். என்ன அலங்காரமான மாளிகை" என்று அவன் வியந்தான்.

"நாங்கள் வந்த பாதையில் பலர் தங்கி விட்டனர். அவர்களை மீட்க வேண்டும். சுகமாகவும் சுதந்திரமாகவும் நாம் மீள வேண்டும். அதற்கு இங்கு வழி பிறக்கும் என நம்புகிறேன்" என்றாள் மாலா.

"வெற்றியடைவோம்..." என்றான் வசந்தன்.

அவர்கள் மாளிகையினுள் நடந்தனர். உலகின் செல்வங்கள் எல்லாம் அங்கு குவிந்து கிடந்தன. முத்துக்கள். வைரம், வைடூரியங்கள், தங்கம், வெள்ளி, அலங்காரப் பொருட்கள், நவீன கருவிகள், சாதனங்கள் அனைத்தும் இருந்தன. பல்வேறு வாகனங்கள் மாளிகையின் முற்றத்தில் நின்றிருந்தன. கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ரீ.வி. டெக், ட்ரான்சிஸ்ரர் எல்லாமே அங்கிருந்தன. என்ன அங்கிருக்கின்றன எனக் கணக்கிடுவதிலும் பார்க்க என்ன அங்கில்லை எனக் கணக்கிடுவதும் சுலபம் போலப்பட்டது.

அவர்கள் மாளிகையின் பின் பக்கத்திற்கு வந்தபோது "பிள்ளைகளே, வாருங்கள் என்றொரு குரல்" கேட்டது. பரிச்சயமான குரலாக அது பட்டது.

"புதிர்ப்பூதத்தின் குரல் அல்லவா?" என்று மாலா வசந்தனைக் கேட்டாள்.

"ஆமாம்... புதிர்ப்பூதம் தான். இங்கு இருக்கின்றேன்"

அவர்கள் குரல் வந்த திக்கில் பார்த்தனர். நேரெதிரே தெரிந்த ஓர் ஆசனத்தில் புதிர்ப்பூதம் அமர்ந்திருந்தது.

"இங்கு எப்படி வந்தீர்கள்?"

"அகழியிலுள்ள முதலைகளைக் கறியாக்க முயன்றேன். பார்த்துப் பயந்து உள்ளே விட்டனர். இப்பொழுது ஒரு பிரச்சினையில் சிக்கிக்கொண்டேன். இப்பிரச்சினையைத் தீர்த்து நீங்கள் வெற்றி பெற்றால் இனித் தடையில்லை. யுக்திப் பூதம் ஐயனை நேரில் காணலாம்"

"அவர் எங்கிருக்கிறார்?"

"அதோ பெரியதொரு கதவு தெரிகிறதே? அதனைத் திறந்தால் அவர் இடத்தினை நேராக அடையலாம்"

புதிர்ப்பூதத்தின் முன் இரண்டு குவியல்களாகத் தேங்காய்கள் குவிக்கப்பட்டிருந்தன. அதன் முன் அமர்ந்திருந்தது.

என்ன பிரச்சினை...?

"இப்படித்தான் இங்கிருந்த சத்திரக்காரனைக்கேட்டேன். அவன் பிரச்சினையைச் சொன்னான். என்னால் தீர்த்து வைக்க முடியவில்லை. என்னை இங்கு இருத்திவிட்டு அவன் சென்றுவிட்டான். நான் சிக்கலில் மாட்டிக்கொண்டேன்" என்றது புதிர்ப்பூதம்.

"நாங்கள் அதனைத் தீர்க்கத் தயார்"

"உங்களில் யாராவது இங்கு அமரத்தான் வேண்டும். ஒருவர்தான் யுக்திப்பூதம் ஐயனைக் காணலாம்"

வசந்தனும் மாலாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

வெல்வது யார்? தோற்பது யார்?

**(புதிர்கள் நீளும்)**

விஜயின் பைரவா படம் பொங்கல் ஸ்பெஷலாக வெளியாகி ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றிருந்தது.

இந்நிலையில் அவருடைய 61வது படம் பற்றிய தகவல்களை அறிய ரசிகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அட்லீ இயக்கும் இப்படத்தில் நாயகியாக காஜல் அகர்வால் நடிக்க இருப்பது ஏற்கெனவே வெளியான தகவல்.


படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் என்று கூறப்பட்ட நிலையில், மார்ச் மாதம் படப்பிடிப்பு தொடங்கும் என தெரிகிறது.

இப்படத்தில் விஜய்க்கு நிறைய முடி இருக்க வேண்டுமாம், பைரவா படத்தில் விஜய் பயன்படுத்திய 'விக்' ரசிகர்களை கவரவில்லை.

எனவே ஒரிஜினலாக முடி வளர்த்து, தாடி, மீசையுடன் விஜயின் தோற்றம் இருக்க வேண்டுமாம்.

அதனாலேயே படத்தின் படப்பிடிப்பு தள்ளிப்போயுள்ள தாகக் கூறப்படுகிறது.





பொலிவுட்டில் 'பிகே' செய்த வசூல் சாதனையை முறியடித்திருக்கிறது 'தங்கல்'. கிறிஸ்மஸ் அன்று வெளியான அமீர்கானின் 'தங்கல்' முதல் மூன்று நாட்களில் மட்டும் 100 கோடியைத் தாண்டி வசூலித்திருக்கிறது. ரூபாய் நோட்டு தட்டுப்பாடு நேரத்திலும் இதுவரை 350 கோடிக்கும் மேல் வசூலித்திருக்கிறது. ஹிந்தி பாக்ஸ் ஆபீஸில் 'பிகே', 'பஜ்ரங்கி பைஜான்', 'சுல்தான்' மற்றும் 'தூம்-3' ஆகிய படங்களின் வசூல் சாதனையை முறியடித்து, பொலிவுட்டின் ரொப்-5 வசூல் சாதனைப் படங்களில் முதல் இடத்தில் இருக்கிறது 'தங்கல்'.

ரஜினியின் ஹதர்மதுரை' ஹிட்டை விஜய்சேதுபதியின் 'தர்மதுரை'யும் தொட்டுவிட்டது. 100 நாட்கள் கடந்துவிட்டதால், இயக்குநர் சீனுராமசாமி, தயாரிப்பாளர் ஆர். கே.சுரேஷ் மற்றும் விஜய்சேதுபதி உள்ளிட்ட 'தர்மதுரை' குழுவினர் ரஜினியைச் சந்தித்து வாழ்த்து பெற்றிருக்கிறார்கள். ரஜினியுடனான சீனு ராமசாமியின் சந்திப்பு ஒரு மணிநேரம் நடந்திருக்கிறது. சினிமா ஆசை, காதல், நட்பு என்று பல விஷயங்களை ரஜினியுடன் சீனுராமசாமி பகிர்ந்ததை ஆர்வமாய் கேட்டு ரசித்தாராம் ரஜினி.



ஷங்கரின் '2.0' படத்தின் படப்பிடிப்புக்குப் பிறகு பா.ரஞ்சித்தின் படத்தில் நடிக்கவிருக்கிறார் ரஜினி. மும்பை குடிசைப் பகுதியில் படப்பிடிப்பு விரைவில் தொடங்கப்போகிறதாம். மும்பை தாராவி தமிழர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து அரசியல் பேசவிருக்கிறார் பா.ரஞ்சித்.





சமூக வலைதளத்தினால் பாதிக்கப்படும் பெண்களுக்கு நடக்கும் அநீதியைத் தட்டிக்கேட்கும் 'பகடி ஆட்டம்' கதையில் நடித்துவருகிறார் ரகுமான். 'துருவங்கள் பதினாறு' படத்தின் வரவேற்பினால் இப்படத்துக்கும் எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது. பெண்களுக்கு விழிப்பு உணர்வு தரும் படம் என்கிறார் இயக்குநர் ராம். கே.சந்திரன்.


ராஜமௌலி இயக்கிவரும் 'பாகுபலி - 2' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்திருக்கிறது. இதற்காக 'ஜெய் மகிழ்மதி...' என கோஷம் போடும் வீடியோவை இணையத்தில் வெளியிட்டு வைரல் ஆக்கியிருக்கிறார்கள் படக்குழுவினர். ஏப்ரல் 28 இல் 'கட்டப்பா ஏன் பாகுபலியைக் கொன்றார்?' என்ற கேள்விக்கான பதிலும் தெரிந்துவிடும்.



கைநிறைய படங்
வைத்திருக்கும் அ
உதவியாளர் பர்
'ஒத்தைக்கு ஒத்த'
நடிக்கிறார். இப்
இரண்டு நாயகிக
வித்யா பிரதீப் ஹ
ஒப்பந்தம் செய்ய
மற்றொரு நாயகி
தொடர்கிறது. வ
கல்லூரி வாழ்க்
தான் இப்படத்தி




1971இல் நடந்த இந்தியா-பாகிஸ்தான் போர் பின்னணியை வைத்து உருவாகியிருக்கும் ராணாவின் படம் 'காஸி'. தெலுங்கு, இந்தி மற்றும் தமிழில் வெளியாகவிருக்கிறது. இப்படத்தில் ராணுவ அதிகாரியாக ராணா நடித்திருக்கிறார். ஹீரோயின் டாப்ஸி. பிரமாண்டமாக உருவாகியிருக்கும் இப்படம் பெப்ரவரியில் திரைக்கு வருகிறது.




கௌதம் வாசுதேவ் மேனன் - சூர்யா கூட்டணியில் தொடங்கி, பிறகு கைவிடப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இப்போது சூர்யாவுக்குப் பதில் விக்ரமை வைத்துப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டு லைக்ஸ்களைக் குவித்துவிட்டார் கௌதம். வித்தியாசமான கொஞ்சம் வயதான அதேசமயம் மிடுக்கான தோற்றத்தில் மிரட்டுகிறார் விக்ரம். படப்பிடிப்பு தொடங்கி நடந்துவருகிறது. ஓகஸ்ட்டில் படத்தை வெளியீடு செய்யத் திட்டமாம்.







...கிறது 'தங்கல்'.
...நாட்களில்
...ட்டு தட்டுப்பாடு
...ஹிந்தி பாக்ஸ்
...ஆகிய படங்களின்
...சாதனைப்



நவ்தீப் சிங் இயக்கத்தில் அனுஷ்கா சர்மா நடித்து ஹிந்தியில் ஹிட்டான 'NH-10' படத்தின் தமிழ் வடிவமான 'கர்ஜனை' படப்பிடிப்பு தொடங்கிவிட்டது. அனுஷ்கா சர்மா கதாபாத்திரத்தில் த்ரிஷா நடிக்கிறார். புதுமுக இயக்குநர் சுந்தர்பாலு இயக்கும் இப்படத்துக்காக, சண்டை கலைஞர் சுப்ரீம் சுந்தரிடம் சண்டைப் பயிற்சி மேற்கொண்டுவருகிறார் த்ரிஷா. 'கொடி' போலவே இதிலும் அதிரடியில் கெத்து காட்டுகிறாராம் த்ரிஷா



...றைய படங்களை
...திருக்கும் அதர்வா, பா.ரஞ்சித்
...யாளர் பர்னேஷ் இயக்கும்
...தக்கு ஒத்த' படத்திலும்
...கிறார். இப்படத்தில்
...ண்டு நாயகிகள். 'அச்சமின்றி'
...ா பிரதீப் ஹீரோயினாக
...ந்தம் செய்யப்பட்டுள்ளார்.
...றாரு நாயகிக்கான வேட்டை
...டர்கிறது. வழக்கமான
...ரி வாழ்க்கையும் காதலும்
...இப்படத்தின் கதையாம்.



எம்.எஸ்.தோனி' படத்தில் ஹீரோயினாக வந்து லைக்ஸ் அள்ளியவர் திஷா படானி. சமீபத்தில் சமூக வலைதளப் பக்கத்தில் அவரின் நிர்வாண புகைப்படங்களைப் பகிர, போட்டோவும் வைரலானது. 'எதற்கு இந்த போட்டோவையெல்லாம் பகிர்கிறீர்கள்?' என்று நெருங்கிய வட்டாரம் திஷாவிடம் கேட்டால், 'என் போட்டோ என் உரிமை' என்று அதிரடியாகப் பேசுகிறாராம்.

# கண்ணால் காதல் சொன்னவளே...



**ஆ**ர்வமும், திறமையும் இருந்தும் பொருளாதார நெருக்கடியால் பல கலைஞர்கள் நம் மண்ணில் இன்னும் இலைமறை காயாகவே இருக்கிறார்கள். படைப்பாக்க கனவுகளைச் சுமந்து கொண்டு தயாரிப்பாளர்களுக்காக காத்திருந்த இளைஞர் குழு ஒன்று, கடைசியில் தங்கள் சுய முயற்சியால் - கைக்காசை போட்டு - ஒரு பாடலை வெளியிட்டு அனைவரையும் தம்மைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளனர்.

"கண்ணால் காதல் சொன்னவளே" இது அந்தப் பாடலின் தலைப்பு. இந்தப் பாடல் யூரியூப் தளத்தில் வெளியாகி இரண்டு வாரங்களில் இருபதாயிரம் பார்வையாளர்களை எட்டும் தறுவாயில் உள்ளது. அதனை விட பல இணையத்தளங்களும் இந்தப் பாடலை தமது தளத்தில் வெளியிட்டு கொண்டாடி வருகின்றன. தனுராஜின் நெறியாள்கை மற்றும் ஒளிப்பதிவில், ஜிந்துஷனின் படத்தொகுப்பில், சர்மிலனின் வரிகள் மற்றும் நடிப்பில் , ப்ரியனின் இசையில், அருள்தர்சனின் குரலில் இணைந்து உருவான இந்தப் பாடலின் உருவாக்கம் பற்றி பாடல் குழுவினரின் அனுபவப்பகிர்வு இது.

● **இந்தப் பாடல் எப்படி உருவானது?**

சினிமாவில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்த இளைஞர்களான நாங்கள் மனதில் சுமந்த கனவுகளை வெளிப்படுத்தும் வாசலாக உருவானதே எமது முதலாவது படைப்பான "கண்ணால் காதல் சொன்னவளே" பாடல்

மீதி தொகையை எமது குழுவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் எமது கைக்காசை போட்டே பாடலை எடுத்து முடித்து வெளியிட்டோம்.

● **எங்கே, எத்தனை நாட்கள் படப்பிடிப்பு நிகழ்ந்தது?**

பருத்தித்துறை, மணல்காடு, காங்கேசன்துறை, கோண்டாவில், மன்னார் ஆகிய இடங்களில் சுமார் 6 நாட்களாக படப்பிடிப்பை நடத்தினோம்.

● **பாடலை தற்போது வரை எத்தனை பேர் யூரியூப்பில் பார்வையிட்டுள்ளனர்? பாடலுக்கான வரவேற்பு எப்படி உள்ளது?**

பாடல் வெளியிடப்பட்ட 2வாரங்களில் 19027க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு உள்ளனர். பார்ததவர்களிடம் இருந்து நாங்கள் எதிர்பார்த்ததை விட அமோக வரவேற்பு கிடைத்தது.

சமூக வலைத்தளங்கள், இணையத்தளங்கள் என்பன எமது பாடலை தங்களது தளத்தில் வெளியிட்டு ஆதரவு தந்ததோடு, பாரட்டுக்களையும் வழங்கின. அத்தோடு பாடலைப் பார்த்த பலர் தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொண்டு தமது வாழ்த்துக்களை



தெரிவித்து எம்மை உற்சாகப்படுத்தினர். இதனால் அடுத்த தயாரிப்புகளில் ஈடுபடும் உத்வேகம் வந்துள்ளது.

● **ஏன் காதலை கருவாக எடுத்தீர்கள்?**

காதல்தான் இளைஞர்கள் மத்தியில் எடுத்த எடுப்பிலேயே வரவேற்பைப் பெறும் விடயம். எனவே எமக்கான அறிமுகம் பரவலடைய வேண்டும் என்பதற்காகவும், அனைவரது மனதையும் கவர்வதற்காகவும் காதலைக் கருவாக எடுத்தோம்.

● **இதற்கான தயாரிப்புச் செலவினை எங்கே பெற்றீர்கள்?**

முதல் பாடல் என்பதால் தயாரிப்பாளர் கிடைக்க வில்லை. புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து இருவர் சிறு உதவிகளை செய்தனர் (இந்திரன் ராம்)(S.உமாகாந்தன்)

● **உங்கள் குழுவின் அடுத்த கட்ட தயாரிப்புகள் பாடலா? குறும்படங்களா?**

வரலாற்றுப்பாடல் ஒன்று, இரண்டு காதல் பாடல்கள் . புலம் பெயர்ந்த " தமிழன் நிலை பற்றிய பாடல் உள்ளிட்ட 7 பாடல்களும், 3 சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களைக் கூறும் குறும்படங்களும் தயாரிக்கும் திட்டமுள்ளது. ஆனால் உரிய தயாரிப்பாளர் கிடைக்காமையால் இந்தத் திட்டங்கள் இன்னும் கனவுளாகவே உள்ளன. ■





# பயமுறுத்தும் - 13




நாள் நட்சத்திரம் பார்ப்பதில் நம்மவரை மிஞ்ச உலகில் வேறு யாருமில்லை என்றே நினைக்கத் தோன்றுகின்றது. இறைவன் படைத்த எந்த நாளும் நல்ல நாள்தான் என்று ஆறுதலுக்காகச் சொல்லிக் கொண்டாலும், ஒரு சுபகாரியம் என்று வந்துவிட்டால், பலதும் பத்தும் பார்த்தே, அந்த வைபவத்தை அரங்கேற்றுகிறோம். அட்டமி நவமி, மரணயோகம், அமாவாசை நாட்கள் என்று வந்துவிட்டால் தமிழர்களாகிய நமக்கு எந்த சுப காரியங்களையும் நடத்த முடிவதில்லை. ராகு காலங்களைத் தவிர்த்தே எந்த நிகழ்வையும் நடத்துவதும் தமிழர்தான். இப்படியாக எந்த நாளும் நல்ல நாளல்ல என்பது எமது உறுதியான, பிடிவாதமான கோட்பாடு. இது மூட நம்பிக்கையா என்று கேட்பது விவாதத்திற்குரியது.

நம்கதை இதுவாக இருக்க, பலவழிகளிலும் முன்னேறி, சந்திரனைத் தொட்டு வந்த மேலை நாட்டவர்கள், ஒரு நாள் மீது குறிப்பாக வெள்ளி யைக் கண்டும் ஒரு திகதி யைக் கண்டும் மிரள்வது நமக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது. நம்மவர்கள் வியாழன்று இரவே வீட்டைக்கழுவி சுத்தமாக்கி, வெள்ளி காலை கோவிலுக்குச்சென்று, வீட்டில் மச்சம் சமைப்பதைத் தவிர்த்து, வெள்ளி விரதமிருந்து அதை ஒரு புனித நாளாகவே கருதி வருகின்றார்கள். ஆனால் இந்த வெள்ளி அதுவும் பதின்மூன்றாம் திகதியோடு கைகோர்த்து வந்தால் மிக ஆபத்தானது என்ற நம்பிக்கை உலகெங்கும் பரவலாக இருப்பது நமக்கு ஆச்சரியத்தைத்தான் தருகின்றது.

சமீபத்தில் ஒரு வெள்ளியும் பதின்மூன்றும் கூட்டாகக் கைகோர்த்து வந்து போயிருக்கின்றது. வருடா வருடம் இரண்டொரு தடவைகள் இந்தக் கூட்டு இடம் பெறுவது வழமை. பலவழிகளிலும் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுவிட்ட பிரிட்டனில் வாழ்கின்ற சுமாரான 60 மில்லியன் தொகை வயது வந்தவர்களில் 3 மில்லியன் வரை யிலானவர்கள் இந்தப் பதின்மூன்றில் வெளியில் எங்கும் போவதில்லை என்று முடிவெடுத்து விட்டார்களாம். காரணம் அசம்பாவிதமாக ஏதாவது நடந்து விடப் போகின்றதே என்ற பயந்தான். ஓர் ஆய்வில் 80 வீதமான பிரித்தானியர்கள் மூட நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்று அறியப்படுகின்றது. அதிர்ஷ்டம் தரும் காலணிகளை 36 வீதமானவர்கள் வெளியே போகும் போது அணிந்து செல்கிறார்களாம். மரத்தைத் தொட்டு விட்டு வெளியே சென்றால் அதிர்ஷ்டம் வரும் என்று நம்புபவர்கள் 35 வீதமானவர்கள் இருக்கின்றார்கள். அதிர்ஷ்ட நாணயம் கைவசம் இருப்பதை நம்புவர்கள் 23 வீதமானவர்கள்.

ஒரு சாம்ராஜ்ஜியம் ஒரு தினத்திற்காக இப்படி மிரள்வதும் மூடநம்பிக்கைகளோடு வாழ்வதும் வியப்பாகத் தான் இருக்கின்றது. ஆனால் இந்தப் பயம் புதிதாக வந்த ஒன்றல்ல. பிரித்தானியாவை விக்ரோரியா ராணி ஆண்ட காலத்திலயே பிரித்தானிய மருத்துவ ஏடொன்றில் வெள்ளியும் பதின்மூன்றும் கூட்டாக வரும் தினங்களில் அதிக வீதி விபத்துகள் இடம் பெற்றிருப்பதாக பதியப்பட்டுள்ளது.

இவர்கள் எந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்து இப்படி நடந்து கொள்ளத் தலைப்படுகின்றார்கள்?

பிரித்தானியா கத்தோலிக்கர்கள் நிறைந்த ஒரு நாடு. கிறிஸ்தவர்களின் புனித பைபிளின்படி, யேசுபிரான் யூதாஸ் கரியோத் என்ற சீடனால் காட்டிக் கொடுக்கப்படு முன்னர் தனது சீடர்களுடன் ஒன்றாக உட்கார்ந்து இராப் போசனம் எடுத்துக் கொண்டார்.

13 ஆவதாக வந்து உட்கார்ந்தது சீடனான யூதாஸ் தான். இயேசுவைக் காட்டிக் கொடுத்ததால் மனமுடைந்து யூதாஸ் பின்பு நாண்டு கொண்டு இறந்தான்.

இயேசுவைச் சிலுவையில் அறைந்து வதை செய்தது அல்லது இறுதி இராப்போசனம் 13 ஆம் திகதியிலேயே நிகழ்ந்தது என்ற சர்ச்சை காலங் காலமாக இருந்து வருகின்றது. ஒரு பெண் 28 நாட்கள் கொண்ட மாதச் சுழற்சியாக வருடத்தில் 13 தடவைகள் மாதவிலக்கைச் சந்திக்கிறாள் என்பது துரதிர்ஷ்டத்தோடு சம்பந்தப்பட்ட ஒன்றென நம்புகின்றார்கள். ஒருவரது பெயரில் 13 எழுத்துக்கள் இருந்தால் அவன் சபிக்கப்பட்டவன் என்று நம்புகிறார்கள். உதாரணத்திற்கு ஹிட்லரின் ஞானஸ்தானப் பெயர் ADOLF க்கு HITLER .

வர்த்தக முதலீடுகளுக்கு அநேகமானவர்கள் இந்த நாளை விரும்புவதில்லை. பல பில்லியன் டொலர் முதலீடுகள் இந்த நாளில் இழக்கப்பட்டுள்ளன என்கிறார் ஓர் ஆய்வாளர்.

பன்னிரண்டு என்பது கணிதவியலாளர்கள், விஞ்ஞானிகளின் கருத்தின்படி புராதன உலகால் ஒரு நிறைவான இலக்கமாகவே நோக்கப்பட்டது. புராதன சுமேரியர்கள் 12 ஐ அடிப்படையாக வைத்து ஒரு எண்முடிறையை உருவாக்கியிருந்தார்கள். இன்றும் அது நடைமுறையில் இருக்கின்றது. 12 மாதங்கள் கொண்ட ஒரு வருடம். இரு 12 மணி நேரத்தைக் கொண்ட ஒரு நாள் என்பன இதற்கு உதாரணங்கள். இதை அதிகரிக்க முற்படும் போது துரதிர்ஷ்டம் வந்து சேர்கின்றது என்றும் சொல்லப்படுகின்றது.

இன்று ஈரானாகி விட்ட அன்றைய பாரசீகத்தில் 13 பய முறுத்தும் ஒரு இலக்கமாகவே இருந்து வந்துள்ளது. சிஸ்டா பெடார் என்று அழைக்கப்பட்ட பாரசீகத்தின் புதுவருடத்தின் 13 ஆவது தினத்தில் மக்களுக்கு தீய காரியங்கள் இடம் பெறலாம் என்று பெரிதாக நம்பப் பட்டது. இதன் காரணமாக நகர்ப்புறங்களை விட்டு விலகி கிராமப்புறங்களில் கூடாடரமடித்து தங்குவது இவர்கள் வழமையில் இருந்துள்ளது. 1979 இல் ஈரானில் புரட்சி ஏற்பட்ட காலத்திற்குப் பின்னரும் இந்தப் பராம்பரிய வழக்கம் இஸ்லாமிய அரசின் கோரிக்கைக்கு இணங்க நாடெங்கிலும் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

வல்லரசான அமெரிக்காவில் என்ன நடக்கின்றது என்று பாருங்களேன். இங்குள்ள வானளாவிய கட்டடங்களின் 80 வீதமானவைக்கு 13 வது மாடிகள் கிடையாது. பெரும் பான்மையான ஹோட்டல்கள், மருத்துவமனைகள், விமான நிலையங்கள் தமது அறைகளுக்கு 13 என்ற இலக்கத்தை இடுவதைத் தவிர்த்து வருகின்றன.

யாருக்காவது விருந்து வைத்தால் மேசைக்கு 13 வது விருந்தாளியை அழைப்பதில்லை. திருமணஞ்செய்து கொள்வதானால் 13 ஆம் திகதிக்கு குட்பை! வரிசைக் கிரமமாக இந்த அமெரிக்கர்கள் அப்பலோவை இலக்கமிட்டு சந்திரனுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் பயந்ததுபோலவே 1970 இல் ஏப்ரல் 11 அன்று அனுப்பிய அப்பலோ 13 ஏப்ரல் 13 இல் ஒரு கோளாறைச் சந்தித்தது. பயணம் தடைப்பட்டது. ஒருவாறாக விண்வெளி வீரர்கள் பூமிக்கு பத்திரமாக வந்து சேர்ந்தார்கள். இவர்களின் பதின்மூன்றிற்கான பயப்பிராந்தியை மேலும் கூட்டி வைத்தது இந்த விபரீத நிகழ்வு.

மூடநம்பிக்கை என்றாகி விட்டால், அதையொட்டி நாம் செய்வதெல்லாம் வெறும் அசட்டுத்தனமான செய்கைகள்தான். ஒருவழியில் இதை நோக்கினால் மனோரீதியான பாதிப்பின் விளைவுகள் இவை என்றே சொல்லத்தோன்றுகின்றது. நினைப்பு பிழைப்பைக் கெடுத்ததாம் என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கின்றது. நடக்காத ஒன்றை நினைத்து நினைத்து அதை நிஜமாகவே நாம் நடக்கும்படி செய்துவிடும் நிகழ்வுகள் பல இருக்கின்றன.

1995 இலிருந்து பின்லாந்து வருடத்தில் வரும் பதின்மூன்றுடன் ஒட்டிய வெள்ளியை வீதிவிபத்து பாதுகாக்கும் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. விழிப்போடு இருங்கள். இந்தத் திகதி பற்றிய நினைவு வேண்டாம் என்பதுதான் செய்தி. எந்தவொரு வைத்தியசாலையிலும் 13 ஆம் இலக்க வார்ட் இருப்பதில்லை.

காகம் இருக்கப் பனம் பழம் விழலாம். அதற்காக காகத்தின் எடைதான் பனம்பழத்தை விழுத்தியது என்ற கற்பனை நமக்கெதற்கு?

# ஐயோ...!
## உடம்பு குண்டாகிறதே

பொதுவாக ஐரோப்பிய நாட்டு மக்கள் கிறிஸ்துமஸ் சீசன் என்று வந்து விட்டால் சாப்பிடுவதிலோ செலவழிப்பதிலோ ஈவிரக்கம் காட்டுவதில்லை. உடம்பு ஒரு சுற்று பருத்து எடையும் அதிகரித்து கொண்டாட்டம் முடிவுக்கு வரும்போதுதான் உடல் எடை குறைப்பு பற்றி கவலைப்பட ஆரம்பிப்பார்கள்.

வெறும் முந்திரிகைப் பழம் மாத்திரம் சாப்பிடுவது, ஒரு நேரம் சாப்பிடுவது என்று பலவழிகளில் எடையோடு போராட்டம். ஆனால் புதியதொரு ஆய்வு என்ன சொல்கின்றது தெரியுமா?

காலை எட்டு மணிக்கு ஆரம்பிக்கும் உங்கள் சாப்பாட்டை பிற்பகல் இரண்டுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இதற்கிடையில் எதையும் சாப்பிடுங்கள் என்கிறார்கள் இவர்கள். மாலை ஆறு மணிக்குப் பின் எதையும் சாப்பிடாதீர்கள் என்பதைவிட கெடுபிடியான முறை இது. காலை எட்டிலிருந்து மாலை எட்டு வரை சாப்பிடும்போது பசி உணர்வு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதை அமெரிக்கர்களை வைத்து நடத்திய ஆய்வில் கண்டறிந்துள்ளார்கள். சாப்பிடாவிட்டால் இரவில் பசிக்கும் என்பதெல்லாம் பிழையான கருத்து என்று இவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

எட்டு நாட்கள் தொடர்ந்து 11 ஆண்களையும் பெண்களையும் வைத்து நடத்திய ஆய்வின் முடிவிலேயே இதைக் கண்டறிந்துள்ளார்கலாம்.

இப்படியே போனால் உணவகங்கள் எல்லாம் இரண்டு மணிக்குப் பின்னர் கதவுகளை இழுத்து மூட வேண்டிதுதான்.



# லண்டனை இணைக்கும்
## சீன ரயில் சேவை

சீனா பல வழிகளில் முன்னேறிக் கொண்டே செல்கின்றது. புதியதொரு முயற்சியாக பொதி ஏற்றிச் செல்லும் ரயில் சேவை ஒன்றை சீனாவில் இருந்து இலண்டனுக்கு ஆரம்பித்துள்ளது. 9 நாடுகளுக்கு ஊடாக பயணிக்கும் தூரம் 7456 மைல்கள். மொத்தம் நான்கு மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான காலணிகள், சூட்கேசுகள் நிறைந்த பொதியை ஏற்றிக் கொண்டு சென்றவாரம் பயணம் ஆரம்பித்துள்ளது. கிழக்கு லண்டனை வந்தடைய 18 நாட்கள் இந்த ரயில் ஓட்டம் நீடிக்கும் என்கிறார்கள். வானை நம்பியிராமல், மலிவாகவும், வேகமாகவும் ஐரோப்பாவுடன் போக்குவரத்து செய்யும் முகமாக இந்த ரயில் பயணம் அமைகின்றது. பிரித்தானியாவை வந்தடைய முன்னர் ரஷ்யா ஊடாக வரும் இந்த ரயில் போலந்து, ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளைக் கடந்து வரும். இந்த ரயில் சேவை இணைக்கும் 15 ஆவது நகரம் லண்டனாகும். பிரித்தானியா எட்டாவது நாடாகும்.

**சுறுசுறுப்புக்கு மறுபெயர் சீனாவோ?**





# மயக்கமும்... மர்மமும்...

நன்றி: ஆனந்தவிகடன்









அதிபர்
கு.திலீபன்

# சுவாமி விபுலானந்தர் ஆரம்பித்த கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

## வரலாறு

சந்திப்பு: அ.றொக்சன்

யாழ்ப்பாணத்தின் வளமிக்க கொக்குவில் பதியில் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கீழ் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை இயங்கி வருகிறது. இப்பாடசாலை கல்வி மூலம் சமூக ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டு அதாவது அனைவருக்கும் கல்வி என்னும் உன்னத நோக்கத்திற்காக அமரர் இர்ாசையா தம்பித்துரையின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும்.

இப்பாடசாலைக் கட்டுமானப்பணிகள் 1936 இல் ஆரம்பிக்கப்பட்டன. 1938 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆம் திகதி சுவாமி விபுலானந்தரினால் திறந்த வைக்கப்பட்டதோடு, அடிகளாராலேயே வித்தியாரம்பம் செய்யப்பட்ட சைவப் பாரம்பரியம் மிக்க பாடசாலை இது வென்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் முதல் அதிபரான இ.கந்தையா மிகச் சிறப்பாக பாடசாலையை வழிநடத்தினார். அவரைத் தொடர்ந்து விவேகானந்தன், இ.சுந்தரம், ஆ.கந்தையா, ச.கணேஸ்வரன், செ.நவரத்தினம், க.சுப்பிரமணியம், இ.சிவபாதசுந்தரம், கமலநாயகி கதிர்காமலிங்கம் ஆகிய அதிபர்கள் இப் பாடசாலையின் வளர்ச்சியில் அயராது உழைத்தனர். 2017 ஆம் ஆண்டு தை மாதம் 2 அம் திகதி குலசிங்கம் திலீபன் பாடசாலை அதிபராக பொறுப்பேற்று பாடசாலையை வழிநடத்தி வருகின்றார்.



## சவால்கள்

நகரப்புறப் பாடசாலைகளின் ஆதிக்கத்தினால் பாடசாலை மாணவர் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தரம் 1, தரம் 6 வகுப்புக்களில் மாணவர்கள் சேர்ந்து கல்வியைத் தொடர முன்வரவேண்டும்.

பெற்றோர் பொருளாதார நிலைமையில் பின்தங்கியுள்ளனர். இதனால் பிள்ளைகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் உள்ளனர். இது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ளது.

பாடசாலைகளின் சமூக செயற்பாடுகளிலும் பெற்றோர் அதிகளவில் பங்கு கொள்ள வேண்டும். மற்றும் மாணவர்கள் அவசியமற்ற காரணத்தினால் பாடசாலைக்கு வராமல் இருக்கிறார்கள். இது இப் பாடசாலைக்குப் பெரும் சவாலாகவும், முன்னேற்றத்திற்குத் தடையாகவுமுள்ளது.





## சாதனைகள்

35 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 800 மாணவர்களுடன் 1c தரத்தில் இயங்கி வந்தது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் இலங்கையில் மட்டுமல்லாது அயல் நாடுகளிலும் பட்டதாரிகளாக, வைத்தியர்களாக, வங்கியாளர்களாக, பொறியியலாளர்களாக, தொழிலதிபர்களாக சேவையாற்றி வருகின்றனர்.

வருடா வருடம் க.பொ.த.சர்/தரத்தில் 75 வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி பெறுகின்றனர். அத்துடன் ஒவ்வொரு வருடமும் தரம் 5 புலமைப் பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு மாணவர்களாவது சித்தியடைந்து வருகின்றனர். அத்தோடு பரீட்சைக்குத் தோற்றும் அனைவரும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதுமட்டுமல்லாது இணைப் பாட விதமான செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றி கோட்ட, வலய, மாவட்ட பரிசில்களைப் பெற்று வருகின்றனர்.

விளையாட்டுத் துறையில் 2016 ஆம் நடைபெற்ற கோட்டமட்ட 'தட்டெறிதல்' போட்டியின் போது தரம் - 9 ஐ சேர்ந்த உ.லாவண்யா முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். அதே ஆண்டில் நடைபெற்ற கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியிலும், வலய மட்டத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியிலும் முதலாம் இடத்தினை தரம் - 10 ஐ சேர்ந்த க.கஜானன் பெற்றுக் கொண்டார்.





ஆசிரியர்கள்

# மாயாவின் டயரி



வாழ்வின் பெரும்பகுதி போராட்டத்திலேயே கழிகிறது. அதுவும் பெண்களின் வாழ்வில் போராட்டத்திற்கு குறைவென்பதே இல்லை. அதிகாரத்துக்கு எதிரான எங்களின் போராட்டம் காலம்தோறும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மக்கள் மயப்பட்ட பிரச்சினையில் தங்களுக்கு சமத்துவம் கிடைக்காத பட்சத்திலும் பெண்கள் திரண்டெழுந்து சமூக நீதிக்காக தெருவில் இறங்கிக் குரல் கொடுப்பது என்பது சாதாரணமாக நிகழ்ந்துவிடக்கூடிய ஒன்றல்ல.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுப் பிரச்சினை பண்பாட்டு பிரச்சினையாக ஆரம்பித்து, அரசியல் திருப்பு முனைகள் நோக்கி நகர்ந்துள்ள நிலையில், அந்தப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது உலகப் பெண்களுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றது.

இதுவரை நாம், “அரைகுறை ஆடை அணிந்து கொண்டு காதலன் வருவான் கைத்தலம் பற்றுவான்” என்று கனவு கண்டு கொண்டே அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவில் கனவுப்பாடல் பாடிய பெண்களை வெள்ளித் திரையிலும் கணவனுக்காக குடுமிப்பிடிச் சண்டை பிடிக்கும், வீட்டுக்குள்ளேயே வில்லத்தனம் பண்ணும், அழகியல் மோகம் கொண்டு அலைந்தழியும் பெண்களை சின்னத்திரையிலும் பார்த்துப் பார்த்து “இவர்கள் தான் தமிழகப் பெண்கள்” என்று கட்டிய ஒரு மனப் பிம்பத்தை இந்தப் போராட்டம் உடைத்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பெண்ணுடைய போராட்டம், எப்போது சமூக நீதிக்கான போராட்டமாக மாறுகின்றதோ? அப்போதே, “அது சமத்துவத்திற்கான சகல நிறுவல்களையும் அடைந்துவிட்டது என்றே கொள்ள முடியும். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் அரசியல் பேசுகின்றனர், மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கின்றனர், வரலாற்றைப் பேசுகின்றனர். இதெல்லாம் அவர்கள் அரசியலுக்கு வருவதற்கான வியூகங்களே என்னும் கதைகளும் பரவலாக உள்ளன. உண்மையில் வீட்டிலிருந்து வெளியே வந்து பெண் குரல் கொடுக்கிறாள் என்பதே “அரசியல் தான்”, பெண் எழுதுகின்றாள் என்பதே அரசியல்தான், பெரும் மேடையில் பெண் முழங்குகின்றாள் என்பதும் அரசியல்தான்

இந்த விடயத்தை நம் ஊரின் பெண்களிடம் பேசியபோது, பலருக்கும் நாகினி தொடர் முடிவுக்கு வந்ததுதான் சோகமாக இருந்ததே தவிர இந்த விடயம் அவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்ற பாரதியின் வரிகளை அயல் நாட்டு சகோதரிகள் நிரூபித்துக் கொண்டிருக்கும் காலப்பகுதியிலும் நாம் அதைப் பற்றி அறியக்கூட முற்படாது பழங்கதைகள் பேசுவதில் என்ன கிடைத்துவிட போகின்றது.

இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரை இன்னொரு பகுதியும் இருக்கின்றது. ஒருபுறம் அதிகாரத்துக்கு எதிராக பெண்கள் பலரும் வீதியில் இறங்கிப் போராடும் அதேவேளை அதிகாரத்தில் இருக்கும் பெண்களின் கண் மூடித்தனமான விமர்சனங்கள் எரிச்சலூட்டுவனவாக அமைகின்றன.

பீட்டா ஆர்வலர் ராதாராஜன் இந்த போராட்டம் தொடர்பில் எதிர்க்கையில் “இலவசமாக செக்ஸ் உறவு (free sex) அளிப்பதாக கூறியிருந்தாலும் இத்தனை இளைஞர், யுவதிகள் மெரீனாவில் கூடியிருப்பார்கள்” இப்படியான ஒரு கருத்தை முன்வைத்துப் பின் அதற்கான நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரியிருப்பதும் பெண் ஒற்றுமையின் பலவீனமாகப் பார்க்கப்பட்டாலும் இது இரண்டு தரப்பு பெண்களை உள்ளடக்கியது.

1. அதிகாரத்தில் இருக்கும் பெண்கள்
2. அதிகாரத்தை எதிர்க்கும் பெண்கள்

இதுவரை எந்தப் பண்பாட்டின் பெயரில் அடக்குமுறையை எதிர்கொண்டோமோ, இந்தப் பண்பாட்டின் பெயரில் உரிமைகள் மறுக்கப்பட்டதோ அதே பண்பாட்டைக் காப்பதற்காக அந்த நலிந்த கூறுகளை உடைத்து இந்தப் பெண்கள் வெளி வந்திருக்கின்றனர்.

ஆனால் இந்தப் போராட்டத்திற்குப் பின்பு வன்புணர்வுகள் நடக்காது, ஆண்கள் அனைவரும் போராட்ட களத்தில் பெண்களை சகோதரர்களாக மதித்து நடந்தது போலவே இனியும் நடந்து கொள்வர் என எதிர்பார்க்க முடியாது. இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே அவர்களில் வெளியில் இருக்கும் ஒருத்தி வன்புணர்வுக்கு உட்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றாள். எனவே இந்தப் போராட்டத்திலிருந்து தமிழகப் பெண்கள் மட்டுமல்ல நாமும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று உள்ளது. அதுதான் “தற்துணிவு”.

இந்தப் போராட்டம் நமக்கு கற்றுத் தந்திருப்பது அடக்குமுறைக்கு எதிரான குரலை எழுப்புவதற்கே. சொல்லப்போனால் இந்தப் போராட்டத்திற்கான ஆதரவுக் குரல் யாழ்ப்பாணத்திலும் அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி, கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி என தமிழர் வாழும் பிரதேசங்களிலெல்லாம் எழும்பியபோதிலும் அங்கு பெண்களின் குரல் என்பது மிகவும் சொற்பமே. காரணம் நாங்கள் போராட்டம், குரல் எழுப்புதல் என்பதை அச்சமூட்டும் அல்லது அலட்சியமான ஒன்றாகவே பார்க்கின்றோம். ஆனால் அது உண்மையிலேயே நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்று. நம்மை நாமே எதிர்ப்புக்களிலிருந்து வெளிவர பழக்கப்படுத்திக் கொள்ளும் ஒரு செயன்முறை அது.

இந்தப் போராட்டத்தில் தமிழக சகோதரிகளின் பங்களிப்பு என்பது எனக்குள் உற்சாகத்தை விதைத்துள்ளது. தன்னம்பிக்கையைத் தந்துள்ளது. குறைந்தபட்சம் இது தொடர்பான விடயங்களை நம்மூர் பெண்கள் அறிந்து கொள்ளுதலாவது பயனுடைய செயலாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

**“பெண் வீதியில் இறங்கிப் போராடுகின்றாள் என்பதே அரசியல்தான்”**

பார்வை நயம் - 07



# முத்து மாஸ்டரின் நேசம்!!!

**கணபதி சர்வானந்தா**

அந்தக் காலத்தில் எமது பள்ளிக்கூடக் கிணறு சுத்தமாகப் பேணப்படுவதில்லை. இடைவேளைகளில் பள்ளிக்கூடத்தை அண்டியிருந்த வைரவர் கோயில் கிணற்றில்தான நீர் அருந்துவது வழக்கம். அதுவும் யாராவது வயது வந்தவர் வரும்வரை கிணற்றடியில் காத்திருக்க வேண்டும். சிறுவர்களாகிய எங்களுக்கு கிணற்றடியிலுள்ள துலாவைப் பிடித்து நீர் அள்ள அனுமதியில்லை. அப்போது, நீர் அள்ளித்தர யாரும் கிணற்றடிக்கு வராவிட்டால் முத்து மாஸ்டர் வீட்டுக்கு வந்துவிடுவோம். அவர் வீட்டு முற்றத்தில் பானையும் செம்பும் இருக்கும். ஆனால், கண்டபடி அவர் வீட்டு வளவுக்குள் போக முடியாது. போவதற்கு முன்பு, கடியன் நாய் கட்டியிருக்கிறதா? என ஒருமுறை பார்த்துக் கொள்ள வேண்டும்.

எமது பள்ளிக்கூடத்தை அண்டிய வளவில் இருந்தது செல்லமுத்தர் வீடு. அதைச் ‘செல்லமுத்தர் வீடு’ என்று சொன்னால் யாருக்கும் தெரியாது. ‘முத்து மாஸ்டர் வீடு’ என்று சொன்னால் தான் அவர் வீட்டைக் காட்டுவார்கள். அவ்வளவுக்கு அவர் ஆசிரியர் தொழிலில் பிரபலமானவர். அவரின் கற்பித்தல் கண்ணியத்தை ஊரார் அறிந்து வைத்திருந்தனர். நண்பகல் 1.30 க்கு பாடசாலை விட்ட பின்பு வீடு போய் சாப்பிட்டோமோ! இல்லையோ!, அவரவர் வகுப்புக்கேற்றவாறு “சிலேட், பென்சில், கொப்பி, பேனா” என எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, முத்து மாஸ்டர் வீட்டு முற்றத்திற்கு வந்து விடுவோம். கணக்கு முதல் ஆங்கிலம், விஞ்ஞானம் என்று எல்லாப் பாடங்களும் நடக்கும். பாடங்களுக்குக் கட்டணம் எதுவும் அவர் அறவிடுவதில்லை. கற்பித்தலைத் தொண்டாகச் செய்துவந்தார்.

மாஸ்டருக்கு ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள். போர்க்காலத்தில் ஆமிக்குப் பயந்து மாஸ்டர் தன் உறவினர் ஒருவரின் உதவியுடன் மகனை நியூசிலாந்துக்கு அனுப்பிவிட்டார். அவன் இரண்டு வருடங்களின் பின்னர் அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் போய், சில காலம் படித்துவிட்டு அங்கேயே தொழில் பார்க்கலானான். மாஸ்டர், தனது மகள் திருமண வயதை எட்டியதும், அவளுக்குத் திருமணப் பேச்சை ஆரம்பித்தார். வீட்டோடு இருக்கக்கூடிய மாப்பிளையைத் தேடிக்களைத்துப்போய் மகனுக்கு விபரம் சொல்லி பக்ஸ் மூலம் குறிப்பையும் அனுப்பிவிட்டார். மகளுக்கு அவுஸ்திரேலியாவில் சம்பந்தம் சரிவர, “எங்களைப் பார்க்கத்தான் இஞ்சை ஒருத்தரும் இல்லை” என்ற ஒப்பாரியோடு மாஸ்டர் சம்பந்தந்தை ஒத்துக் கொண்டார்.

மாஸ்டர் மகளுக்கு கல்யாண எழுத்து ஊரிலும், கல்யாணம் சிட்னி முருகன் கோவிலிலும் நடந்தது. அங்கிருந்து வந்த கல்யாணப் படங்களையும், வீடியோவையும் பார்த்து இரசித்தனர் மாஸ்டர் தம்பதிகள். வசதி வாய்ப்பு என்று வர, மாஸ்டரின் மகள் தனது சகோதரனுக்கு அவுஸ்திரேலிய - யாழ்ப்பாணத் தமிழ் சமூக வட்டத்திலேயே பெண்ணொன்றைத் தெரிவு செய்தாள். “அவனது எழுத்து, பொன்னுருக்கல், கல்யாணம்” என்று எல்லாமே அவுஸ்திரேலியாவில் நடந்தேறின. அவற்றையும் மாஸ்டர் தம்பதிகள் நிழலாகவே பார்த்து இரசித்தனர்.

ஒரு வருடம் கழித்து மாஸ்டரின் மகன், மனைவியுடன் பெற்றோரைப் பார்ப்பதற்காக ஊருக்குவந்தான். “கோவில், குளம், விருந்துபசாரம்” என்று இரு வாரங்கள் கழிந்ததும் புறப்படத் தயாரானான். மாஸ்டரின் மனைவிக்கு நீண்ட காலமாக இருந்த ஆஸ்துமா முற்றியபோது சுவாசம் கஷ்டமாயிற்று. பெரியாஸ்பத்திரியில் சேர்த்து இரு நாட்களில் அவர் இறைவனடி சேர, மகள் தனது பிள்ளைகளுடன் வந்தாள். மரணம் கொண்டாடப்பட்டது. மாஸ்டருக்கு மனைவியின் இழப்பை ஜீரணிக்க முடியாதிருந்தது. அவர் இடி விழுந்தவர் போலக் காணப்பட்டார். ஒரு வாரத்தில், மகள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப முன்னர் புறக்டரைக் கூப்பிட்டு வீடு வளவைத் தன் பெயருக்கு எழுதி எடுத்துக் கொண்டாள். “அவரைத் தனிய விட்டுட்டு வந்தனாங்கள். சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவார்” என்ற வெளிநாட்டுக்காரரின் வழமையான சாட்டுப்போக்குடன், மகள் பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியா பயணமானாள். மகனுக்கும் லீவு இல்லையென்ற காரணத்தைச் சொல்லி, “21 ஆவது நாளன்று மரணத் துடக்கைக் கழிக்க வேண்டுமெனு” ஏகமனதாகத் தீர்மானித்து “அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம்” என சகல கடமைகளும் முறையாக நிறைவேற்றப்பட்டன.

மகன் புறப்படத் தயாரான போது, அயலிலுள்ள பெறாமகள் ஒருவர் மூலம் மாஸ்டருக்கான உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் கணவனும் சம்பள அடிப்படையில் மாஸ்டருக்குத் துணையாக அமர்த்தப்பட்டார். மாஸ்டருக்குத் தனிமையைக் கற்றுக்கொள்ள சில காலம் சென்றது. காலப்போக்கில் மாஸ்டர் தனக்கென நிறைவான வாழ்க்கை ஒன்றை அமைத்துக் கொண்டார்.

மாஸ்டரின் மனைவியின் முதலாம் ஆண்டுத் திவசம் வந்தது. முத்து மாஸ்டரின் மகள் தனியாக வந்திறங்கினாள். இரண்டு நாட்கள் கழித்து மகனும் வந்தான். திவசத்துக்குரிய ஒழுங்குகளை மாஸ்டருக்கு உதவியாக இருந்த உறவினர் கவனித்துக் கொண்டார். முத்து மாஸ்டர் தனியாக இருப்பது தனக்குச் சங்கடத்தைத் தருவதாக மகள் அடிக்கடி சொல்லிக் கொண்டாள்.

ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அங்குமிங்குமாக ஓடித்திரிந்தாள். அவள் பேச்சு, நடவடிக்கை எல்லாமே அவளையும், அவளது குடும்பத்தின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் மட்டுமே இருந்தன. “எப்பிடி இவள் இவ்வளவு சுயநலமான ஆளா மாறிப்போனாள்” என்று மாஸ்டருக்கு வியப்பாக இருந்தது. திவசம் நடந்து மூன்றாம் நாள் மகன் பிரியாவிடை பெற்றுக் கொண்டான். அவன் பயணித்த மற்றைய தினம் இரவு மகள் மாஸ்டரின் நண்பரோடு வந்து இறங்கினாள். மாஸ்டரின் மகள் வீட்டை விற்க ஏற்பாடு செய்த கதையையும், மாஸ்டரைப் பணம் செலுத்தி சிவபூமியில் தங்க வைக்க ஒழுங்குகள் செய்த கதையையும், மாஸ்டரின் நண்பரே சொன்னார். மகள் ஒன்றும் பேசவில்லை. மாஸ்டரும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு மௌனமாயிருந்தார்.

“இன்றைக்குப் பின்னேரம் வான் வரும். உங்களைக் கொண்டு போய் சிவ பூமியிலை சேர்த்துவிட்டுட்டு நாளை நான் பயணம், ஐயா!” மகள் சொன்னாள். இரண்டு சிறிய சூட்கேஸில் முத்து மாஸ்டரின் உடைமைகள் தயாராகின. “ஒன்றில் வேட்டி, சால்வை, நஷனல் மற்றும் கோவணத் துணிகள்” என்றும், மற்றையதில் “தேவார, திருவாசகம், கதிர்காமத் திருநீறு டப்பா, உருத்திராட்ச மாலை, காதுக் குடும்பி ஊசி, பென்ஷன் கார்ட்டுகள், பிரியாவிடையன்று கிடைத்த விவேகானந்தர் சிலை, மனைவியின் படம்” என எடுத்து வைத்தவற்றைச் சரிபார்த்துக் கொண்டார். அவர் அசைவுகளெல்லாம் பேச்சுக்கள் அற்ற நடவடிக்கைகளாகவே இருந்தன.

“ஐயா...!, வான் வந்திட்டுது போவம். வாங்கோ!” மகள் மாஸ்டரைக் கூப்பிட்டாள். ‘வாறன் பிள்ளை’, மாஸ்டர் பட அறைக்குள் போய் திருநீறை பூசிகொண்டு சற்று அமர்ந்து கொண்டார். “போனவரைக் காணேல்லை” மகள் தேடிப் பட அறைப்பக்கம் வந்தாள்.

மாஸ்டர் சுவரில் சாய்ந்தபடி நிரந்தர மௌனியாகிப் பல நிமிடங்கள் கழிந்திருந்தன.

**ஆன்மா லயப்படுவது ஆலயத்தில் மட்டுமல்ல. நேசிக்கின்ற ஒவ்வொன்றிலும்!**

# வாய் திறக்கும்...

(06 ஆம் பக்க தொடர்ச்சி...)

## கொடும்பாவி தீர்வு தராது

அது நிச்சயமாகக் கொடும்பாவி எரிப்பதால் தீர்வைத் தந்துவிடாது. அல்லது ஆயிரத்தெட்டுப் பானைகளை வைத்துப் பொங்குவதால் காலடியிலிருந்து வெள்ளம் பீறிட்டுப் பொங்கிப் பாய்ந்து, வயலெல்லாம் நிறைந்து, பயிர் முகத்தைச் சிரிக்க வைக்கும் என்றுமில்லை. அல்லது அரசியல் பிரமுகர்களை அழைத்து, அவர்களின் கையில் குடையை விரித்துக் கொடுத்து, அவர்களின் பின்னே அணிவகுத்துச் செல்வதால் மழை கொட்டி, மண்ணெல்லாம் ஈரம் சுவறி விடும் என்றுமில்லை. காடுகளை வளர்க்கவேணும். அதற்கு முதல், மரங்களை வெட்டுவதை நிறுத்த வேணும். மரங்களை வெட்டி விற்பது இன்று பெரும் பினாமிகளின் தொழிலாகி விட்டது. மண் அகழ்வும் அப்படித்தான். உயர் மட்ட அதிகாரிகள் அல்லது அரசியல் தலைவர்களின் கைகள் மண்ணில் தாராளமாக விளையாடுகின்றன.

மரங்களை வெட்டுவது சிலருக்கு இலகுவாக இருக்கலாம். ஆனால், அது முற்று முழுதாகத் தவறானது. எங்கோ காட்டில் நிற்கிற மரத்தை யாரோ வெட்டிக் கொண்டு போகிறார்கள். அதைப் பார்த்துக் கொள்வதற்கு பொலிசும் வனவளப்பிரிவும் ஏனைய



அதிகாரிகளும் இருக்கிறார்கள். நமக்கென்ன? என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், இது தவறு. இந்த விசயத்தைத் தடுப்பதில் எல்லோருக்கும் பொறுப்புண்டு. இதைத் தடுக்கவில்லை என்றால், இதனால் மழை வீழ்ச்சி பாதிக்கப்படும். சூழல் வெப்பமாகும். மண்ணரிப்பு நிகழும். நீலத்தடி நீர்கூட இல்லாமற் போய் விடும் என்பதெல்லாம் இலகுவாகத் தெரிந்தவை. இப்படி எல்லாவற்றையும் தெரிந்து கொண்டும் இவற்றைத் தடுக்காமல் இருப்பது மகா தவறு.

## கொல்லும் உரிமை யாருக்குமில்லை

பிள்ளையைப் பெறும் உரிமை உங்களுக்குண்டு. ஆனால், நீங்கள் பெற்ற பிள்ளையாக இருந்தாலும் அதைக் கொல்லும் உரிமை உங்களுக்கில்லை. அதைப்போல, மரங்களை யாரும் நடலாம். அது எல்லோருடைய கடமையும் பொறுப்பும். ஆனால், ஒரு மரத்தைக் கூட வெட்டும் உரிமை யாருக்கும் கிடையாது. அது நீங்கள் நட்டு வளர்த்த மரமாக இருந்தாலும் அதை வெட்டுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை.

ஆனால், என்ன நடந்து கொண்டிருக்கிறது? இன்று வன்னியிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான மரங்கள் வெட்டப்படுகின்றன. மாதம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான மரங்கள். ஆண்டுக்கு லட்சத்துக்கும் அதிகமானவை. இப்படியே போனால், வாழ்வில் எத்தனை மரங்கள்? காடு மிஞ்சுமா? இத்தனைக்கும் பொலிஸ், வன வளப் பாதுகாப்புப் பிரிவு, கிராம சேவகர்கள், பிரதேச செயலர்கள், சுற்றுச் சூழலியலாளர்கள் எனப்பல அதிகாரத்தரப்பினர் இருக்கிறார்கள். இதை விட ஒவ்வொரு பிரதேசத்திலும் சமூக அமைப்புகள், சிவில் சமூக அமையத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பட்டதாரிகள் சங்கங்கள் எனப் பலவும் உள்ளன. எல்லாம் இருக்கும் போதே சட்டவிரோத மணல் அகழ்வும் சட்டவிரோத மரம் வெட்டிக் கடத்துவதும் நடக்கிறது. காட்டு மரங்கள் மட்டுமல்ல, பனை மரங்களும் சட்டவிரோதமாக வெட்டப் படுகின்றன. இப்படி சட்ட விரோதமாக வெட்டிக் கடத்தப்படும் மரங்களோடும் மண்ணோடும் பிடிக்கப் படும் வாகனங்கள் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் நிறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற நீதி மன்றங்களில் இந்தச் சட்ட விரோதச் சுமைகளோடு நிற்கும் வாகனங்களை நீங்கள் தாராளமாகக் காணலாம்.

ஆனால், என்னதான் கைதுகள் நடந்தாலும் அதை வெட்டிச் சமாளிப்பதற்கு அதிகாரிகள் முதற்கொண்டு, வீதிக்கண்காணிப்புப் பொலிசார் வரைக்கும் கையூட்டு வழங்கப்படுகிறது. லஞ்சத்தின் மூலம் இயற்கை விரோதச் செயல்கள் தாராளமாக நடக்கின்றன. "எரிகிற வீட்டில் பிடுங்குவது மிச்சம்" என்கிறமாதிரி, அவரவர் தமக்கான லாபங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். இது நீதிப் பிழையாகும்.

நீதி பிழைத்தால் மழை பிழைக்கும்.. வாழ்க்கை பிழைக்கும். காலம் பிழைக்கும். இன்றைய தேவை நீதியின் வெளிச்சமே. அதுவே எல்லாவற்றையும் மீள் நிலைப்படுத்தும். மண்ணையும் மக்களையும் உய்விக்கும். இயற்கையே பேரருள். அதனுடைய வரமின்றி எதுவுமேயில்லை.

இயற்கையை வழிபடுகிறோம் என்று கதிரவனுக்குப் பொங்கல் வைப்பதை விட, இயற்கையை வாழ வைக்க வேணும்.

அதுவே வழி.



# அலம்பல் ஆச்சி

செல்வி

கனகாலத்துக்குப் பிறகு இப்பதான் ஆசுவாசமாய் இருக்குது பிள்ளையள்... மண்டியிடாத மானம், தலை வணங்கா தமிழினம் எண்டெல்லாம் பழங்கணக்கு பாக்கேக்குள்ளை, சும்மா இருந்து கொண்டு அசைபோடுற பெடியள் எண்டு எனக்கு ஆத்திரம் ஆத்திரமா வரும். ஆனா இண்டைக்கு தமிழ்நாட்டிலை நடக்கிற எழுச்சியை பார்க்கேக்குள்ளை, வீரமெண்டுறது எங்கடை இனத்தின்ரை ரத்தத்தில ஊறிக்கிடக்கிற விசயம் எண்டு விளங்குது.

இந்தியான்ரை இலக்கியம் இந்தியான்ரை இதழுகள், இந்தி எண்டு மல்லுக்கட்டிக் கொண்டு நிப்பாங்கள். ஆனால் தமிழனெல்லாம் ஒண்டாய் சேரப்போறாங்கள் எண்டு தெரிஞ்ச அடுத்த நிமிசம் பிராந்திய தமிழனாய் மாறிடுவாங்கள். இது ஏறுதழுவுதலுக்காக கூடுற கூட்டமில்லை. கனநாளாய் கன விசயங்களுக்கு உள்ளுக்குள்ளை அம்மிக்கொண்டு இருந்த சனத்துக்கு ஏறுதழுவுதலுக்கான தடை ஒரு சாட்டு. சினிமாக்குப் பின்னாலை போகுங்கள். சாதியை தூக்கிப்பிடிக்குங்கள் எண்டு அவையை பற்றி சொல்லிக் கொண்டிருந்தம். இண்டைக்கு தமிழனெண்டு எல்லாரும் ஒண்டா நிக்குதுகள் பாருங்கோ. மரபணுவை எந்தக் கொம்பனாலையும் மாத்தேலாது தானே. பெடியன் சண்டையிலை புறமுதுகிட்டானெண்டு அறிஞ்சா, தன்னைத் தானே மாய்ச்சுக்கொள்ளுற வீரப் பரம்பரையிலை வந்ததுகள் இப்பிடித்தான் இருப்பினம். இந்தியனா இருந்த தமிழனையெல்லாம் தமிழன் எண்டு உணர வைச்ச இந்திய கவண்மேந்துக்கு எங்கடை நன்றியையும் ஒருக்கா சொல்லி விடுங்கோ.

அவனவன் முழு மாடு சாப்பிடுறான். அவங்களை கேக்கமாட்டினம். எங்கடை சடங்குகளை மட்டும் தடுக்க வந்திடுவினம். எங்கடை கோயில் வேள்விகளுக்குள்ளை இருக்கிற மானிடவியல் விசயங்களை விலங்கு வதை எண்டு ஒரு விசயத்தாலை அழிக்கப் பாக்கிறாங்கள். ஆடு, மாட்டிலை அவ்வளவு அக்கறையெண்டா, இறைச்சியள் சாப்பிடுறதை நிப்பாட்டுங்கோவன். மாட்டுப்பாலையும் குடிக்காம விடுங்கோ. ஆடு நனையுதெண்டு அழுகிற ஓநாய்க் கூட்டம் உது. எங்கடை மரபிலை, ஏறுதழுவுதல் எண்டுறது காளைகளை கொண்டாடுற விசயம். ஆனா, தமிழன்ரை மரபுகளை அழிச்சு, அடையாளமில்லாமல் பண்ணிறதுக்கு உலகம் முழுத்தும் ஒண்டா நிக்குது. நாங்கள் எங்கடை மொழிக்காக, எங்கடை இனத்துக்காக, எங்கடை மரபுக்காக ஒண்டாய் இணைஞ்சு நிக்கத்தான் வேணும்.

முள்ளிவாய்க்காலின்ரை முடிவுக்கு பிறகு தமிழன்ரை எழுச்சி இன்னொரு வடிவமாய் வந்து நிக்கிறது நல்லம்தானே. ஆனா, இந்தப் போராட்டம் வெற்றி பெறுதோ இல்லையோ.. "தமிழனுக்கு அடிச்சா. உலகத்திலை எந்த மூலையிலை இருந்தாலும் தமிழன் குரல் கொடுப்பான்" எண்டு எல்லா ஓநாய்களுக்கும் விளங்கியிருக்கும். இன்னுமொரு முள்ளிவாய்க்கால் வரத்தான் போகுது. ஆனா அது தமிழன்ரை நிலத்திலை இல்லை. "இப்ப இருக்கிற பெடியள் ஒண்டுக்கும் உதவாங்கள்" என எங்களைப் போலை பெரிசுகளின்ரை புலம்பலுகளை உடைச்சுக் காட்டியிருக்கிறாங்கள். பொம்பிளைப் பிள்ளையள் எல்லாம் இராப்பகலாய் களத்திலை நிக்குதுகள்.

எங்கடை நாட்டிலை, அடையாள ஒன்றுகூடலுக்கு கூட் விரலால எண்ணக்கூடிய பொம்பிளைப் பிள்ளையள்தான் நிண்டிச்சினம். இப்பவும் ஊரடங்குச் சட்டமோ? பாட்டுக்கள், ஆட்டங்கள் எண்டா குஞ்சுகுருமனிலை இருந்து கிழவியள் வரைக்கும் காசு குடுத்துப் போவினம். எங்கடை பொம்பிளைப் பிள்ளையள் துவக்குகளோடை காடுகளுக்கை இருந்து களமாடினதுகள். "அதுகளின்ரை அக்கா தங்கைச்சியள் கூட அரசியல் மயப்படேல்லை" எண்டது கவலையா கிடக்குது. கனபேர் கேக்கினம் இஞ்சை ஆயிரத்தெட்டு பிரச்சினையள் இருக்கேக்கை ஏன் ஏறுதழுவுதலுக்கு ஆதரவு குடுக்கிறியள் எண்டு. "கடல் வத்தி கருவாடு தின்னலாம் எண்டு குடல் வத்தி செத்ததாம் கொக்கு" என்ற கதையாத்தான் போகும். அதோடை, இஞ்சை நடக்கிற போராட்டங்களிலை கட்சியளும், அரசியலும் இருக்கும். தங்களை எந்த கட்சியாயும் அடையாளப்படுத்த கூடாதெண்டு நினைக்கிற பிள்ளையள் எப்பிடி உவையிட்டை போவினம்? எங்கடை பிரச்சினைக்கு குரல் குடுக்கத்தான் வேணும். உங்கடை கையிலைதான் இருக்கு பேரனவை.

ஒரு முசுப்பாத்தி தெரியுமே? ஏறுதழுவுதலுக்கு ஆதரவு சொன்னாப்போலை அது எங்கடை பண்பாடு ஆகிடுமோ எண்டு சில அறப்படிச்சவை பயப்பிடுகினம். ஏறுதழுவுதல் எங்களிட்டை இருந்துதோ இல்லையோ எண்டது வேறை விசயம். பகிடி என்னெண்டா, எங்கடை இளந்தாரியளுக்கு காளையை அடக்கிற பலம் இருக்கோ? அந்தக்காலத்திலை, நாங்கள் எங்கையெண்டாலும் வண்டில் மாட்டிலைதானே போறது. இப்ப அத கண்ணிலையும் காணக் கிடைக்குதில்லை. அங்கனேக்கை கொடிகாமம், சாவச்சேரியிலை இருந்து கிடுகு, பொச்சு வண்டியள் வரும். என்ன செய்யிறது. எல்லாத்தையும் கண்ணுக்கு முன்னாலை துலைச்சுப்போட்டு தேடிக் கொண்டு திரியிறம்.

"வழமையாய் பிரிஞ்சு நிக்கிற தமிழன் இப்ப ஒண்டா நிக்கிறான்" எண்டு ஆரும் கண்ணிலை போடப் பாப்பாங்கள். இந்தத் தைப் புரட்சி உடனடியாக வந்ததில்லை. முள்ளிவாய்க்காலுக்கு பிறகு மெது மெதுவா தொடங்கி, இப்ப வெடிச்சிருக்கு. இதே ஒற்றுமையோடை இருந்தமெண்டா, தமிழன்ரை சின்னி விரலை கூட எவனும் மடிக்கேலாது. போராடுற பெடியளுக்கு சாப்பாடு குடுக்கோணும். போட்டு வரட்டே?

கிரிஷாந்த்

# ஜல்லிக்கட்டு



## நாம் கற்றுக் கொள்ளக் கூடியவை

இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்த போது ஜல்லிக்கட்டு போராட்டம் ஒரு முடிவை எட்ட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது.. மாணவர்கள் மீதும் அவர்களுக்கு அனுசரணை யாகவும் இருந்த பொது மக்கள் மீதும் பொலிஸ் கெடுபிடிகள் ஆரம்பித்திருந்தன.

தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற ஜல்லிக்கட்டு ஆரதவு போராட்டங்களை அரச இயந்திரம் ஒடுக்க ஆரம்பித்திருந்தது. ஏற்கனவே ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக ஈழத்திலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மற்றும் பல தேசங்களிலும் கவனயீர்ப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. சமூக வலைத்தளங்களிலும் பொது இடங்களிலும் இதுபற்றிய காரசாரமான விவாதங்கள் பல இடம் பெற்றிருக்கின்றன. இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இந்தப் போராட்டத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியதும், புரிந்து கொள்ள வேண்டியதுமான பல விடயங்கள் உள்ளன. அவற்றை தொகுத்துப் பார்ப்போம்.

**1** - ஏதோ ஒரு பொது நோக்கில் மக்கள் இவ்வளவு பெரிய அளவில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வீதிக்கு இறங்கவில்லை. அது தான் இந்தப் போராட்டத்தின் முதல் வெற்றி. முதல் பாடம். தமது அடையாளம் மீதான பொதுப் பிரச்சினையாக இது இருந்தாலும் மத்திய அதிகாரத்தின் மீதிருக்கும் கோபத்தின் வெளிப்பாடே இது.

**2** - தொடர்ந்து சமூக வலைத் தளங்களில் இயங்கும் இளைய தலை முறை மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் இந்த போராட்டத்தை அவர்கள் உருவாக்கிய விதத்தில் மறைந்து போய் விட்டன. இவ்வளவு காலமும் இணையத்தில் உலாவிக் கொண்டிருந்தவர்கள் நிலத்திலும் கால் பதித்து இணையத்தில் போராளிக் குரல் எழுப்பியவர்கள் நிஜத்திலும் குரல் எழுப்பியது மிக முக்கியமான சமூக அசைவு.

**3** - இவ்வளவு பெரிய போராட்டத்தை ஆறு நாட்களாக இத்தனை லட்சம் மக்கள் இண்ணந்து நடத்தியதும், அதன் போதான் பல படிப்பினைகளும் முக்கியமானவை. பெண்களின் பங்களிப்பு இந்தப் போராட்டத்தில் முன்னெப்போதையும் விட அதிகமாகவிருந்தது. சாதி, வர்க்க, பால் நிலை அடையாளங்களைக் கடந்து ஒரு பொதுப் பிரச்சினைக்காக பொது அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்து போராடியதும் ஈழத்து தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

**4** - இந்த வகையான போராட்டங்கள் நடைபெற ஈழத்தைப் பொறுத்தவரை இன்னும் ஜனநாயகச் சூழல் வளராத நேரத்தில் காலம் எடுக்கும்.

ஆனால் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்களின் தொடர்ச்சியில் இந்த இளைய தலை முறையும் இணைந்து கொள்வதற்கு போராட்டமொன்றிற்காக ஜனநாயக ரீதியில் வீதியில் இறங்குவதற்கு இது ஒரு தொடக்கமாக அமையும்.

**5** - அற வழிப் போராட்டங்கள், "ஜனநாயகத்தை அதன் உச்ச அளவில் பயன்படுத்துதல் என்பன பற்றி நாம் அதிகமும் உரையாட இது வழியைத் திறந்து விட்டிருக்கிறது"

மேலும், "இந்தப் போராட்டம் மிகக் கடுமையான முறையில் அடக்கப்பட்டாலும் கூட தமிழர்கள் உலகத்திற்கொரு பெரிய செய்தியை சொல்லியிருக்கிறார்கள்" என்று தான் தோன்றுகிறது. இது தொடர்பில் பேராசிரியர் அ. மார்க்ஸ் தனது முகநூலில் எழுதிய பதிவை கீழே தருகிறேன்.

"இரண்டு வகைகளில் இந்தப் போராட்டம் எதிர் கொள்ளப்படும்






என்பது நேற்றே எதிர்பார்த்ததுதான்" அவை:

1. கொஞ்ச ஆட்களைத் தயார் செய்து போராட்டம் பற்றி அச்சமும் அவதூறும் பரப்பி அறிக்கைகள், பிரெஸ் மீட்... முதலியன செய்தல்.

2. காவல்துறையின் உண்மை முகத்தைக் காட்டி போராட்டத்தை ஒடுக்குவது. இரண்டும் நடந்துகொண்டுள்ளன.

இந்த நிலையில் போராடும் இளைஞர்கள் என்ன செய்ய முடியும்?

இது அமைதி வழிப் போராட்டம். ஆனால் இந்த அமைதி வழிப்போராட்டத்தில் பங்கு பெறுவோர் அன்று மகாத்மா காந்தியால் திரட்டப்பட்ட அறப்போராளிகள் போன்றார்கள் அல்ல. எல்லா பின்விளைவுகளையும் சொல்லி தியாகம் செய்வதெற்கெனவே திரட்டப்பட்டவர்கள் அவர்கள்.

இன்று குழுமியுள்ளோர் அப்படியானவர்கள் அல்ல.

இந்த நிலையில் கலைய நேர்ந்தால் அது பின் வாங்கலோ இல்லை தோல்வியோ அல்ல. ஏற்கனவே போராட்டம் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் பல உண்மைகள் அடையாளம் காட்டப் பட்டுள்ளன. பல எதார்த்தங்களை இளைஞர்களும் மாணவர்களும் புரிந்து கொள்ள இது வாய்ப்பு ஏற்படுத்தியது. எதிரிகளை மாணவர்களும் இளைஞர்களும் அடையாளம் காணவும் காட்டவும் ஒரு அற்புதமான வாய்ப்பாக இது அமைந்தது.

அந்த வகையில் இந்தப் போராட்டம் வெற்றியே.

★ ★ ★

இந்தப் போராட்டம் ஒரு தன்னெழுச்சி இதற்கு தன்னெழுச்சிகளுக்கேயுண்டான பலவீனங்கள் உண்டு. அவை ஒரு தலைமைக்கு கீழோ கூட்டுத் தலைமைக்கு கீழோ ஒன்று திரளா விட்டால் அது எந்த வகையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கவனிக்க முடிகிறது.

மேலும் ஏனைய சில விவாதங்கள் தொடர்பில் எழுத்தாளர் சயந்தன் தனது முகநூலில் எழுதிய சில குறிப்புகள்.


**1.** சல்லிக்கட்டுத் தொடர்பாக நான் அறிந்த வரையில் ஓர் உரையாடலாகவாவது அந்த விளையாட்டில் சாதிக் குழுக்களின் சார்பும் பங்கும் இருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழகத்தின் அண்மையை போராட்டம், இந்த விளையாட்டில் ஒட்டிக் கொண்டிருந்த சாதியை சிதையைச் செய்திருக்கிறது. அல்லது சாதியிலிருந்து இந்த விளையாட்டை மீட்டெடுத்திருக்கிறது. இதனை குறித்த அந்த சாதியக் குழுக்கள் எப்படி எதிர் கொள்ளப் போகின்றன என்பதுவும் அதற்கு தமிழ்க் கூட்டம் எவ்வாறான பதிலடியைக் கொடுக்கும் என்பதையும் - தற்காலிகத் தடை/ நிரந்தரத்தடை - தீவிரம் குறைந்தபிறகு காண முடியும் என நினைக்கிறேன்.

**2.** இதுவரையிருந்த தலைமைத்துவ வடிவத்தை இப்போராட்டம் முழுவதுமாகப் புரட்டிப்போட்டிருக்கிறது. தலைமையென்பது முன்னால் நின்று இழுத்துச் செல்வதல்ல, குழுச் செயலை ஊக்குவிப்பது என்பதாக அது மாறிவிட்டிருக்கிறது. தலைத் துவக் குணாதிசயம் என்பது ஓர் அரூபமாகிவிட, பங்கேற்பு என்ற ஒன்று மட்டுமே இப்போராட்டத்தைக் கட்டுக்குலையாமல் வைத்திருக்கிறது.

**3.** தம்மை ஆளும் அரச இயந்திரத்திற்கு எதிராக, தாம் எதிர்கொள்ளும் நாளாந்த வாழ்வியல் பிரச்சனைகளுக்காக, விவசாயிக்காக, தண்ணீருக்காக, புறக் கணிப்புக்கு எதிராக, மொழிக்காக, இனத்திற்காக, ஈழத்திற்காகவென தம் ஆவேசமான குரலை எழுப்புகிற ஒரு மேடையாக, சல்லிக்கட்டை ஒரு குறியீடாகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு பெரும் சனத் திரளைத்தான் நான் காண்கிறேன். அதில், எப்பிடி நான் தண்ணீர்ப் போத்தல்களை விநியோகிப்பதற்கு மட்டுமே வந்தேன் என்று சொன்னாரோ, அப்பிடியே தனியே சல்லிக்கட்டிற்காக மட்டும் வந்தவர்களும் இருந்திருக்கலாம். அவர்களே விலகிச் செல்கிறார்கள்.

**4.** இந்தப்போராட்டம் அரசுக்கும், ஓட்டரசியல் செய்கிற கட்சிகளுக்கு மட்டும் அச்சத்தைத் தரவில்லை. தமக்கே தமக்கான கருத்தியல்களுக்காக மட்டும் சனம் திரள்வதே போராட்டம் என நம்பப் பிரியப்படும், முற்போக்கான சிந்தனையாளர்கள் என தம்மை அடையாளப்படுத்தும், போராட்டம் என்றாலே அது தம்முடைய வேலைதான் எனப் பாரம் சுமக்கும், சிலரையும் அச்சப்படுத்தியிருக்கிறது. கேலி செய்வதைப் போல அவர்கள் பேசிக் கொண்டாலும், உள்ளூரும் அவர்களுடைய அச்சத்தையும் பதறலையும் நான் மனதார ரசிக்கிறேன்.

**5.** சல்லிக்கட்டுக்கு ஆதரவதாக ஈழத்தில் நடந்த போராட்டங்களின் வழியாக நிகழ்த்த முனையும் ஒரு நடவடிக்கையை நான் ஏற்புடையதாக விளங்கிக் கொள்கிறேன். வெகுசனப் போராட்டங்களுக்கு கொலையையே பதிலாகப் பெற்ற ஒரு நாட்டில், அப் போராட்ட அனுபவம் இல்லாத ஒரு புதிய தலைமுறையிடம், ஒப்பீட்டளவில் ஆபத்துக் குறைந்த ஒரு விடயத்திற்காக தெருவில் இறங்கச் சொல்வதன் ஊடாக பங்கேற்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதே அது. அதை உணர்த்திவிட்டால், பின்னர் எதில் பங்கேற்பது என்பதை அவரவர் தம் தேடலுக்கூடாக தெரிவு செய்துகொள்வார்கள் என்ற வாதத்தைப் புரிந்துகொள்கிறேன்.''



# கீரை பிட்டு

ஈழத்திற்கு உரித்தான உணவுப் பண்பாட்டு முறைகளில் கீரைப் பிட்டு முக்கியமானது. கீரை வகைகளையும் காய்கறிகளையும் சேர்த்து கீரைப்பிட்டு அவிக்கப்படும்.

கோதுமை மா அல்லது அரிசிமா இரண்டும் கலந்து கீரைப்பிட்டு அவிக்கும் வழக்கம் உள்ளது. கீரைப்பிட்டு பெரும்பாலும் நீற்றுப்பெட்டியில் அவிக்கப்படும் ஒன்றாகும். ஆரோக்கியம் மிக்க உணவு வகைகளுள் கீரைப்பிட்டுக்கு முக்கிய இடமுள்ளது.

எல்லா வகைக் கீரைகளையும் இதில் பயன்படுத்த இயலும். மர பார்ந்த உணவுகளை சமைத்து உண்ணும் பழக்கத்தை விட்டு விலகும் நம் சமூகம் மீண்டும் இவ்வாறான சுவையும் ஆரோக்கியமும் மிக்க உணவு பழக்கவழக்கங்களுக்குத் திரும்ப வேண்டும்.



நடைவண்டி என்பது குழந்தை பிறந்து, பின்னர் தவழ்ந்து, நிற்கத் தொடங்கிய பின்பு நடை பயில்வதற்காகப் பயன்படுத்தப்படும் விளையாட்டு உபகரணமாகும். மரத்தால் செய்யப்பட்டு மூன்று சக்கரங்களுடன் மெது வாக தள்ளிக் கொண்டு செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். தற்போது நடை வண்டிக்குப் பதிலாக புதிய வடிவிலான பொருட்கள் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கி விட்டது. இதனால் நடை வண்டியின் பயன்பாடு இல்லாமல் போய்விட்டது. எனினும் இப்போதும் சில கிராமங்களில் நடைவண்டி பயன்பாட்டிலுள்ளது.

# அரிக்கன் சட்டி

அரிசி களைய மண் அரிக்கன் சட்டியை பாவித்தனர். உட்புறம் வளையங்களாக வரி வடிவங்களால் செய்யப்பட்டிருக்கும். தற்போது வெண்கலம், ஈயச் சட்டிகள் பாவனையில் உள்ளன. அரிசியில் கலந்திருக்கும் கல்லை நீக்க அதனை அரிக்கன் சட்டியில் இட்டு அளவாக தண்ணியை விட்டு மெதுவாக அசைத்து எடுக்கும் போது பாரம் காரணமாக கல் அரிக்கன் சட்டி உட்புறமுள்ள வரிகளில் நிற்க அரிசி மட்டும் தண்ணியுடன் வடிக்கப்பட்டு விடும்.



இது அரிசியை அரிக்க மட்டுமில்லை உழுந்து போன்ற ஏனைய தானியங்களில் உள்ள கல்லை நீக்குவதற்கும் பயன்பட்டது. இன்று கல் கலந்த அரிசியை சரியாக அரிக்காமல் பாவித்து கல்லடைசல் போன்ற உபாதைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எம் முன்னோர்களின் பாரம்பரியத்தில் ஆரோக்கிய விடயங்கள் நிறைந்திருந்தன. ஆனால் நாம் இவற்றையெல்லாம் நாகரிகத்தின் பெயரால் மறந்துவிட, தீராத நோய்களுக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

# மண் பானை



ஒடுங்கிய கழுத்தும் உருண்டையான அடிப்பாகமும் உடைய பாத்திரமே பானை. களிமண்ணிலிருந்து தயாரிக்கப்படும் இது நீர் மற்றும் பொருள்களை சேமிக்கப் பயன்படுகின்றது. தமிழர்களின் வாழ்வியலில் முன்னர் 69 பானை வடிவங்கள் பயன்பாட்டில் இருந்தன. தற்போது ஓரிரண்டு வடிவங்களே எஞ்சியுள்ளன.

# சேர். முத்துக்குமார சுவாமி




இலங்கை சட்ட சபையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகப் பதவி வகித்து 17 ஆண்டுகள் சேவை புரிந்தவர்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தை குமாரசுவாமி முதலியார் முதலாவது தமிழ்ப் பிரதிநிதியாக இருந்தவர். சேர். முத்து குமாரசுவாமியின் புதல்வரே கலாயோகி ஆனந்த குமாரசுவாமி.

முதன் முதலில் சைவ சித்தாந்தத்தை ஆங்கிலேயருக்கு விளக்கியவர் முத்து குமாரசுவாமியே. 1857 ஆம் ஆண்டு மாட்சிமை பொருந்திய ஆசியச் சங்கத்தின் (Royal Asiatic Society) இலங்கை கிளையில் "சைவசித்தாந்த சுருக்கம்" எனும் கட்டுரையை வாசித்து விளக்கியுள்ளார். இக்கட்டுரை அச்சங்கத்தினால் பிரசுரிக்கப்பட்டது.

இளம் வழக்கறிஞரான முத்துக் குமாரசுவாமி தமது 24 ஆவது வயதில் இக்கட்டுரையை எழுதி அச்சபையில் விளக்கியுள்ளார். 1860 ஆம் ஆண்டு "இந்து சமயம்" என்ற கட்டுரை அதே சபையில் வாசிக்கப்பட்டு சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

இங்கிலாந்து வழக்கறிஞர் (Barrister) ஆவதற்காக இங்கிலாந்துக்கு அவர், சென்ற போதும் தமது சமயத்திலும் தத்துவத்திலும் இருந்த ஈடுபாடு அவருக்கு குறையவில்லை.

அரிச்சந்திரனின் கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நாடகமாக்கி ஆங்கிலேய நடிக, நடிகைகளுடன் அவர் அரிச்சந்திரனாக நடித்து அரச சபையில் மேடையேற்றினார். விக்டோரியா மகாராணியாரால் "சேர்" பட்டம் முத்துக் குமாரசுவாமிக்கு வழங்கப்பட்டது.

ஆங்கில மொழிப் பேச்சுத் திறனுக்கும் நடிப்புக் கலைக்குமாக அவருக்கு இந்தக் கௌரவம் கொடுக்கப்பட்டதாக இலண்டனில் வெளிவந்த Illustrated London News பத்திரிகை தகவல் வெளியிட்டது. ஆசியாவிலேயே முதன் முதல் "சேர்" பட்டம் பெற்றவர் என்ற பெருமைக்கு முத்து குமாரசுவாமியே உரித்தானவர்.



'அரிச்சந்திரன்' நாடகமாக்கப் பட்டுப் பிரசுரிக்கப்பட்டபோது அதன் பின்னிணைப்பாக 'சைவ சித்தாந்த சுருக்கம்' என்ற கட்டுரை சேர்க்கப்பட்டது. சேர் முத்துக் குமாரசுவாமி இலண்டனில் உள்ள கலைக் கூடங்களில் (Arts Councils) தொடர்ச்சியாகச் 'சைவ சித்தாந்தம்', 'இந்தியத் தத்துவம்' என்பன தொடர்பாக சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். சேர் முத்துவின் ஆங்கிலச் சொல்லாட்சியை மெச்சிய ஆங்கிலேயர்கள் அவரை "கிழக்கின் மிகச் சிறந்த நாவன்மை படைத்தவர்" (The Silver tongued Orator of the East) என்று அழைத்தனர்.



அனுதினன்

இம்முறை ஏறுதழுவுதல் தடையானது இப்படியொரு விஸ்வரூபத்தை எட்டுமென, கடந்த பத்து வருடங்களாக ஏறுதழுவுதலுக்கு ஆதரவாகவும், எதிராகவும் போராடி வருகின்ற எவருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

கடந்த 17ஆம் திகதி, அலங்கா நல்லூரில் இடம்பெறும் ஏறுதழுவுதல் அறவழி போராட்டத்திற்கு ஆதரவாகவும், அன்றைய தினமே காலையில் அலங்கா நல்லூரில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரியும் குறைந்தது 10 பேரைக் கொண்டதாகவே இந்த போராட்ட வடிவம் மெரீனாவில் ஆரம்பித்தது. நேரம் செல்லச் செல்ல, இணைய உதவியுடன் போராட்ட வடிவம் தொடர்பில் பகிரப்பட்ட தகவல்களும், தமிழகம் முழுவதும் உள்ள ஏனைய இடங்களிலும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கிடைத்த ஆதரவும், மெரீனா கடற்கரைக்கு ஆயிரக்கணக்கானோரை கொண்டு சேர்த்ததுடன், "போராட்ட வலுவை குறைவடையச் செய்யாமலிருப்பதில் மிகப்பெரும் பங்காற்றியது" என சொல்லலாம்.

சாதாரணமாக, சென்னையில் இடம்பெறுகின்ற போராட்டங்கள் எல்லாம் சில மணிநேரங்களிலேயே முடிந்துவிடும். காரணம், நகரச் சூழலுக்குள் சிக்கி நேரத்தின் பின்னால் ஓடிக்கொண்டு இருப்பவர்களுக்கு இதற்கான தனியான நேரம் எதுவுமே இருப்பதில்லை. அதுதான், தமிழக அரசு மற்றும் சாதாரணமானவர்களினதும் கணிப்பாக இருந்தது. ஆனால், "நாட்கணக்கில் இந்த போராட்ட வடிவம் நீளும்" என்பதனை எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. இதுதான், தமிழகம் முழுவதும் போராட்டங்கள் தொடர்ந்தாலும், உலகமக்கள் அனைவரையும் மெரீனாவை திரும்பி பார்க்க வைத்ததுடன் இன்று உலகமக்களின் முக்கிய பேசு பொருளாகவும் மாற்றியிருக்கிறது.

## மெரீனா போராட்டத்தின் சிறப்பு என்ன?

மெரீனா போராட்டத்தின் மிகப்பெரிய சிறப்பம்சமே, "இந்த போராட்ட வடிவம் எந்த தலைமையும் முன்னின்று ஒழுங்கமைத்தது அல்ல என்பதுதான்" இதற்கு என உத்தியோக பூர்வ ஒழுங்கமைப்பாளரோ அல்லது தொடர்பாளர்களோ இல்லை. இருந்தும், அனைவரையும் ஒரே புள்ளியில் இணைத்து வைத்திருக்கிறது இப்போராட்டம். அனைவரையும் கட்டுக்கோப்புடன் இயங்கச் செய்தது. எந்த நிகழ்ச்சிநிரலும் இல்லாத போதிலும், அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதனை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தது. எந்த தீர்மானத்தை ஏற்பது, எதனை யெல்லாம் நிராகரிப்பது என்கிற ஏற்பாடுகள் எதுவுமே இல்லாதபோதும், அவை கலந்தாலோசிக்கப்பட்டு ஒருமித்த குரலாக மாற்றம் செய்யப்பட்டது. இந்த போராட்டத்தின் ஒட்டுமொத்த சிறப்பம்சமே இதுதான்.

## வெற்றிக்கான காரணம்

இந்த போராட்டத்தின் தொடர் வெற்றிக்கு காரணம், இந்த போராட்டத்தின் போக்கினை நன்குணர்ந்து அதனை இடையிடையே வழிநடத்தியவர்கள் அல்லது அதன் போக்கில் மாற்றம் ஏற்பட்டு விடக்கூடாது என கண்காணித்தவர்கள் எனலாம்.

மெரீனா போராட்டத்தை நன்கு அவதானித்தவர்களுக்கு புரிந்திருக்கும், போராட்டம் ஆரம்பித்த முதல் நாள், அதன் நோக்கமாக ஏறுதழுவுதல் நிகழ்வை மீண்டும் நடத்துவது மற்றும் அலங்கா நல்லூரில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதாகவே இருந்தது. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் மக்கள் எண்ணிக்கை அதிகமாக, அவர்களுடன் சேர்ந்து நோக்கங்களும் அதிகரித்தன. குறிப்பாக, "பீட்டா அமைப்பை தடை செய்ய வேண்டும், தமிழக அரசை எதிர்க்க வேண்டும், பாஜக அரசையும், மோடியையும் விமர்சிப்பது" என பல்வேறு வகையில் நோக்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனையடுத்து ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டு, கார்த்திகேய சிவசேனாதிபதி, ஹிமாகரன், பி.ஆர். ஐயா ஆகியோர் சார் குழுவும், சமூக பணிகளில் அதிகளவில் பங்காற்றும் "ஆர். ஜே பாலாஜி, ஹிப்கோப் தமிழா" போன்றோர் போராட்டத்தில் இருந்து வெளியேறினர். அவர்கள் வெளியேறிய பின்னர் பொலிஸ் தன் கோரமுகத்தைக் காட்டியது. தாமே வாகனங்களுக்கு தீ வைத்து விட்டு, அந்தச் சாட்டில் மாணவர்கள் மீதும் ஏனைய போரட்டக் காரர்கள் மீதும் தடியடியை நடத்தியது.

## மக்களைச் சேர்த்தது எது?

இன்றும் ஏறுதழுவுதல் பற்றி பேசுபவர்களுக்கும், மெரீனாவில் கூடியிருந்த இளைஞர்-யுவதிகளை பார்க்கும்போதும் வருகின்ற தவிர்க்க முடியாத சந்தேகம், தனியே இவர்கள் ஏறுதழுவுதலுக்காக மட்டுமே சேர்ந்து இருந்தார்களா ? இந்த கோரிக்கைகள் நிறைவேற்றபட்டம் பின்னர் ஒன்று சேர்ந்த மாணவர் சக்திக்கு என்ன ஆகும்? என்பதே!



# மெரீனா ஏறுதழுவல் எழுச்சி

முதலில், "ஏறுதழுவுதல் என்கிற விடயத்திற்காக மட்டுமே இங்குள்ளவர்கள் இணைந்து நின்றார்கள்" என நினைக்கிறீர்களா? அது தவறு. இந்த போராட்டத்தின் முதன்மைப்படுத்தலான ஏறுதழுவுதல் ஒரு குறியீடு மாத்திரமே! தொடர்ச்சியாக, பல்வேறு சந்தர்ப்பங்களில் தவிர்க்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்தவர்கள், சொந்த அரசினாலேயே தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டவர்கள், யார் மேலும் எதற்காகவும் நம்பிக்கை வைக்க முடியாத நிலையில் இருப்பவர்கள் என அனைவருமே ஏறுதழுவுதல் என்கிற பெயரால் இணைந்து இருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு ஒடுக்கப்பட்ட தோல்வி அல்லது ஏமாற்றபட்ட வேதனை மனதுக்குள் இருக்கும். அவை எல்லாவற்றுக்கும் தீர்வாக, ஏறுதழுவுதலின் வெற்றியை பார்க்க நினைக்கிறார்கள்.

அதாவது, "எல்லா பக்கங்களிலும்" தொடர்ச்சியாக ஒதுக்கப்படுகிறோம் என நினைப்பவர்களுக்கு, ஏதேனும் உந்து சக்தியாக, நம்பிக்கை தரும் ஒரு நிகழ்வு சாதாரணமாக இடம்பெறும்போது அது எதிர்பாராத வெற்றியை பெற்றுதரும். இதுதான், இம்முறை ஏறுதழுவுதல் அறவழி போராட்டத்திலும் நடந்திருக்கிறது.

## தொடருமா?

ஏறுதழுவுதல் அறவழி போராட்டம் இடம்பெற்ற "மெரீனா கடற்கரை" தனியே போராட்ட கோஷங்களை மட்டுமே கொண்டிருக்கவில்லை. மாறாக, போராட்டத்தில் இணைந்து கொள்பவர்கள் திறந்த கலந்துரையாடல் ஊடாக பல்வேறு விடயங்களை விவாதிக்கும் இடமாக மாறியிருந்தது. குறிப்பாக, இயற்கை விவசாயம், காவேரி நீர் பிரச்சினை, கறுப்பு பண நிகழ்ச்சி நிரல், வெளிநாட்டு குளிர்பானங்கள், தமிழ் நாட்டின் அரசியல் மற்றும் லஞ்ச ஊழல் என்கிற தலைப்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மேடை நாடகங்களுக்கு உயிர்கொடுக்கப்பட்டது. பாரம்பரியக் கலைகளை ஒருமுறை மீட்டியும் பார்த்து கொண்டார்கள். இவை அனைத்துமே, அடுத்தடுத்த கட்டநகர்வுகளுக்கு எல்லோரையும் தூண்டுவதாக அமையக் கூடும். குறைந்தது, பிரச்சனைகளை பற்றி பேச வேண்டும் என்பவர்களுக்கும், அதற்கான விடயங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பவர்களுக்கும் ஒரு உத்வேகமாக இது நிச்சயம் அமையும்.

## இந்தியாவுக்குக் கற்று கொடுத்தது என்ன?

இந்தியாவுக்கு, அதிலும் சென்னைக்கு பலமுறை பயணப் பட்டவன் என்கிற முறையில், அங்குள்ள மக்கள் மீது ஒரு வகையான கோபம் எப்போதுமே எனக்குண்டு. அவர்கள் தங்களைச் சுற்றி நடப்பதைப் பற்றி பெரிதும் அக்கறை கொள்வதில்லை. "தமக்கான தேவை எப்படிப் பூர்த்தியானாலும் போதும், என்கிற மனநிலையில் ஓடிக் கொண்டிருப்பவர்கள். சாதரணமாக, கர்ப்பிணி தாய் பேரூந்தில் ஏறினால்கூட, யாரும் இடம்கொடாமல் நின்றுபயணிக்கின்ற நிலைதான் இருந்து வந்திருக்கிறது.

இப்படியான மனநிலையில் இருப்பவர்கள் எல்லாம் மெரீனாவில் ஒன்று கூடும்போது, போராடிவிட்டு அவர்கள் பாட்டுக்கு செல்வார்கள் என நினைத்த என்னைப்போன்றவர்களுக்கும், ஏனையவர்களுக்கு அங்கு இடம் பெற்றவை நிச்சயம் விசித்திரமாகத்தான் இருக்கும்.

குப்பையான நகரங்களில் சென்னையும் ஒன்று என்றுதான் அங்குள்ளோரும், சென்று வருபவர்களும் சொல்வோம். ஆனால், இன்று மெரீனாவில் அறவழி போராட்டத்தின் போது, இளையதலைமுறையே ஒட்டுமொத்த கடற்கரையையும் சுத்தம் செய்து கொண்டிருந்தது. அதே இளையதலைமுறையே, "போராட்டம் எந்தவகையிலும் மக்களின் இயல்பு நிலை பாதித்துவிடக் கூடாது" என்கிற நோக்கில், வீதிப்போக்குவரத்தைச் சரிசெய்வதிலும், ஏனையவர்களுக்கு தடங்கல் இடம்பெறாதவகையில் போராட்டங்கள் இடம்பெறுவதையும் உறுதிசெய்து கொண்டார்கள்.

ஒவ்வொருநாளும் போதிய உணவு மெரீனாவுக்கு வந்து கொண்டு இருந்தது. யார் கொண்டு வருகிறார்கள். எங்கிருந்து கொண்டு வருகிறார்கள், கொண்டு வருபவர்கள் என்ன மதம், ஜாதி என்பது தொடர்பிலும் யாருமே கேள்வி கேட்டதில்லை. அதுபோல, வருகின்ற உணவுகளும் முறையாகப் பகிர்ந்தளிக்கபட்டது.

மதங்கள் இங்கொரு பிரச்சனையாகவே இல்லை. இஸ்லாமிய நண்பர்கள் அங்கேயே தொழுகைகளை நடத்தினார்கள். அதற்கு ஏற்றால்போல, போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கும் அமைதிகாத்தார்கள்.

ஆண் என்பவன் பெண்ணுக்கு தனியாக எதனையும் செய்யவேண்டியது இல்லை. சகமனிதனுக்கு கொடுக்கிற அதே மரியாதையை பெண்ணுக்கு கொடுத்தாலே போதுமானது. ஆனால், இந்தியாவில் அந்நிலை மிக மோசமாக உள்ளது. இதனால், மெரீனாவில் ஒவ்வரு ஆணும், பெண்ணுக்கான உரிய மரியாதையை வழங்கியது ஆச்சரியமாகப் பார்க்கபட்டது. நள்ளிரவிலும், பெண்கள் துணிவாக அங்கிருப்பது சிலாகித்து பேசப்பட்டது. கூடவே, அறவழியைத் தாண்டி எவ்வித பிரச்னைகளையும் ஏற்படுத்தாத வகையில் போராட்டத்தை முன்னெடுத்தமை ஏனைய இந்தியர்களுக்கும், இதுவரை போராட்டம் செய்து வந்தர்களுக்கும் ஒரு பாடமாகவே மாறியிருக்கிறது என சொல்லலாம்

ஒட்டுமொத்தத்தில், இதுவரை தேர்தலில் மட்டுமே மக்களின் பேச்சினை கேட்டு நடக்கின்ற அரசியல்வாதிகளை எல்லாம் மக்களின் குரலை கேட்கவைத்திருக்கிறது. "அரசியல் தலைமைகளே இல்லாமல், ஒரு போராட்டத்தை வழி நடத்தி, அதில் வெற்றியும் பெறமுடியும்" என்கிற நம்பிக்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். "கேட்டால் கிடைக்கும்! கேட்க வேண்டியதை, கேட்க வேண்டியவர்களிடம், கேட்பவர் கேட்டால், நிச்சயம் கிடைக்கும்" என்பதனையும் இந்த அறவழிப் போராட்டம் உணர்த்தி இருக்கிறது. "எல்லாமே, மக்களிலிருந்துதான் கட்டியமைக் கபடுகிறது" என்பதனை மீளவும் தமிழக மக்களுக்கு இந்த மெரீனா உணர்த்தி இருக்கிறது.

ஏறுதழுவுதல் அறவழிப் போராட்டத்தின் வெற்றி, இனி தமிழகத்தின் ஏனைய பிரச்சினைகளுக்கும் நம்பிக்கையான புதிய கதவுகளை நிச்சயமாக திறக்கும். ஆனால், அதுவும் இதே போன்ற வீரிய தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே எல்லோரு டைய அவாவாகும்.

இனி ஒவ்வரு முறையும், மெரீனாவை கடந்துசெல்லும்போது, அது தனியே அழகிய கடற்கரையாக மட்டுமே தெரியப் போவதில்லை. மாறாக, "எதனையும் ஒன்றுசேர்ந்தால் சாதிக்கலாம்" என்பதற்கு அடையாளமாகவும் இருக்கப் போகிறது.



# அழுகுணிக் குமாரர்களும் 'விக்கிரமனிசமும்'



| உமாஜி




"ஹொரர் செண்டிமெண்ட் ஃபமிலி டிராமா" பாணியிலான திரைப்படங்கள் முன்னொரு காலத்திலே தமிழில் சரமாரியாக வெளிவந்துகொண்டிருந்தன. எனக்குத் தெரிந்தவரையில் தொண்ணூற்று ஆறு தொடக்கம் இரண்டாயிரம் ஆண்டு வரையிலான காலப்பகுதி அவ்வகைத் திரைப்படங்களின் பின்னைய பொற்காலம் எனலாம்.

ஆரம்பகாலத்தில் தமிழ் சினிமா கேட்சி ஊடகமாக இருந்தது. பின்னர்தான் காட்சி ஊடகமாக மாறியது என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பார்க்காமலேயே கேட்டுணரும் பாணியிலானவை அவை. ஊரின் சிறுவயது ஞாபகம் உங்களுக்கும் இப்போதும் இருக்கக் கூடும். "இசைத்தமிழ் நீ செய்த அரும் சாதனை.." பாடல் முடிந்ததும் 'டிர்ர்ர்ர்ர்..றி...ய்ங்..' என்கிற இசையில் திருவிளையாடல் படத்தின் காட்சி மாறிவிட்டதை நாம் கோவில் திருவிழா குழாய் ஸ்பீக்கரில் கேட்டே அறிந்துகொண்டோமல்லவா?

பின்னைய காலத்தில் தமிழ் சினிமாவும் காட்சி ஊடகமானாலும் மறுபடியும் அவ்வப்போது யாராவது வந்து பழையபடி கையைப் பிடித்து இழுத்துச் செல்வதுண்டு. ஹொரர் செண்டிமெண்ட் ஃபமிலி டிராமா அநேகமாக அந்தப் பணியைச் செய்தது.

யாழ்ப்பாணத்தின், வன்னியின் மின்சாரமில்லா காலங்கள், வவுனியாவின் 96,97 களின் இடப்பெயர்வு இடநெருக்கடிக் காலங்கள், யாழ்ப்பாணத்தின் 97 களுக்குப் பின்னைய 2000 வரையான மின்சாரப் பற்றாக்குறையிருந்தது. காலகட்டங்களில் படம் பார்ப்பது என்பது ஒரு சடங்கு. அது போலவே படம் கேட்பது என்பது அதனோடு இணைந்த ஒரு சம்பிரதாயம். ஒரு வீட்டில் படம் ஓட்டுவித்தால் சுற்றுச் சூழலில் ஆறேழு வீடுகளுக்கு படம் கேட்கும். அந்தப் படங்களில் இப்படங்கள் முக்கியமானவை. இப்போது இந்தப் படங்களின் இசை குறித்த முக்கியத்துவம் புரிந்திருக்கும்

### விக்கிரமனின் 'லாலா லாலா'

தமிழின் ஹொரர் செண்டிமெண்ட் ஃபமிலி டிராமா பாணியிலான திரைப்படம் உங்கள் அயல் வீடுகளில் ஒளிபரப்பிய காலத்தைச் சற்று நினைவு கூருங்கள். ஓரிரு குரல்கள் தொடர்ச்சியாக இடைவிடாமல் பேசுகின்றன. வெவ்வேறு மோடுலேஷனில், ஏற்ற இறக்கங்களோடு, மூக்கை உறிஞ்சிக் கொண்டு, அழுதுகொண்டு, அரற்றிக் கொண்டு..மொத்தத்தில் பேசிக்கொண்டேயிருப்பார்கள். சிறிது இடைவெளி கிடைக்கும்போது இசையமைப்பாளர் "லாலா லாலால லாலா லாலால" இசைக்கோர்வையை ஒலிக்க விடுவார். இப்போது நாம் புரிந்துகொண்டிருப்போம், அவை இயக்குநர் விக்கிரமனின் படங்கள் என்பதை!

பின்னர் மீண்டும் பேச்சு. சில இடங்களில் பேச்சு சற்றுக் குறைவாக இசை அவ்வப்போது 'டுடுடிய்ங்..' சற்று நேரம் கழித்து இன்னொரு 'டுடுடிய்ங்..' - இது நகைச்சுவைக் காட்சி என்பதை நாம் நாலு வீடு தள்ளியிருந்தே புரிந்து கொள்ளலாம். இந்த இரண்டு வகை இசைக்கோர்வைகள் இந்தப் படங்களின் இசையின் அடிநாதம். எஸ். ஏ. ராஜ்குமார் என்பவர் இதில் சிறந்து விளங்கினார். இரண்டு இசைக் கோர்வைகள், ஐந்து பாடல்கள் மட்டுமே வைத்துக் கொண்டு பத்து வருடங்களுக்கு மேலாக, பல படங்களுக்கு இசையமைத்த அவர் திறமை அசாத்தியமானது என இப்போதும்கூட பலரும் வெகுவாகச் சிலாகிப்பதை நாம் பார்க்கிறோம்.

### நீதிக்கதைகளின் திரைவடிவம்

விக்கிரமனின் படங்களின் மையக்கருவை "உழைத்தால் நிச்சயம் உயர்வுண்டாகும்", "நல்லவனுக்கு நல்லதே நடக்கும் கெட்டவன் அழிந்துபோவான்", "ஒருவருக்குத் தீங்கு செய்தால் அவனைக் கடவுள் தண்டிப்பார்" என்கிற சிறுவர் நீதிக் கதைகளின் பெரியதிரை வடிவமாகக் கூடக் கொள்ளலாம். பார்ப்பவர்கள் யாரின் மனநிலைக்கும் தீங்கு விளைவிக்காத இவ்வகைத் திரைப்படங்கள் வெளிவந்தபோது ரி.வி சீரியல்களின் ஆதிக்கம் இப்போது போலில்லை. உண்மையில் பழக்கமில்லாமல் சடுதியாகப் பார்ப்பவர்களை மிக மோசமாக பாதிக்கும் இந்த வகை ரி.வி சீரியல்களை எப்போதாவது பார்க்க நேரிடுகையில் விக்கிரமனை நன்றியுடன் நினைத்துக்கொள்வதுண்டு.

நேர்மறைச் சிந்தனையை வளர்ப்பதில் அவர் படங்கள் பெரும்பங்காற்றியிருக்கின்றன. உதாரணமாக, புளியம்பட்டி டூ பொள்ளாச்சி தினமும் பேருந்தில் ஏற்றிச் செல்லும் அவ்வளவு பிரயாணிகளுக்கும் மாதமுடிவில் பெரிய சில்வர்குடம் பரிசளிக்க முடியுமா? என்றால் முடியும். அந்தப் பழைய பேருந்தை வந்தவிலைக்கு விற்றுவிட்டால் முடியும். ஆனால் பேருந்தையும் விற்காமல், சில்வர்குடமும் பரிசளித்து, பணக்காரராகவும் ஆகிவிடுவது எப்படிச் சாத்தியம்? (சூர்ய வம்சம்) இங்கேதான் இயக்குநரின் நேர்மறை அணுகுமுறையை உணர்ந்துகொள்ளலாம். அந்த நம்பிக்கைதான் விக்கிரமனின் படங்கள்!

### கண்ணீர்க் காதலர்களின் சுமைதாங்கி

அதனை விட விக்கிரமனின் படங்கள் நம் சமூகத்தில் தாக்கம் செலுத்தியது நம் அழுகுணிக் குமார்களின் அணுகுமுறையில் என்றால் அது மிகையல்ல!

நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் அழுகுணிக் குமார்களை நாமறிவோம். காலத்துக்குகேற்ப அவர்களின் அணுகுமுறைகள் மாறிக்கொன்டே இருந்தாலும் கொள்கையளவில் அவர்கள் எப்போதும் ஒரே மாதிரியானவர்கள்தான். "இந்தப் பெண்களே இப்படித்தான்" என்பதே அவர்களின் ஏகோபித்த தாரக மந்திரம். "பெண்கள் ஏமாற்றுப்பேர்வழிகள்" எனும் பொருள்பட 'ஃபேஸ்புக்' உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் கண்ணீரும் கம்பலையுமாக பதிவிட்டு வரும் அவர்களின் அன்றைய காலத்து ஒரே ஆறுதலாக விக்கிரமனின் படங்கள்தான் விளங்கின என்றே சொல்லலாம்.




அழுகுணிக் குமார்கள் காதலில் விழுந்துவிட்டதாக, அல்லது அப்படி அவர்களே நம்பத் தொடங்கும்போது, அவர்தம் கூட இருக்கும் நண்பர்களுக்கு ஏழரை ஆரம்பமாகிவிடும். சம்பந்தப்பட்ட பெண்ணிடம் தம் நிலையைச் சொல்ல எதுவித முயற்சிகளும் எடுக்காமல் ஒரு வகையினர். இவர்கள் இதயம் முரளியாகத் தங்களை பாவித்துக் கொள்பவர்கள். இன்னொரு வகை காதலைச் சொல்லி செருப்படி வாங்காத குறையாக அல்லது நண்பர்களாக இருப்போம் என்கிற பதிலைப் பெற்றவர்கள். இது செருப்படியை விட வீரியமானது (அதாவது பிஞ்ச செருப்பை சாணியில் முக்கி அடித்ததுபோல) எனினும் குமார்கள் அதனைப் புரிந்துகொள்ளும் அறிவோடு இருப்பதில்லை. ஒரு கௌரவமாகவே கருதிக் கொள்வர். நண்பர்களும் அப்படியே விட்டு விடுவார்கள்.

அதெப்படி சம்பந்தமேயில்லாமல், ஒருவர் காதலைச் சொன்னவுடன் நண்பனாகி விடுவார்? குமார்களின் (இனி அழுகுணிக் குமார்களைக் குமார்கள் என்றே அழைப்போம்) தொண தொண தொல்லையிலிருந்து தப்பிக்க பெண்கள் கைக்கொண்ட ராஜதந்திர ரீதியான உத்தி அது! சமயங்களில் ஒரு விசுவாசமான வேலைக்காரனாகவும், சிறந்த எடுபிடியாகவும் அவர்களை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒருவகையில் குமார்களின் நண்பர்களுக்கும் இந்த ஏற்பாடு ஆசுவாசத்தைக் கொடுத்தது என்பதே உண்மை.

### பதினெட்டாம் காதலும் ஒருமுறை பூத்த ரோஜாதான்

இவ்வாறான குமார்களைப் புத்துணர்ச்சி கொள்ள வைத்தது விக்கிரமனின் "பூவே உனக்காக" திரைப்படம். படம் வந்ததிலிருந்து குமார்களின் தோரணையே மாறிவிட்டது. தங்களைத் தியாகிகளாகவே நினைக்கத் தலைப்பட்டார்கள். ஆளாளுக்கு "காதல்ங்கிறது ஒரு செடியில் பூத்த ரோஜா மாதிரி..அது ஒருமுறைதான்" என்று பேசிக் கலவரத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த வாரமும் வரும்

# பனா

சிறுகதை

நஸீகா முகைதீன்

ராத்தா ஸ்விட்சை அணைத்ததும் அறை முழுவதும் ஒரு வகையான இருள் பரவியது. ஆனால் மிச்சமும் இருட்டு என்றும் சொல்ல முடியாது.ஏனென்றால் என் 'மெட்ராசு'க்குக்குப் பக்கத்தில் படுத்திருக்கும் ஆராவின் முகம் அத்தனை தெளிவாகத் தெரிந்தது.ஆரா என்றால் சரியான குழப்படிகாரி.குழந்தை என்பதை விட அவளை உன்மத்தம் எனலாம். வீட்டின் அத்தனை செயல்களையும் தீர்மானிக்கும் அமானுஷ்ய சக்தியாக அவள் மாறியிருந்தாள்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ராத்தா தூங்கி வடிந்தாள். நான் மொபைல் டேட்டாவை ஒன் செய்தேன். அவனிடமிருந்து இரண்டு வட்சப் மிஸ்ட் கோல்கள் வந்திருந்தன.

"ஹாய்"

பதில் வந்தது.

"எங்க போயிருந்த இவ்வளவு நேரமா?"

எரிச்சலாய் இருந்தான்.

"இன்னிக்கு ராத்தாட்ட வந்தன். அதான் கொஞ்சம் லேட்"

சொல்லாமல் வந்துவிட்டேன். மன்னிப்பு கேட்கும் சுபாவமும் எனக்கில்லை.இருந்தாலும் கோபிக்கும் ரகமில்லை அவன்.

"கண்மணி" என்றான். வழமையான காதல் எனக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லை.

"ம்ம் சொல்லு"

"என் நூற்றாண்டுத் தனிமையின்......"

எதையோ சொல்ல வந்தான். நான் சிரித்தேன். சில உணர்வுகளை மதிக்கத் தெரியதவளாய் சூழல் என்னை மாற்றியிருந்தது.

அவனது வெளிநாட்டு வாழ்க்கையை பற்றி எப்போதும் புலம்பிக் கொண்டிருப்பான். அவனுக்கு வெளிச்சத்தில் வாழப் பிடிப்பதில்லை. மிக அழகான விலை மதிப்பில்லாத அலங்கார விளக்குகள் இருந்தும் அவன் இருட்டையே விரும்புகிறவன்.

ஒரு நாள் அவனது அறையின் புகைப்படமொன்றை எனக்கு அனுப்பியிருந்தான். சுவரில் ஒரு படம் கொழுவப்பட்டிருந்தது.ஒரு அழகான விளக்கு. சுற்றியும் ஒளி கசிந்து கொண்டிருந்தது. பெரிய படுக்கை மீது கறுப்பு நிற இலைகள் போட்ட விரிப்பு. மெத்தைக்குப் பக்கத்தில் குட்டி மேசை. அதில் ஒரு தண்ணீர் கிளாசும், எச்.பி. லப்டப்பும் கொஞ்சம் புத்தகங்களும் இருந்தன. என்னவொரு ரசனை...

"ஒரு நாளைக்கு புரியும்டி என் காதல்"

"ஹி ஹி ஓகே"என்றேன்.

அவன் மீது எனக்குக் காதல் மட்டுமல்ல பக்தி இருக்கிறது.இத்தனைக்கும் நான் பேசித் திரியும் எல்லா கருத்துகளையும் துறந்து ஒரு இடத்தில் கடல் போல கசிகிறேன் என்றால் அவனிடம்தான். ஆனாலும் இது எதையும் நான் வெளிக்காட்டிக் கொள்ளப்போவதில்லை.

"இன்னிக்கு ஒரு மாதிரி இருக்கு. ப்ரசர் கூடிட்டு என்டு நெனக்கேன். கை எல்லாம் சிவரிங்"

"சரி குட் நைட்"

"ஏன்டி இப்படி பண்ற"

"பின்ன எப்ப பாத்தாலும் வருத்தம் தான் சொல்ற" அத்தோடு வட்சப் சட் ஒரு சரியைக் காட்டியது. அவன் ஒன்லைனில் இல்லை.

• • •

இந்தமுறையும் சட் ஒரு சரியையே காட்டியது.மெல்லமாக என்னை பதற்றம்,கோபம், ஆவேசம் என்பன ஊடறுக்கத் தொடங்கியிருந்தன. ஒருபோதும் இப்படி போகிறவனில்லை அவன். இவ்வளவு சீக்கிரம் தூங்கவும் மாட்டான்.

உடனே ஃபேஸ்புக் இல் இருக்கிறானா எனப்பார்த்தேன். 'அக்டிவ் டென் மினிட்ஸ் எகோ' என்று காட்டியது. அதே பத்து நிமிடத்திற்கு முன்பு தான் தன்னுடைய நண்பனின் புதிதாக அப்டேட் செய்யப்பட்ட ப்ரோபைல் பிக்சருக்கு ஒரு 'கொமண்ட்' போட்டு இருந்தான்.

அவன் நிலை பற்றியோ அல்லது அவன் நண்பர்கள் பற்றியோ எனக்குப் பெரிதாகத் தெரியாது.அவன் குடும்பம் பற்றியும் தெரியாது. இத்தனைக்கும் அவன் வட்சப் நம்பரையும் நாலைந்து போட்டோக்களையும் தவிர அவனின் எதுவும் என்னிடம் இருக்கவில்லை.

கொஞ்ச நாளாகவே ராஜேஷ் குமாரின் 'க்ரைம்' நாவல்கள் படித்து வருகிறேன். கூடவே சுஜாதாவின் கதைகள் வேறு. எல்லாம் சேர்ந்து இப்போது என்னை டிடெக்டிவ் ஆக மாறச்



சொல்லிக்கொண்டு இருந்தன.

திக் திக் என நொடிகள் அடித்துக்கொண்டு இருந்தன. ஒருவேளை வருத்தம் சீரியஸ் ஆகி இருக்குமோ அல்லது ஏதாவது தூக்க குளிசைகள் போட்டு இருப்பானோ அல்லது மரணம்..

அந்த வார்த்தைதான் எத்தனை மடத்தனமானது.சின்ன விடயம் அவன் வட்சப்பில் இல்லாதது. ஒருவேளை ஒபிஸ் வேலைகளை செய்து கொண்டிருக்கலாம்.

ஆரா எழுந்திருந்து அழுதாள்.

"என்னடா" என்றேன்.

"உம்மா அடிச்சிப் போட்டா"

இடைக்கிடையே அவள் இரவுகளில் இப்படித்தான் எழுவாள். அத்தோடு இன்று அவளின் கரைச்சல் தாங்காமல் கன்ஜூரிங்கில் வரும் "வலக்" இனை வேறு காட்டி பயமுறுத்தி இருந்தேன்.

"சரி கிட்ட வா அடிப்பம் உம்மாக்கு" என்றபடி அவளை படுக்க வைத்து தட்டிக் கொடுத்தேன். அவள் படுக்கையை நனைத்திருந்தாள்.இருந்தாலும் தூக்கத்தில் குழப்பாமல் அப்படியே விட்டு விட்டேன்.

"கனவுகள் போல மழை துளித் துளியாக விழுகிறது

இரண்டு பருவகாலத்தின் வானிலை நிமிடங்கள்

கடைசியாக நெருங்குகின்றன"

நான் எழுதிய கவிதைகளே மீண்டும் மீண்டும் என்னைக் குடைந்து கொண்டிருந்தன.மரணம் என்பதை விட காதலுக்கு வேறெந்த கொடுமையுமில்லை.

கடைசியாக ஒரு வழி பிடிபட்டது. இன்ஸ்டாகிராமில் இருக்கிறானோ என பார்த்து விடலாம். அதிலும் நிறைய சிக்கல் இருக்கிறது.ஏனென்றால் இன்ஸ்டாகிராமில் அக்டிவ் காட்டாது. ஆனாலும் குருட்டு நம்பிக்கையில் ஒரு மெசேஜ் போட்டேன். அதுவும் தோல்விதான்.சீன் என்பது அங்கும் காட்டவில்லை.சரி அவனது 'பலோயிங்' இல் யார் போட்டோவிற்காவது லைக் போட்டிருந்தால்.. என் கடைசி மெழுகுவர்த்தி மெல்ல அணைந்தது.

"மேகத்தின் மேலே

கால்கள் இருக்கும் போது

நான் வாழ்ந்து

முடித்து விட்டேன்"

எனக்கு கைகள் மெதுவாக நடுக்கம் பிடித்தது.நேரம் மூன்று மணிக்கு மேலே இருக்கும்.என் கண்கள் முழுவதும் ஏதோ வடிந்து கொண்டிருந்தது. தொழில்நுட்ப உலகில் மீதான பிடிப்பில் நான் தொலைத்தவை எல்லாம் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன.

நாளை முதல் அவன் இல்லாமல் வாழ வேண்டுமா. சாத்தியமே இல்லாத ஒன்றை நான் விவாதித்துக் கொண்டிருந்தேன்.

"அடி சண்ட புடிக்காத. நான் இல்லாட்டி வெளங்கும் உனக்கு. 'குயிக்'காவே நான் செத்துடுவண்டி. அவொய்ட் பண்ணாத இருக்கும் வரைக்குமாவது"

எனக்கு ஒரு யோசனை உதித்தது. "அவன் முகநூல் பக்கத்தில் பதிவொன்றிற்கு அந்தக் கொமண்ட்!!"

அதேதான் என்றபடி வேகமாக அந்த பதிவை தேட ஆரம்பித்தேன்.

"ஏழு வண்ணத்திலான

காதலின் கடைசி நிறம்"

இன்று ஞானமடைந்திருந்தேன். முன்னைய ஆறு நிலைகளும் சந்திக்க முன்னமே என் நேசம் கடைசி மவ்த் நிலையை அடைந்தது. என் அலட்சியங்கள் ஒட்டுமொத்தமும் அவன் எனும் ஒன்றில் சுயமழிந்து கொண்டிருந்தது.

மிக நீண்ட சிரமத்தின் பின் அந்தப்பதிவு கண்களில் பட்டது.அதில் அவனது முன்னைய காதலின் வலியை எழுதியிருந்தான்.

"என்போல ஒரு குருடனின் காதலி அவள்

இன்னும் ஏகன் ஒருவனின் படைப்புக் கருவி அவள்"

உண்மைதான். பெண் படைப்பின் கருவியாக இருக்கிறாள். வேற்றுமை போல இறைவன் கர்த்தாவாக இருக்க மனிதன் அவனின் பிரதிநிதியாக இருக்கிறான்.பெண் கருவியாக இருக்கிறாள்.உயிரொன்று அடைகாக்கப்படுவதற்கான கர்ப்ப அறை அவளுக்குள்தான் வைக்கப்பட்டுள்ளது. கருவை உருவாக்குதல் அவளுக்குள்தான் நடைபெறுகிறது.

என் பெயரில் கூட ஒன்று சேர்த்தல், இணைதல், தழுவுதல் என்னும் அர்த்தங்கள் உண்டு. பெண் என்பவள் ஆணுடன் இணைவதற்கானவள். இது உலகின் முதல் பெண்ணின் பெயரானது. இல்லை ஒட்டு மொத்தப் பெண்களுக்கும் இது பொருந்துகிறது.

ஆதிப்பெண்ணின் பெயரின் சொல்லின் மூலத்திலிருந்து உண்டாகும் இன்னொரு சொல் விளக்கமானது வெட்கம், நாணம். நாணம் பெண்ணின் சிறந்த குணங்களில் ஒன்று. அவள் பருவமடைதலில் இருந்து இன்னும் அதிகரிக்கின்றது.

நான் பெண்ணை ஆசை, காற்று, உயிர், நிலைத்திருப்பு எனும் நாலு கோணங்களில் பார்க்கிறேன். ஆனால் அவன் எப்போதும் என்னை நறுமணம் என்று சொல்லிக்கொண்டு இருப்பான்.

"ஆனா நறுமணம் கூட காற்றுத்தானேடா"

"இருக்கலாம் ஆனா எல்லாக்காத்தும் வாசனையில்லையடி"

ஒரு இக்கட்டான நிலையிலும் எனக்கு இத்தனை சித்தாந்தம் தோன்றுகிறது என்றால் அவனால்தான். அந்தளவு பெண் தொடர்பில் அவனுக்குப் பற்று இருந்தது.

அந்தப் பதிவின் கீழே ஒரு 'கொமண்ட்' பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"மச்சான் கவலைப்படாதே. ஒன் த வே டு ரூம்"

அப்படி என்றால் அவன் பற்றி தெரிந்த நண்பனை கண்டுபிடித்து விட்டேன். உடனேயே மெசேஜ் ஒன்றை தட்டி விடலாமா?

வேண்டாம். ரகசியமான பெண்போல காதலும் ஒருவகை ஒலிதான். அது எல்லா இடத்திலும் கேட்கும் போது செவிட்டுத்தன்மை அடைந்துவிடும். இறைவனின் வேதத்தில் மட்டுமே இறைவனை நினைவு கூறும் செவிடர்களுக்கு படைப்பின் ஒலிகள் அவனை ஞாபகமூட்டுவதில்லை. அவர்களின் இதயத்தில் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது.

பரவாயில்லை போட்டுப் பார்ப்போம் என டைப் செய்கிறேன். உடனேயே லோக்கல் குறுஞ்செய்தி ஒன்று கிடைத்தது. அதில் டேட்டா முடிந்தது விட்டதாக அறிவித்தல் இருந்தது.

இந்த இரவு என்னை மெல்லக் கொல்கிறது. இந்த சைபர் உலகில் உறவுகள் ஏன் காதலே இறந்து விட்டது. இன்று என் உயிர் காணாமல் போய்விட்டாலும் அதை தேடுவதற்கு கூட என்னிடம் அன்பும், ஆதாரங்களும் இல்லை.

என் உம்மம்மா காலத்துக் காதலில் உறவு,உறவின் உறவு,அதனின் எச்சமும் இருந்தது.இன்று இக்தாராவின் ஒலி கூட என்னிடமில்லை. வெளிநாட்டு வாழ்வில் தொலைந்த ஒருவனுக்கு நான் மீராவாயுமில்லை.

என்னை அறியாமலேயே தூக்கம் போய்விட்டது. 'சைபர்' உலகின் விந்தையின் பெருவெளி இது.

காலையில் விடிந்ததும் விடியாததுமாக வட்சப்பை ஒன் பண்ணினேன்.அனுப்பிய மெசெஜ்கள் இரண்டுக்கும் அவன் பார்த்ததுக்கு அடையாளமாக நீல வர்ணத்தில் சரி விழுந்திருந்தது. •

புதுமதி



# மகிழ்ச்சி

**பு**னேயில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் விராட் கோலியும் கேதார் ஜாதவும் சதமடித்து இந்தியா வென்றது. இந்த வெற்றியில் அவர்களையும் விட மகிழ்ச்சியில் உள்ளார் புனேயைச் சேர்ந்த மகேஸ் ரணசுபி என்ற 25 வயது இளைஞர்.

இவர், புனே நகரத்தில் Ubhe Sports என்ற பெயரில் துடுப்பு மட்டைகள் விற்பனை, சீரமைத்துக் கொடுக்கும் கடையை நடத்தி வருகின்றார்.

இவரிடம் தான் கடந்த இரண்டு வருடங்களாக கேதார் ஜாதவ் தனது துடுப்பு மட்டைகளைச் சீரமைக்கக் கொடுத்து வருகின்றார். இவரது வேலையின் செய் நேர்த்தியில் மகிழ்ச்சி அடைந்த கேதார் ஜாதவ், டோனி மற்றும் வேறு சில வீரர்களுக்கும் இவரின் பெயரை சிபார்சு செய்துள்ளார்.

இதனால் இம்முறை போட்டிக்காக புனே நகருக்கு வீரர்கள் வந்தபோது ஒரேநேரத்தில் 12 துடுப்பு மட்டைகளைச் சீரமைத்துக் கொடுக்கும் வாய்ப்பைப் பெற்றார். இதில் டோனியின் 4 துடுப்பு மட்டைகளுடன் கோலி , ஜோ ரூட், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோரின் துடுப்பு மட்டைகளும் இருந்தன.

முன்னதாக மணிஸ் பாண்டே மற்றும் ரவீந்திர ஜடேஜா போன்றோரின் துடுப்பு மட்டைகளையும் இவர் சீரமைத்துக் கொடுத்துள்ளார். ஆனால், இதற்காக அவர் இந்திய வீரர்களிடம் கட்டணம் வாங்குவதில்லை.

நாட்டுக்காக விளையாடுவோருக்கு உதவி செய்ய தனக்கு கிடைத்த வாய்ப்பாகக் கருதும் இவர், தனது நாட்டுப்பற்றை வெளிப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக் கூறுகின்றார். ஆனாலும் இம்முறை இங்கிலாந்து வீரர்களிடமும் இவர் பணம் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார். எனினும் பென் ஸ்ரோக்ஸ் இரண்டாயிரம் ரூபாவை இவரது கையில் திணித்துள்ளார். அதேபோல் ஜோ ரூட் தனது கையுறைகள் இரண்டை அவருக்குப் பரிசாக அளித்துள்ளார்.

# முரண்பாடு




**உதை**பந்தாட்டம் தனிநபரைச் சார்ந்த விளையாட்டல்ல. சில சந்தர்ப்பங்களில் One Man Army ஆக வென்று கொடுத்தாலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது முடியாது. உண்மையில் அது வீரர்களின் கூட்டுமுயற்சியில் ஆடப்படும் விளையாட்டென்பது தெரிந்ததே.

பார்சிலோனா, ரியல்மட்ரிட் அணிகளில் பொருளாதார நலனைத் தாண்டி உலகின் முதற்தர வீரர்கள் இடம்பெற்று இருப்பதனாலேயே அந்த அணியில் விளையாடுவதற்கு முன்னணி வீரர்கள் விரும்புவதும் அவற்றைவிட்டு வேறு அணிகளுக்குப் போவதற்குப் பின்னடிப்பதும் உண்டு.

சமீபத்தில் கிறிஸ்டியானோ றொனால்டோவை சீன சுப்பர் லீக் போட்டிகளில் ஒப்பந்தம் செய்வதற்காக ஓர் அணி பெருந்தொகைப் பணம் கொடுக்க முன்வந்தபோதும் அதனை அவர் மறுத்ததற்கு இதுவே முக்கிய காரணம். முன்னணி வீரர்கள் இல்லாத அந்த அணியில் றொனால்டோ விளையாடினாலும் ரியல்மட்ரிட்டில் பிரகாசித்ததைப் போன்று அங்கு பிரகாசித்திருப்பாரா என்பது சந்தேகமே.

இது தெரிந்ததுதான் என்றாலும் இவ்வாறான கருத்தை மெஸ்ஸியை மையப்படுத்தி வெளிப்படையாகக் கூறியதற்காக பார்சிலோனா அணியின் அதிகாரி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளார்.


சில தினங்களுக்கு முன்னதாக அத்லெடிக் பில்பயோ அணிக்கெதிரான போட்டியில் பார்சிலோனா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதற்கு 78ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி அடித்த கோலே முக்கிய மாக இருந்தது. இது குறித்து பார்சிலோனா அணியின் அதிகாரி பெரே கிரேடா கோஸ் "இந்த வெற்றி மெஸ்ஸியால் மட்டும் தன்னிச்சையாக வந்த தில்லை. இனியஸ்டா அல்லது நெய்மர் இல்லாமல் அவரால் சிறப்பாக விளையாட முடியாது. அவர் அணியின் முக்கிய வீரர்தான். ஆனால் சுவாரஸ் மற்றும் ஜெரார்டு பிக் போன்ற வீரர்களும் உள்ளனர்" என்று கூறினார்.

இதனால் பார்ஸிலோனா அணி நிர்வாகம் கடும் அதிர்ச்சி அடைந்தது டன் அவரது கருத்து தனிப்பட்ட கருத்தெனவும் அவர் விரைவில் அப்பதவியில் இருந்து மாற்றம் செய்யப்படுவார் எனவும் அறிவித்தது.

சில மாதங்களுக்கு முன்னதாக மெஸ்ஸி பார்ஸிலோனாவை விட்டு வெளியேறுவார் என்று கருதப்பட்ட போது பார்சிலோனா அணியின் வேறொரு அதிகாரி "பார்சிலோனா மெஸ்ஸியை மட்டும் நம்பியிருக்கவில்லை" என்றார்.

ஆனால் அவருக்கெதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் இன்று மெஸ்ஸியின் ஒப்பந்தம் பார்ஸிலோனாவோடு நீடிக்கப்பட்ட பிற்பாடு அதே சாரப்படக் கருத்துக் கூறிய பெரே கிரேடா கோஸ் பதவியில் இருந்து மாற்றப்படுவார் என அறிவித்திருப்பது அதிர்ச்சியே.

# பாதுகாப்பு



**கி**ரிக்கெட் போட்டிகளில் தலைக்கவசம் அணிவதில் வீரர்கள் புது விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஐ.சி.சி. சில தினங்களுக்கு முன்னதாக அறிவித்தது.

அண்மைக்காலமாக கிரிக்கெட்டில் 'பவுண்சர்' பந்து பட்டு வீரர்கள் காயமடைவது அதிகரித்து வருகின்றது. இதன் உச்சமாக அவுஸ்திரேலிய வீரர் பில் ஹியூச் மரணத்தை தழுவியிருந்தார். எனவே வீரர்களின் நன்மை கருதி பாதுகாப்பான தலைக்கவசங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. இந்நிலையில் ஐ.சி.சியின் இந்த அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியதே.

இதன் பிரகாரம் ஐ.சி.சி., துடுப்பாட்ட வீரர்கள் அவசியம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதை வற்புறுத்தாவிடினும் அணியும் தலைக் கவசங்கள் குறிப்பிட்ட பிரித்தானிய தகுதிக்குட்பட்டதாக (BS7928:2013) அமைய வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வருகின்றது.

இந்த விதியை மீறும் துடுப்பாட்ட வீரர்கள் முதல் இரு தடவைகள் எச்சரிக்கப்படுவார்கள் எனவும் மூன்றாவது தடவை தவறு செய்தால் ஒரு போட்டி தடை விதிக்கப்படும் எனவும் ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

ஆனாலும் இந்த முடிவு வீரர்களின் நலன் சார்ந்து எடுக்கப்பட்ட முடிவாக அல்லாமல் இங்கிலாந்தின் வணிக நோக்கிற்காக எடுக்கப்பட்ட முடிவோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

ஏனெனில் வீரர்களின் நலன்தான் முக்கியம் என்றால் எல்லா வீரர்களும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என வலியுறுத்தி இருக்க வேண்டும். அவ்வாறு கூறாமல் இங்கிலாந்தில் உற்பத்தியாகும் தலைக் கவசத்தை மாத்திரமே அணிய வேண்டும் என்பதில் குறியாக இருப்பதுதான் இதனைச் சந்தேகப்பட வைக்கின்றது.

**தொகுப்பு : சி.விமலன்**

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 28.01.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.